Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 01 வெள்ளிக்கிழமை (17.08.2012) பக்கங்கள் 20 ஓசை - 320

10 ஆயிரம் இறக்குமதி 06



கூந்தல் கிராமம் 10



அன்னதானக் கந்தனின் கொடியேற்றம் 12



ஹக்கீமை எதிர்க்கிறோம் 14



கண்ணீரில் அரசியல் வேண்டாம் 17



# இலங்கையின் அமைதிக்கு உதவுவதை இந்தியா கைவிடப் போவதில்லை



(கொழும்பு)

இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதன் மூலம் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை ஏற்படுத்துவதற்கும் தேவையான பங்களிப்பைத் தொடர்ந்து வழங்குவதற்கு இந்தியா தயாராக இருப்பதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர அசோக் கே.காந்தா தெரிவித்தார்.

இந்திய சுதந்திர தினத்தையொட்டி அவர் கொழும்பில் வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைத் துரிதமாகச் செயல்படுத்துமாறு இலங்கை அரசை இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ள அதேவேளை நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கான இந்தியாவின் பங்களிப்புத் தொடரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைத் துரிதமாகச் செயற்படுத்துவதானது தேசிய நல்லிணக்கத்தை மீளக்

19 ஆம் பக்கம் பார்க்க

## சர்வமத யாத்திரை இன்று மன்னாரில்

மன்னாரின் தற்போதைய நிலையினை கண்டறிந்து இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தும் வகையில் சர்வமதக் குழுவினர் இன்று வெளளிக்கிழமை மன்னாருக்கு சர்வ மதயாத்திரை செய்கின்றனர்.

இவ்வாறு மன்னாருக்கு விஜயம் செய்யும் குழுவினர், மன்னார் மாவட்டத்தில் வாழும், முஸ்லிம், இந்து, கததோலிக்க, பௌத்த மதத்தினரை தனித்தனியாக சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர். அதேவேளை காலை 10 மணிக்கு மன்னார் மூர்வீதி ஜும்ஆ பள்ளிவாசலுக்கு செல்லும் இக்குழுவினர் முஸ்லிம் மக்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தவுள்ளனர்.

## கிழக்கில் கூட்டணி ஆட்சி கூட்டமைப்பின் பிந்திய நம்பிக்கை

### ஐ.தே.க. உடன் கைகோர்க்கத் திட்டம்

கிழக்கு மாகாணசபையில் ஐ.தே.க.வுடன் இணைந்து ஆட்சியமைக்க முடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். திருகோணமலையில் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன், நடத்திய கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். கிழக்கு மாகாண சபையில் 35 ஆசனங்கள் உள்ளன. நாம் பெரும்பான்மையைப் பெற வேண்டுமானால், 17 ஆசனங்களை வெல்லவேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 ஆசனங்களையும், திருகோணமலையில் 4 ஆச னங்களையும், அம்பாறையில் 2 ஆசனங்களையும் கைப்பற்ற முடியும் என்று நாம் நம்புகிறோம். இந்த 11 ஆசனங்களுடன் மேலும் இரண்டு போனஸ

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழில் இந்திய பிரஜைகள் 53 பேர் கைது

யாழ்.குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த இந்தியப் பிரஜைகளை இலக்கு வைத்துப் பொலிஸார் நடாத்திய தேடுதல் வேட்டையின் போது 53 இந்தியர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

வீசா இன்றி யாழ். குடாநாட்டில் தங்கியிருந்த 53 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வந்த நிலையில் கைது செய்யப்பட்டதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது. கைதுசெய்யப்பட்ட இந்தியப் பிரஜைகளில் உணவக மற்றும் ஆடை விற்பனை நிலைய ஊழியர்கள் மற்றும் சோதிடர்கள் அடங்குவதாக குடிவரவு குடியகல்வு

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். நகரில் தீ விபத்து கருகியது வியாபார நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ்நகர் கே.கே. எஸ்.வீதியில் அமைந்திருந்த பிரபல பல்பொருள் வியாபார நிலையம் ஒன்று நேற்று முற்பகல் திடீரென தீப்பிடித்து முற்றாக எரிந்து அழிந்துள்ளது.

யாழ். கே.கே.எஸ். வீதியில் முட்டாஸ் கடைச் சந்திக்கு சமீபமாகவுள்ள திருச்செந்தூரன் பல்பொருள் வாணிபக் கடையே இவ்வாறு எரிந்து அளிந்தது. இந்தக் கடைத் தொகுதியின் மேல் மாடியில் சாமிப்பட விளக்கில் இருந்தே முதலில் தீப்பிடித்து அது கீழ்ப் பகுதிக்குப் பரவியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவத்தை அடுத்து யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் படைப் பிரிவினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதினை அடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த

19 ஆம் பக்கம் பார்க்க


## மூன்றாம் தரப்பாக தென்னாபிரிக்கா அடியோடு நிராகரிக்கிறது அரசு

இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்கான முயற்சியில் மூன்றாம் தரப்பாகச் செயற்படுவதற்கு முன்வந்த தென்னாபிரிக்காவின் முயற்சிகளை அரசு அடியோடு நிரர்கரித்துவிட்டதாகக் கொழும்பு ஆங்கில நாளேடு தகவல் வெளியிட்டிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீண்டும் பேச்சு மேசைக்கு கொண்டு வருவதற்கு, மூன்றாவது தரப்பின் நடுநிலையை அரசாங்கம் ஒருபோதும் ஏற்காது என்று தெரியவந்துள்ளதாக கொழும்பு ஆங்கில நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

போருக்குப் பிந்திய நல்லிணக்க முயற்சிகள் மற்றும் அரசியல் தீர்வுக்கு, தமது அனுபவங்களின் அடிப்படையில் இலங்கை அரசுக்கு உதவத் தயாராக இருப்பதாக, கொழும்பு வந்த தென்னாபிரிக்காவின் அனைத்துலக உறவுகளுக்கான பிரதி அமைச்சர் எப்ராகிம் தலைமையிலான குழு அரசதரப்பு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கூறியிருந்தது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள், உள்ளூர் அரசியல் முயற்சிகளில் வெளிநாட்டுச் சக்திகளின் தலையீடு தேவையில்லை என்று கூறியுள்ளன. ஐரோப்பா மற்றும் அமெரிக்காவை தளமாகக் கொண்டுள்ள விடுதலைப் புலிகளின் ஆசியுடன் தான் தென்னா பிரிக்கா உதவ முன்வந்துள்ளதாக நம்பப்படுவதாகவும் கொழும்பு ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.



பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் புடைசூழ தேர் ஏறி வீதிவலம் வரும் நல்லைக் கந்தன். (படஉதவி - த.மதீபன்)


## கைவேலியில் நேற்று மீள்குடியமர்வு

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மேற்கு கிராமசேவகர் பிரிவில் உள்ள முதலாம் வட்டாரம் மற்றும் கைவேலி கிராமங்களில் 342 குடும்பங்கள் நேற்று வியா ழக்கிழமை மீள்குடியேற்றப்பட் டன மீள்குடியேற்றப்பட்ட 1093 பேரில் 520 ஆண்களும் 573 பெண்களும் அடங்குகின்றனர்.

மூன்றரை வருடமாக செட்டிகுளம் நலன்புரி நிலையத்தில் வசித்து வந்த இவர்கள் மீள்குடியேற்றுவதற்காக அழைத்துவரப்பட்டு புதுக்குடியிருப்பு கைவேலி கணேசா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டனர். மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரகோனினால் நேற்று இவர்கள் மீள்குடியேற்றப்பட்டனர்.

இதன்போது, இரண்டு வாரங்களுக்கான உலர் உணவு வகைகளும் மரக்கன்றுகளும் இதன்போது வழங்கப்பட்டன. இந்நிகழ வில், சிரேஷ்ட உதவி செயலாளர் திருமதி சுகந்தி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரட்னம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# பாடசாலைகளின் அடிப்படைத் தேவைகளை துரித கதியில் பூர்த்தி செய்து வருகிறோம்



(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் வகையில் பாடசாலைகளின் அடிப்படைத் தேவைகளை துரிதகதியில் பூர்த்திசெய்து வருகின்றோம் என ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

செம்பியன்பற்று வடக்கு றோ.க.த.க பாடசாலையின் புதிய வகுப்பறைக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இடம்பெயர்ந்து மீள்குடியமரும் மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் மக்களது அடிப்படைத் தேவைகளையும் வாழ்வாதார தேவைகளையும் விரைவாக நாம் நிறைவேற்றி வருகின்றோம் என்றும் தெரிவித்தார்.

எமது முயற்சிக்கு மேலும் வலுவூட்டுகின்ற வகையில் இடம்பெயர்ந்த மக்களின் நலனில் அக்கறை கொண்ட நிறுவனமாக சேவாலங்கா திகழ்கின்றது. வடபகுதியில் சேதமடைந்த பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வதற்கான அனுமதி மட்டுமே சேவாலங்கா நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பெரு முயற்சியின் காரணத்தாலேயே பாடசாலை கட்டடங்களை முழுமையாக நிர்மாணிப்பதற்கான அனுமதி குறித்த நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்றது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மாணவர்கள் தமது உயர்தரக் கல்வியைத் தொடர்வதற்கு பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொண்டு வருகின்றனர். ஆகவே இவ் இடர்பாடுகளை நிவர்த்தி செய்து உயர்தரக் கல்வியை இப் பாடசாலைகளிலேயே கற்பதற்கான நடவடிக்கைகள் எம்மால் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

சேவாலங்கா நிறுவன நிதியுதவியுடன் 35 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள வகுப்பறைக் கட்டடத்திற்கான அடிக்கல்லினை நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகள் நாட்டி வைத்தனர். இந் நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் வடமராட்சிப் பிரதேச அமைப்பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்), சேவாலங்கா திட்டப் பணிப்பாளர் கண்ணன், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் திருலிங்கநாதன், கோட்டக் கல்விப் பணிப்பாளர், சேவாலங்கா நிறுவன பொறியியலாளர், பங்குத்தந்தை ஜெயரத்தினம் மற்றும் பாடசாலை சமூகத்தினர், பெற்றோர், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## 'வல்லை வெளி' கவிதை நூல் அறிமுகம்

(வடமராட்சி)

அல்வாயூர் சித்திரா சின்னராஜன் எழுதிய வல்லை வெளி என்னும் கவிதைத் தொகுப்பு நூல் அறிமுகவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலய மண்டபத்தில் எழுத்தாளரும், கலாபூஷணமுமாகிய தெணியான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் வெளியீட்டுரையினை யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ந.கலாமணி நிகழ்த்தவுள்ளார்.

இந் நூலின் முதற்பிரதியினை யாழ்ப்பாணப் புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனப் (ஐ.ஓ.எம்) பொறுப்பதிகாரி தேவதாஸ் யூறிசன் ஜெனராஜ் பெற்றுக்கொள்ளவுள்ளார். (1[illegible])

# திருவிழா சைக்கிள் பாதுகாப்பில் விதிகளை மீறிய கட்டணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)


நல்லூர் உற்சவ கால சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு 20 ரூபா மீண்டும் அறவிடப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபைக்கு அருகில் பருத்தித்துறை வீதியில் உள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் நல்லூர் முருகனின் தேர்த்திருவிழாவான நேற்றைய தினம் இக்கூடுதலான கட்டணம் பலரிடம் அறவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

10 ரூபா நோட்டாகக் கொடுத்தவர்களிடம் 10 ரூபாவும், 20 ரூபா கொடுத் தவர்களிடம் 20 ரூபா கட்டணமும் ஒரு மோட்டார் சைக்கிளுக்கு அறவீடு செய்யப்பட்டுள்ளது. 10 ரூபா தானே கட்டணம் எனக் கேட்டவர்களுக்கு இல்லை 20 ரூபா தான் என வாசலில் நின்று கட்டணம் பெற்றுக்கொண்டவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சைக்கிள் ஒன்றுக்கு 5 ரூபாவும், மோட்டார் சைக்கிளுக்கு 10 ரூபாவுமே பாதுகாப்பு நிலையங்கள் கட்டணமாகப் பெ[illegible]க் கொள்ள வேண்டும் என [illegible] தினங்களுக்கு முன்னர் மேயரினால் தெரிவிக்கப்பட்ட நிலையில், மாநகரசபைக்கு அருகாமையில் உள்ள இந்நிலையம் 20 ரூபா ஒரு மோட்டார் சைக்கிளுக்கு அறவிடப்பட்டது பற்றிப் பல வாகன உரிமையாளர்களினால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் மாணிக்கம் சபாநாதன்

**தலைவர் கிளி. மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் இணையம்**

பளை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சிக்கு கிளி. பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இணையத்தின் தலைவராக இருந்து அரும்பாடுபட்டு உழைத்த அமரர் மாணிக்கம் சபாநாதன் அவர்களின் கூட்டுறவுச் சேவையினால் கிளி. பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இணையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று கூட்டுறவு அமைப்புக்களுக்கும், அதன் அங்கத்தவர்களுக்கும், பணியாளர்களுக்கும் அளப்பரிய சேவையாற்றிய அன்னார் எமை

விட்டுப் பிரிந்தாலும் அவரது சேவைகளை கூட்டுறவாளர் நாம் என்றும் மறந்துவிட முடியாது. அன்னாரின் பிரிவுத் துயரால் கண்ணீர் சிந்தும் அவரது குடும்பத்தாருக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் கூட்டுறவாளர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பணிப்பாளர்கள், தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள், பளை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பளை.**

# வீதியில் குறுக்கே விழுந்த புளியமரம்



(வடமராட்சி)

நெல்லியடி விக்னேஸ்வராக் கல்லூரி வீதியின் அருகில் நின்ற சுமா[illegible] 100 வருடங்கள் பழமையான புளியமரம் முறிந்து [illegible]திக்கு குறுக்காக விழுந்து கிடக்கின்றது.

இதன்காரணமாக மின்சாரம், தொலைபேசி வயர்கள் அறுந்த காரணத்தினால் அனைத்துச் சேவைகளும் துண்டிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில், நேற்று இரவு 8.15 மணியளவில் குறித்த வீதியால் பயணித்த ஓட்டோ ஒன்று குறித்த மரத்தில் மோதியதால் சாரதி படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (18)

## சந்நிதியில் இன்று

(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் கொடியேற்ற நிகழ்வு இன்று இரவு 10.30 மணிக்கு இடம்பெறும். இதனை முன்னிட்டு இன்று சந்நிதியான் முற்பகல் ஆச்சிரமத்தில் முற்பகல் 10.30 மணிக்கு வ.குமாரசாமி ஐயரின் 'குருவாய் அருள்வாய் குகனே' எனும் தலைப்பில் ஆன்மீகச் சொற்பொழிவு இடம்பெறும்.

## தவறிவீழ்ந்து படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் நேற்று முற்பகல் வீடு ஒன்றின் நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்த வயோதிபர் ஒருவர் மேல்தளத்தில் இருந்து தவறிவீழ்ந்து படுகாயமடைந்துள்ளார்.

மானிப்பாயைச் சேர்ந்த சின்னத்தம்பி (வயது-58) என்பவரே இவ்வாறு தவறி வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார்.

இவர் நேற்று நண்பகல் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (பா)

## முதியோர் சங்க பொதுக்கூட்டம்

(கோப்பாய்)

கோப்பாய் வடக்கு, முதியோர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை காலை 10.00 மணிக்கு கோப்பாய் வடக்கு, மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம் பெறும். இதில் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் ந.கனகலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

## காசி பூதராயர் ஆலய பொதுக் கூட்டம்

ஆதி மயிலிட்டி காசி பூதராயர் ஆலய வழிபடுவோர் சபையின் பொதுக்கூட்டம் நாளை மாலை 4.00 மணிக்கு சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் புதிய நிர்வாக சபைத் தெரிவு, திருவிழா சம்பந்தமான விடயங்கள் ஆகியவை கலந்துரையாடப்படவுள்ளதால் ஆலய அடியார்கள் அனைவரையும் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# மீள்குடியமர்ந்த மக்களுக்கு அரியாலையில் அபிவிருத்தி



(யாழ்ப்பாணம்)

உதயபுரம், அரியாலை தென்கிழக்கு கிராமங்களுக்கான மின்னிணைப்பு, உதயபுரம் கடற்கரை வீதி ஆகிய வேலைத் திட்டங்கள் பொதுமக்களின் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்டன.

இது தொடர்பான கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நல்லூர் பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச பொறுப்பாளருமான அம்பலம் இரவீந்திரதாஸன் தலைமையில் இடம் பெற்றது. இதன்போது கருத்துத் தெரித்த இரவீந்திரதாசன், வடக்கின் வசந்தம் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பெருமுயற்சியின் பயனாக யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக உதயபுரம், பூம்புகார் மற்றும் அரியாலை கிழக்கு பகுதிகளில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான அபிவிருத்தி வேலைத திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்துத் தன்னிடம் தெரிவிக்கும் பட்சத்தில் அவ் விடயங்கள் குறித்து அமைச்சர் அவர்களிடம் தெரியப்படுத்துவதன் ஊடாக பல உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் மேலும தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஜே-89 கிராம அலுவலர் ம.ஞானேந்திரன், உதயபுரம் கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் ஜே.கொன்னரசன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர், பொதுமக்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

## மோட்டார் சைக்கிளை உரிமை கோரவும்

(யாழ்ப்பாணம்)

NP XC 1535 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளினை உரியவர்கள் உரிமை கோருமாறு யாழ்.நீதிவான் நீதிமன்ற பதிவாளர் துளசிகன் அறிவித்துள்ளார்.

மேற்படி மோட்டார் சைக்கிள யாழ்.பொலிஸாரினால் யாழ். நீதிவான் நீதிம்ன்றில் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

குறித்த மோட்டார் சைக்கிளின் ஆவணங்களை 6 மாத காலத்திற்குள் யாழ். நீதிவான் நீதிமன்ற பதிவாளரிடம் சமரபித்து பெற்றுக கொள்ளுமாறும் அவ்வாறு பெற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் மேற்படி மோட்டார் சைக்கிள் அர்சசொத்துரிமை எனக் கருதப்படுமெனவும் யாழ். நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

## மண்ணெண்ணெய் விநியோகம்

(வரணி)

வடவரணி E8 பலநோக்கு கூட்டுறவுச்சங்ககிளையில் மின்சார வசதிகளற்ற மக்களுக்கான மண்ணெண்ணெய் விநியோகம் கடந்த வாரம் முதல் வழங்கப்பட்டுவருகிறது.

மூன்று மாத மண்ணெண்ணெய் முத்திரை ரூபா அறுநூறு முத்திரை பெறுமதியான மண்ணெண்ணெய் ஒரேதடவையில் வழங்கப்பட்டுவருகிறது. பயனாளிகள் 19ஆம் திகதிக்கு முன்பு முத்திரைகளை சமர்ப்பித்து மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ளுமாறு கிளை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

(150)

## மணவாளக்கோல விழா

(வரணி)

வடக்குவரணி அருள்மிகு சிமிழ் அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி வியாழக்கிழமை மணவாளக்கோல பெருவிழா மற்றும் சங்காபிஷேகம், நடைபெற்று அன்னதானம் இடம பெறும் என ஆலய நிர்வாக சபைத்தலைவர் க.வீரகத்திப்பிள்ளை அறிவித்துள்ளார்.

(150)



## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று...

(நல்லூர்)

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் தீர்த்தத்திருவிழாவான இன்று கலாநிதி என்.வி.எம்.நவரத்தினத்தின் பாட்டுக்கச்சேரி இடம் பெறவுள்ளது.

இதில் பரந்தாமன் நவரத்தினம் உடன்பாடவுள்ளதுடன் அணிசேர் கலைஞர்களாக வயலின் எஸ்.கோபிதாஸ், மிருதங்கம் கே.கண்ணதாஸன், முகர்சிங் என்.சதீஸ்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் ஆன்மிக சிந்தனையும் சமய சொற்பொழிவும் கலைநிகழ்வுகளில் தீர்த்தத்திருவிழாவான இன்று காலை "மாங்கனி ஞானம்" என்னும் விடயம் பற்றி ஜெயகோபாலசாமி சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். தொடாந்து நல்லூர் பஜனைக் குழுவின் பஜனை இடம் பெறவுள்ளது.

மாலை சுந்தரகாண்டம் என்னும் விடயம் பற்றி சு.விஸ்வநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

கலைநிகழ்வுகளில் பெரியவிளான் வடகேசரிப் பிள்ளையார், மல்லாகம் நீலியம்பனை பிள்ளையார் ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

# நல்லூர் முருகனுக்கு இன்று தீர்த்தோற்சவம்



## ஆறுதலை அருள்வான் ஆனைமுகன் சோதரன்!

ஏறு மயிலேறி டுவான்: முருகன்
இட ரனைத்தும் களைந்திடுவான்: அருகில்
ஊறு பல செய்வோரின்: அவர்
உளந்திருந்த வைத்திடுவான்: மிகு
ஆறு தலை அருள்பவனே: மூத்த
ஆனைமுகன் சோதரனே: பக்தர்
கூறுமது வேண்டுதலை: என்றும்
குறைநீக்கி ஈந்திடையா!

-பிரியா பரந்தாமன் கைவேலி-

## தீர்த்தமாடினால் மறுபிறவி இல்லை!

இன்று நல்லூரானுக்கு தீர்த்தோற்சவம்.
மூர்த்தி தலம் தீர்த்தச் சிறப்புடையவனே
உன் தலத்தில் தீர்த்தமாடிச் செபிப்பவர்க்கு
மறு பிறப்பு இல்லை என்பர் அல்லவா!

-க.கனகராசா நல்லூா-

## தீராத வினை தீரும்!

தீராத வினை தீர்க்கும் தீர்த்தோற்சவ நாளில் - வேலனை
வேண்டி வந்தோர் வேதனைகள் வேரோடு வேகும்
மூவுலக இன்பங்கள் எனக்கேதும் வேண்டாம் - முருகா
முப்பொழுதும் உன்னடியில் முடமானாலே போதும்.


-எஸ்.வி.பிரசாத்-

## "வாதிட வா முருகா"

போர் நடந்தபோதும், பிறகும் எங்கள்
பெறுமதி, சொந்தம் தெரிந்தது முருகா!
பெற்ற பிள்ளை கொடுத்த வீடு, காணியாவும்
பாதுகாத்து அந்த வீட்டில் வாழ்ந்தபோதும்,
ஆர் என்றாலும் வாங்கோ விற்பனைக்கு என
அடிக்கடி சொந்தமற்ற அனைவருக்கும் சொல்ல,
அறிவும் போய், உறவும்போய் அறமும் போய்
அடியோடு எமையெழுப்ப மறம் முனைந்தது,
நேர் ஆக நின்று ஆட்சிபுரியும் நல்லூர் முருகா,
நீ எனக்காக வாதிட வரவேண்டும்: வந்து
தேர் ஆக நின்று நீதி, நெறி யாவும் செப்பி
தோதாகக் குடியிருக்க வீடு தரவேண்டும்
மார் தட்டவில்லை, மமதையாக பேசவில்லை,
மனிதமலிதப் பேசுகின்றேன் முருகா!
மரணம், துன்பம், வேதனை மறந்து அடியோடு
மாற்றி வெளியேற்ற நீ விடுவாயோ முருகா?

-கே.எஸ்.சிவஞானராஜா கொக்குவில்-





மடுமாதா ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற வருடாந்த உற்சவத்தில் மாதா திருச்சொருப பவனி வருவதையும்,

அலைமோதும் இலட்சக்கணக்கான பக்தர்களையும் காணலாம்.

எல்லாருக்குமே உங்கள் காதைக் கொடுக்கலாம் ஒரு சிலரிடம மட்டுமே வாயைக் கொடுக்கலாம். - பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள்!

நல்லூர்த் தேர்த்திருவிழா நேற்று சிறப்பாக நடந்து முடிந்தது. தள்ளுண்டேன் நெருக்குண்டேன் எற்றுண்டேன் என்றெல்லாம் ஔவை சொல்வது போல்தான் ஒவ்வொருவரும் அனுபவித்திருப்பர். ஆண்டுக்காண்டு நல்லூர்க் கந்தனிடம் வரும் பக்தர்கள் தொகை அதிகரித்து வருவதையே காணமுடிகிறது. வெளிநாடுகளிலிருந்து இதற்கென்றே வந்திருந்தவர்கள் தொகையும் அதிகமாகவே இருந்தது.

வந்திருந்தவர்கள் நல்லூர் மக்கள் வெள்ளத்தை மட்டுமல்லாமல், யாழ்ப்பாணத்தையும் வடக்கின் பல்வேறு பகுதிகளையும் பார்த்திருப்பார்கள். யாழ்ப்பாண வீதிகளில் இரவுநேரங்களிலும் சுதந்திரமாக உலவித்திரியும் சனநடமாட்டத்தைப் பார்த்திருப்பார்கள். வந்திறங்கிய கட்டுநாயக்கா விமானநிலையத்தைப் பார்த்திருப்பார்கள். கொழும்பைப் பார்த்திருப்பார்கள். கொழும்பிலிருந்து சொகுசு பஸ்களில் – ஓமந்தையில் மட்டும் பாஸ்போட்டைக காட்டிவிட்டு – வடக்கே அவரவர் வீடுகளுக்கு வந்துசேர்ந்திருப்பார்கள்.

வெளிநாடுகளில் அவர்கள் கேள்விப்பட்டதுபோல் வடக்கு அத்தனை பயங்கரங்கள் நிறைந்த பூமியாகவா இன்னும் இருக்கிறது; இங்குள்ளவர்கள் இராணுவத்தினரின் சப்பாத்துகளின் கீழ் அரைபட்டுக்கொண்டா இருக்கிறார்கள் என்பதையெல்லாம் அவதானித்திருப்பார்கள். அங்குபோய் நெஞ்சைத்தொட்டு உண்மையைப் பேசுவார்கள் என எதிர்பார்க்கலாம். இவர்கள் சொல்லும் உண்மைகள் அங்குள்ளவர்களின் பயங்களைப் படிப்படியாகப் போக்கும். அங்குள்ள ஒருசிலரின் தேவைக்காக வலிந்து புனையப்படும் பிரசாரங்களிலுள்ள ஏமாற்றும் வெளிக்கும்.

சிலசமயம், தேர்த்திருவிழா முடிந்து திரும்பிப் போகிறவர்கள், அங்கு போய் இங்கு பார்த்த உண்மைநிலைவரங்களை உள்ளபடியே சொன்னால் தன்னை இலங்கை அரசின் அடிவருடியாகச் சித்தரித்து துரோகப்பட்டம் சூட்டிவிடுவார்களோ என்ற பயத்துடன் வாய்மூடியோ அல்லது கூட்டமைப்புக்காரரின் பாணியில் "அங்கே அரசு எங்களைக் கொல்லத் துரத்திக் கொண்டிருக்கு... மக்கள் எல்லோரும் பயங்கர அச்சத்தின் நடுவேதான் வாழ்கிறார்கள்" என்று சோடித்தோ தமிழ்த்தேசிய ஜோதியில் ஐகக்கியமாகும் நிலைமையும் தற்போது இருக்கத்தான் செய்கிறது.

ஆனால், எப்போதுமே தமிழுணர்வாளர்களாகக் காட்டிக் கொள்ள வேண்டுமென்றால், நெஞ்சறிந்து பொய்சொல்லிக் கொண்டிருக்கத்தான் வேணும் என்பதை எல்லோரும் எப்போதும் பின்பற்றிக்கொண்டிருக்கப் போவதில்லை. வந்துபோகிறவர்கள் அதிகரிக்க அதிகரிக்க உண்மைநிலையை வெகுகாலத்துக்கு மறைத்துப் பொங்கவைக்க முடியாமல் போகும்.

அங்கு நிதி வசூலித்து ருசிகண்ட சிலர் இப்போதும் எதையாவது சொல்லி நிதி வசூலித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களால் இங்கு மக்கள் நிம்மதியாக வாழ்கிறார்கள் என்ற செய்தி உருவாவதைத் தாங்கிக்கொள்ள முடியாது. அதுபோல், கோபமும் ஆவேசமும் மக்களிடம் நுரைத்தபடியே இருக்க வேண்டுமானால், அவலங்கள் பற்றிய செய்திகளும் தொடர்ந்தபடியே இருக்கவேண்டும்; அப்போதுதான் தேர்தல்களையும் ஜெயிக்க முடியும் என்று கண்டிருக்கும் இங்குள்ள அரசியல்வாதிகளுக்கும இங்கு நிம்மதியான சூழல் உருவாவதை ஜீரணித்துக்கொள்ள முடியாது.

எனவே, இங்கு அடக்குமுறைக்குள் மக்கள் மூச்சுமுட்டுகிறார்கள்; சீரழிவுகள் தலைவிரித்தாடுகின்றன; எங்கும் இராணுவமயம் என்று மிகைப்படுத்தப்பட்ட பயமூட்டல்களையே அரசியலாய்ச் செய்துவருகிறார்கள். இவற்றை மாற்றவேண்டிய பொறுப்போ, மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவ வேண்டிய பொறுப்போ உங்களுக்கில்லையா? அதை நோக்கி என்ன துரும்பை எடுத்துப் போடுகிறீர்கள்? என்று எழும் கேள்விகளை அமுக்க, ஆவேசமூட்டல் வசனங்களைப் பேசிவருகிறார்கள்.

வாக்குகளைக் குறிவைத்த இந்த அரசியலாளர்களும் மக்களதுன்பங்களைக் குறைக்க எதுவும் செய்ததில்லை; பணவசதிகளோடிருக்கும் புலம்பெயர் தமிழர்களும் இங்கு வதங்கும் மக்களுக்கு உதவ வராமல் தப்பிக் கொள்வதற்கான பேச்சுக்களையே அங்கு பேசிக்கொண்டிருக்கிறார்கள். நீண்ட காலத்துக்கு இப்படி ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது.

- ஆசிரியர்

# நுரைச்சோலை அனல்மின் நிலையம் தரங்குறைவானதாக நிர்மாணம்

## மின்சார சபைத்தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

தரக் குறைவான பொருட்களைப் பயன்படுத்தி நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை நிர்மாணித்த சீன நிறுவனத்திற்கு தரமான பொருட்களைப் பயன்படுத்தி குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொறுப்பு உள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் பேராசிரியர் விமலதர்ம அபேவிக்ரம தெரிவித்துள்ளார்.

"மின் நிலையத்தின் நிர்மாணப் பணிகளின்போது, அவற்றில் தரக்குறைவான பொருட்கள் பயன்படுத்தப்படலாம் என்ற சந்தேகம் தற்போது நிரூபணமாகியுள்ளது. சில நேரங்களில் நீர் விநியோகக் குழாய்கூட வெடிக்கிறது. சில நேரம் வயர்களின் மூலம் புகை வெளியாகிறது" என பி.பி.சி. செய்திச் சேவைக்கு வழங்கியுள்ள செவ்வியில் அவர் தெரிவித்துள்ளார்.

மின் உற்பத்தி உபகரணங்கள் அதிகளவில் சூடேறுவதாகவும், இவை குளிர்ச்சியடைய நீண்ட நேரம் எடுப்பதாகவும் இது மிகவும் பாரதூரமான பிரச்சினை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

"அனல் மின் நிலையத்தில் பிரச்சினைகள் இருக்கின்றது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அதிபர் ஆசிரியர் சங்கங்கள் போராட்டத்திற்கு முனைப்பு

(கொழும்பு)

பாடசாலையின் மூன்றாவது தவணையில் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்க ஆசிரியர், அதிபர் சங்கங்களின் ஒன்பது பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளனர்.

ஊதிய முரண்பாட்டைத் தீர்க்க வேண்டும் என்பது உள்ளிட்ட கல்வி அமைச்சுக்கு முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் குறித்து அரசாங்கம் உரிய பதிலை வழங்கவில்லையெனக் கூறும் இந்தச் சங்கங்கள், மாணவர்களின் கல்விப் பணிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் தமது தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாக தெரிவித்துள்ளன.

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

இலங்கை ஆசிரியர் சங்கம், அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம், அகில இலங்கை தேசிய கல்வி சேவை சங்கம், சுயாதீன கல்வித்துறைச் சங்கம், பொது கல்வி ஊழியர் சங்கம், தேசிய அதிபர் சங்கம் உள்ளிட்ட ஒன்பது சங்கங்கள் 13 கோரிக்கைகள் அடங்கிய மனுவை கல்வி அமைச்சிடம் முன்வைத்துள்ளது.

கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் ஊழியர் சம்பள முறைமையை நடைமுறைப்படுத்த வேண்டும், ஆசிரியர், அதிபர் சட்டத்தில் திருத்தம் செய்ய முன்னர், ஆசிரியர், அதிபர் சங்கங்களுடன் பேச்சு நடத்த வேண்டும், தேசிய ஆசிரியர் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் இந்த மனுவில் முன்வைக்கப்பட்டுள்ளன.

# சம்பள உயர்வு வழங்குமாறு தபால் ஊழியர்கள் கோரிக்கை

(கொழும்பு)

முன்வைக்கப்படவுள்ள அடுத்த நிதியாண்டுக் கான வரவு - செலவுத் திட்டத்தில் தமக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என தபால் ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து நிதி அமைச்சின் செயலாளரை தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென இலங்கை தபால் சேவை சங்கத்தின் தலைவர் ஜயந்த விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

சம்பள உயர்வு குறித்து பேச்சுவார்த்தை நடத்த சந்தர்ப்பம் வழங்குமாறு நிதி அமைச்சின் செயலாளரிடம் நேற்றுமுன்தினம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்ததாக அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து எதிர்வரும் நாட்களில் பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்த்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தபால் திணைக்களத்தில் பணிபுரியம் அதன் சேவையாளர்களுக்கு பல வருடங்களாகக் காணப்படும் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக் கப்பெறவில்லை என இலங்கை தபால் சேவை சங்கத்தின் தலைவர் ஜயந்த விஜேசிங்க தெரிவித்தார்.

# பங்குப்பரிவர்த்தனை குழப்பம் அரசாங்கமே முழுப்பொறுப்பு

(கொழும்பு)

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை குழப்ப நிலைமைகளுக்கு அரசாங்கமே பொறுப்புச் சொல்ல வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமைகளுக்கு அரசாங்கமே பொறுப்பு என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் இடம்பெற்று வரும் குழப்ப நிலைமைகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்திய காரணத்தினாலேயே, பங்குப் பரிவர்த்தனையின் தலைவர் திலக் கருணாரட்ன பதவியை துறக்க நேரிட்டுள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். பங்குப் பரிவர்த்தனையில் இடம்பெற்று வரும் ஊழல்கள் தொடர்பில் உரிய முறையில் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாரில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் பங்குச் சந்தையின் நம்பிக்கைத் தன்மையை உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் கட்டியெழுப்ப முடியாது என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

# யாழ்.நுழைவாயிலில் புதிய வரவேற்பு வளைவு

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபையினால் யாழ் நுழை வாயிலில் வரவேற்பு வளைவு ஒன்று கட்டப்படவுள்ளது. சிறந்த முறையில் நவீன வடிவில் அழகாக பாாப்பவர்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் இவ்வளைவு அமைக்கப்படவுள்ளதா கத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபை யினால் ஒரு மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. வளைவுக்கான கட்டட அனுமதி கிடைக்கப் பெற்றதும். இதன் வேலைகள் ஆரம் பிக்கப்படவுள்ளது.

போத்தலில் நன்நீர் அடைந்து விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றும் பிரதேச சபையினால் தொடங்கப்படவுள்ளது. கோண்டாவிலில் உள்ள பிரதேச சபையினால் நடாத்தப்படும் மூலிகைத் தோட்டத்திலுள்ள கிணற்றிலிருந்து பெற்றுக் கொள்ளும் நீரைப் பயன்படுத்தி இப் போத்தல் தண்ணீர் தயாரிக்கப்படவுள்ளது,

நீரின் மாதிரிகள் கொழும்புக்கு ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதன் முடிவுகள் கிடைக்கப் பெற்றதும் வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

மற்றும், நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட உணவு உற்பத்தி மற்றும் பாவனைப் பொருட்கள் தயாரிப்போரின் உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்காக திருநெல்வேலி சந்தைப்பகுதியில் விற்பனை நிலையம் ஒன்றும் அமைக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# நமது பெருமிதப் பெருவிழாவான நல்லூர் கந்தன் திருத்தேர்விழா

- நீர்வை. தி.மயூரகிரி சர்மா

### தேர் அறிமுகம்

வடமொழியில் இரதம் என்று சொல்லப்படுவதே தமிழில் தேர் என்று வழங்குகிறது. இது சிறப்பாக அரசர்களின் ஊர்தியைக் குறித்து நிற்கிறது. ஆனால் தமிழ் இலக்கிய வழக்கில் கானல் நீரை, 'பேய்த் தேர்'என்றும் ரோகிணி நட்சத்திரத்தை சூடாமணி நிகண்டு 'தேர்' என்ற வினைச் சொல்லாலும் குறிப்பிடக் காணலாம்.

எனினும் இரதம் என்ற சொல் லாட்சி பொலிவும் விரைந்த செயலும் உள்ள அனைத்தையும் குறிக்கும் சொல்லாக உள்ளது. வானில் பறக்கும் விமானங்களை ஆகாச ரதம் என்றும் மனவியல் கற்பனைத் திறனை மனோரதம் என்றும் அறிவாற்றலை ஞானரதம் என்றும் சிறந்த தர்க்கத்தை வாதரதம் என்றும் கூறுவர். எருதுகளால் இழுக்கப்படுவதை "கோரதம்" என்றும் குறிப்பிடுவர். இதனை கொல்லா வண்டி என்றும் கூறுவர். ஸ்ரீமந் நாராயணன் எழுந்தருளும் கருடத்தாழ்வாரை 'விஷ்ணுரதம்' என்றும் முருகனின் மயிலை 'ஸ்கந்தரதம்' என்றும் அழைக்கும் வழக்கமும் உண்டு. மஹாதிரிபுர சுந்தரியாகிய அம்பாள் எழுந்தருள்வது "ஸ்ரீ சக்ரரதம்" என்பர்.

தமிழிலுள்ள ஆண்பாற் பிள்ளைத் தமிழில் 'சிறுதேர் உருட்டல்' என்று ஒரு பருவம் இருப்பதும் சித்திரக் கவி மரபில் "இரதபந்தம்" என்ற ஒரு வகை இலக்கியம் இருப்பதும் ஈண்டு சிந்திக்கத் தக்கது.

### இலக்கியங்களில் தேர்

கடேர்பநிஷதத்தில் மனிதனின் உடலைத் தேராகவும் உயிரைத் தேர்த் தலைவனாகவும் புலன்களைக்குதிரைகளாகவும் புத்தியைத் தேர்ப்பாகனாகவும் புலன் சார் விடயங்களைத் தேரோடும்வீதியாகவும் உவமித்திருக்கும் முற்றுருவகம் ஒன்றைக் காணலாம். இது போலவே கிரேக்க உரோம நாகரிகங்களிலும் தேர் சிறப்பிடம் பெறுவதை அவர்களின் இலக்கியங்களினூடே அவதானிக்க முடிகின்றது.

சங்ககாலத்தில் மன்னர்கள் புலவர்களுக்கு தேர்களைப் பரிசாக வழங்கியதாகச் செய்திகள் உண்டு. இத்தகு செயல்கள் தேர்வண்மை எனப்படும். முல்லைக்கு பாரிதேரளித்தமை குறிப்பிட வேண்டியது. ஔவையார் தேர் செய்ய வல்லவர்கள் பற்றி தனது ஒரு பாடலில், "வைகல் எண்தேர் செய்யும் தச்சன் திங்கள் வலித்த காலன்னோனே" என்று பதிவு செய்கிறார்.

இது போலவே சிறுபாணாற்றுப் படையில்,

புருவவானத்துப் பாற்கதிர்பரப்பி
உருவவான்மதி ஊர்கொண்டாங்கு
கூருளிபொருதவடு
வாழ்நோன்குறட்
ஆரஞ்சூழ்ந்தவயில்
வாய்நேமியொடு

என்று தேர் செய்யும் முறையை சங்கப்புலவர்கள் அருமையாகப் பதிவு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இரதம் செலுத்துவதில் சிறந்தோரை 'அதிரதன்' என்றும் "மஹாரதன்" என்றும் இதிஹாசங்கள் சிறப்பிக்கும். ஸ்ரீராமபிரானின் தந்தை "தசரதன்" என்ற பெயர்பெற்றதும் இக்காரணம் பற்றியே ஆகும்.

கஜ ரத துரக பதாதி என்ற சதுரங்கச்சேனைகளில் ரதம் என்ற தேரும் இடம்பெறுகிறது. சிந்து வெளிக் காலத்திலே தேரூரும் மக்கட் குழுமம் ஒன்று இருந்ததாக மேலைத்தேய அறிஞர்களான ஏ.எல். பசாம் போன்றோர் கூறியுள்ளனர்.

புராணமரபில் சிவபெருமான் திரிபுரங்களை எரிக்க எழுந்தருளிய தேருக்கும் இராவணன் மற்றும் குபேரனுடைய புஷ்பகவிமானம் என்ற ஆகாசரதத்திற்கும் அதிக முதன்மை உண்டு.

### தேரின் பாகங்கள்

தேரின் சில்லிலிருந்து இறைவன் எழுந்தருளும் பீடம் வரையான பகுதி மூன்று பிரிவாகவோ ஐந்து பிரிவாகவோ வகுக்கப்பட்டு சிற்பங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இறைவன் காட்சிதரும் பகுதிக்கு மேலுள்ள சிகரம் தமிழகத்தில் ஆண்டு தோறும் வண்ணத்துணிகளால் அலங்கரிக்கப்பட்டு மூலாலய விமானத்தின் மறுவடிவம் போல அழகுறக் காட்சி தரும். இலங்கையில் இவ்வாறு வருடாந்தம் அமைக்காமல் நிரந்தரமாகவே மரக் கூட்டுவேலைப்பாடுகளால் மேல்தளத்தை அமைக்கும் வழக்கமும் இருப்பது குறிக்கத்தக்கது.

தேரை ஆக்கவல்லவர் ஸ்தபதி எனப்படுவார். திராவிட உத்தரமட்டம் மற்றும் முகபத்திரம் முதலிய கலை மரபுகள் இவற்றுக்கு உண்டு. பார்விதானம்,உபபீடம், அதிஷ்டானம், கமலாகார பண்டிகை நராசனமட்டம், தேவாசனமட்டம், உபசித்தூர்மட்டம் போன்ற அங்கங்கள் இறைவனின் இருக்கைப் பகுதிக்குக் கீழும் இருக்கைப் பகுதியில் தேர்ச்சாரதி தேர்க்குதிரைகள் மற்றும் பவளக்கால்களும் மணிமண்டபமும் மேல்விதானம் யாளிகளாலும் சிம்மங்களாலும் தாங்கப்பெறுவதாய் முகபத்திரமடக்கை முதலிய அம்சங்களுடனும் அமைக்கப்படுவதைக் காணலாம்.

இவற்றை தமிழ் இலக்கண இலக்கியங்களில் முறையே தேரின் அச்சிலிருந்து பீடம் வரையான பாகங்களை ஆரக்கால் உருள் (சில்லு - சக்கரம்) கிடுகு (தேர்த்தட்டைச் சுற்றி அமைக்கப்படும் மரச்சட்டகம் - நிகண்டு) என்றெல்லாம் அழைப்பர். பீடப்பகுதியிலுள்ள தாமரை மொட்டு வடிவிலுள்ள அமைப்பை 'கூவிரம்' என்றும் தேரின் நுகக்காலையும் சிகரத்தையும் இணைக்கும் பகுதியை 'கொடிஞ்சி' என்றும் தேரின் வெளிப் பாகத்து நீண்டமேல் வளைவை 'கொடுங்கை' என்றும் தேரை அலங்கரிக்கக் கட்டும் சீலையை 'தேர்ச்சீலை' என்றும் தேரின் நடுவிடம் தேர்த்தட்டு அல்லது 'தேர்த்தளம்' என்றும் சில நிகண்டுகளில் 'நாப்பண்' என்றும் அழைப்பர்.

தேரின் மேற்றட்டைச் சுற்றியுள்ள மரக்கைப்பிடிச் சுவர் 'பாகர்' என்றும் தேரின் நடுவிலுள்ள பீடம் 'பார்' என்றும் 'வேதிகை' என்றும் தேரில் ஏறுவதற்காக அமைக்கப்பட்ட மேடையை 'பிரம்பு' அல்லது 'தேர் முட்டி' என்றும் அழைப்பர். தேர்ச் சில்லை 'தேர்வட்டை' என்று குறிப்பிடப்படுகின்றது. தேர் ஓட்டு வபரை 'தேர்ப்பாகன்' என்றும் 'தேர் வலவன்' என்றும் கூறும் வழக்கம் உள்ளது.

### தேர்த்திருவிழா-தொடர்பான-நடைமுறைகள்

பொதுவாக இறைவனை நோக்கி ஆலயத்திற்கு மக்கள் வருவதே வழக்கம். ஆனால் தேர்த்திரு விழாவில் மக்களை நோக்கி இறைவன் வருவதை அவதானிக்கலாம். கி.பி 5-ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த சீனயாத்திரிகனான பாஹியன் என்பவனும் தனது குறிப்பில் இத்தேர் விழா பற்றிக் கூறியுள்ளான். சோழர்காலக் கல்வெட்டுகள் பலவற்றிலும் தேர்த்திரு விழா பற்றிக் கூறப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

கோயில் தோத்திருவிழாவில் குழந்தைகளின் மகிழ்ச்சிக்காக அவர்களுக்குப் பெரியோர் வழங்கும் காசினை 'தேர்க்காசு' என்று வழங்குவதனூடாக ஆலயத் தேர்விழா ஒரு பண்டிகையாகக் கொண்டாடப்பட்டு வந்துள்ளதை அவதானிக்கலாம்.

இது போலவே தனது மாப்பிள்ளைக்கு இவ்விழாவை ஒட்டி மாமனார் அளிக்கும் சன்மானம் 'தேரடிச்சம்பாவனை' என்றும் கூறப்படும். தேரோடும் வீதியில் இடத்திற்கிடம் அதனை நிறுத்தி வைக்கவும் அதனை திசை திருப்பவும் தேர்ச்சில்லிற்கு 'முட்டுக்கட்டை' இடுவர். இதனைச் சறுக்குக்கட்டை என்றும் கூறுவதுண்டு. இது போலவே 'தேர் நிலைக்கு வந்து விட்டது' என்பது ஒரு பெருங்காரியத்தை நிறைவு செய்ததைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்படுவதையும் அவதானிக்கலாம்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தேர் நிலைக்கு வர குறைந்தது இரண்டு மூன்று நாள்களிலிருந்து ஒரு வாரம் பத்து நாள் என்றெல்லாம் ஆகிவந்த காலத்தில் 'தேரோடு கிளம்பி தெருவோடு நின்றாளாம்' என்றே ஆண்டாளுக்கு ஒரு வாக்கிய வழக்கு உள்ளது.

முன்பெல்லாம் ஆடவர்கள் மட்டுமே தேரை இழுக்கும் வழக்கம் இருந்தது. இலங்கையில் சில ஆலயங்களில் அம்பாள் தேரைப் பெண்களே இழுக்கும் வழக்கமுண்டு. தற்போது பெருந்தேர்களில் வலப்பக்க வடத்தை ஆடவரும் இடப்பக்க வடத்தை மகளிரும் பிடித்திழுக்கும் வழக்கமும் ஏற்பட்டு வருகின்றது.

இயல்பாக தேர் விழாவில் சாதீயப் பிடிமானங்களும் அக்காலத்திலேயே விலக்கப்பெற்று சகோதரத்துவம் வளர்க்கப்பட்டுள்ளது. ஆனால் சில இடங்களில் விதி விலக்குகள் இருக்கலாம். 'இறைவனின் தேர் வடம் பிடித்தால் இறையுலகில் இடம் பிடிக்கலாம்' என்பது பக்தர்களின் விஸ்வாசம்.

### நல்லூர் முருகன் திருத்தேர்

நல்லூர் முருகப்பெருமானின் திருத்தேருக்கு சிறப்பும் மகிமையும் பெருமையும் அதிகம். ஞானதவயோகரும் அவரது குருவான செல்லப்பதேசிகரும் இந்தத் தேரின் இருப்பிடமான தேரடியில் தான் இறைவனைத் தேடிக் கண்டு கொண்டார்கள். தாங்கள் கண்டு கொண்டதற்கும் அப்பால், யாவருக்கும் காட்டினார்கள்.

இப்படி சித்தபுருஷர்களின் ஞான நிஷடையினாலேயும் தவத்தினாலேயும் இந்த நல்லைப்பெருமானின் திருத்தேர் ஒளி விட்டுப் பிரகாசிக்கிறது.

கோலக்குறமகளும் இந்திரன் பெற்ற திருமகளும் இணைய ஆறு திருமுகங்களுடன் நல்லையின் ஷண்முகநாதன் தேரில் எழுந்தருளுகிற போது ஆவணியின் அமாவாசை ஆறு முழுநிலவுகள் ஒருங்கே உதிக்கிற புண்ணிய நாளாக மாறி விடுகிற புதுமை நடக்கிறது.

இந்த நல்லூர்த்தேரில் பற்பல சிற்ப நயங்களும் உள்ளன. இத் தலத்தில் கட்டுமானங்கள் எப்படி ஆகம இலக்கண மரபுகளை மீறி இறைவனின் அருட்பொலிவின் அடையாளமாக உள்ளனவோ? அது போலவே, நல்லையாண்டவனின் இரதமும் இரத இலக்கணங்களை மீறியதாகஆனால், சிறப்புப்பொருந்தியதாக உள்ளது என்பது தேர்த் திறன் பற்றிய ஆய்வாளர்களின் கருத்து.


திருப்பதி தேவஸ்தான ஆஸ்தான வித்வானாக விளங்கிய புகழ்பெற்ற திருவிடைமருதூர் ஸ்ரீ இரா.கோவிந்தராஜு என்ற ஸ்தபதியாரே இந்த நல்லைப்பெருமானின் திருத்தேரை உருவாக்கியவர்.

திராவிட எண்கோண அமைப்பிலான இந்தத் திருத்தேர் 1964 களில் உருவானது. இதற்கு முன்னரே நல்லூரில் இருந்த தேரின் மாதி ரியைப் பின்பற்றியே இந்தத் தேரும் உருவாக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். அதனாலோ, என்னவோ, பெருந் தேர்களில் எல்லாம் காணப்படுகின்ற பிரம்மா, குதிரைகள் போன்ற தேரங்கங்கள் இத்தேரில் காணப்படு வதில்லை. ஆனால், இந்த தேரினை விட, தேர் மண்டபமான தேர்முட்டி தனித்துவமான எழிலோடு விளங்குகின்றது.

இலங்கையின் எந்தப் பாகத்திலிருந்தாலும் நல்லூர்க் கந்தனின் திருவிழாவுக்காக முக்கியமாக 'தேருக்காக' யாழ்ப்பாணத்திற்கு படையெடுக்கும் இலட்சோபலட்சம் பக்தர்களும் இந்தத் தேரின் மகிமையை வெளிக்காட்டுவோராகவே கருதவேண்டியிருக்கிறது. இனி வரும் காலங்களில் இந்த எண்ணிக்கை இன்னும் பல மடங்காக அதிகரிக்கும் வாய்ப்புகளும் இருக்கிறது. அதற்கு ஈடு கொடுக்கத்தக்க வகையில் ஆலயசூழலைப் பேணவேண்டிய தேவையும் நமக்கிருக்கிறது.

புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து வந்தாலென்ன, எங்கிருந்து வந்தாலென்ன ஒரு புண்ணிய ஸ்தலத்திற்குச் செல்லுகின்றோம் என்ற எண்ணப்பாங்கோடும் அதற்குரிய உடையோடும் நல்லூர்த்தேரில் கலந்து கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டிய தேவையும் இப்போது எழுந்திருக்கிறது.

நல்லையம்பதியின் புனிதம் பேண வல்ல நடை, உடை, பாவனை உடையவர்களாக நல்லூரில் வழிபாடு செய்தால் அந்த ஆறுமாமுகத்து அருள் வள்ளல் தனது பன்னிருகரங்களாலும் அள்ளிக் கொடுப்பது உறுதி என்பர் அவனருள் பெற்றோர்.பஞ்சம் படை வந்தாலும் பார் எல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி கிளியே ஆறுமுகன் தஞ்சமடி என்று கூவுகிற யோகரின் வீர மொழி கேட்கிறது. பூமழை பொழிகிறது. மணி நாதம் கேட்கிறது. இனி என்ன கவலை எமக்கிருக்கிறது? நாம் கேட்டதை.. கேட்க நினைப்பதை.. நமக்குத் தேவையானதை.. எல்லாம் தேவையான வேளையில் தருவதற்கென்றே நல்லூரின் ஷண்முகநாதன் தேரில் வருகிறான். அவனதுதிருவடிகளை பணிவதன்றி நமக்கு கதி என்ன இருக்கிறது?



# பனிப்போருக்கு பதில் குளிர் காதல் இந்தியாவுடனான உறவு குறித்து பசில்

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதாக வெளிவரும் செய்திகளை முற்றாக மறுத்துள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ, இந்தியாவுடன் இலங்கைக்கு வரலாற்றில் என்றுமில்லாதவாறான நெருக்கமான உறவு தற்போது நிலவுவதாகவும், இரண்டு நாடுகளுக்கும் இடையில் பனிப்போருக்கு பதிலாக குளிர் காதலே நிலவுவதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தியாவின் அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் அடிக்கடி இலங்கைக்கு விஜயங்களை மேற்கொண்டு வருகின்றனர். இரண்டு நாடுகளுக்கும் இடையில் வர்த்தகம் முதலீடு மற்றும் பொருளாதாரத் துறைகளில் அதிகளவிலான தொடர்புகள் காணப்படுகின்றன.

இரு நாடுகளும் செயற்பாட்டு ரீதியாக பொருளாதார செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றன. இவற்றின்மூலம் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவுகள் மேலும் வலுவடைந்துள்ளது.

மேலும், சுற்றுலாத்துறையிலும் இரண்டு நாடுகளுக்கும் இடையில் சிறந்த தொடர்புகள் காணப்படுகிறது. இலங்கை மற்றும் இந்திய நாடுகளின் மக்களுக்கு இடையிலான தொடர்பும் மிகவும் பலமாக உள்ளது.

இவ்வாறான நெருக்கமான தொடர்புகள் காணப்படும்போது பனிப்போர் நிலவுவதாக எவ்வாறு கூற முடியும் எனவும் அமைச்சர் கேள்வியெழுப்பியுள்ளார்.

## விரிவுரையாளர் பிரச்சினை பிரேரணை சமர்ப்பிப்பு

பலகலைக்கழக விரிவுரையாளர்கள் தமது பிரச்சினைகள் உள்ளடங்கிய பிரேரணையொன்றை சமர்ப்பித்துள்ளனர்.

தமது யோசனைகள் அடங்கிய பிரேரணையொன்று கடந்த திங்கட்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடம் கையளிக்கப்பட்டதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் பஷில் ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது முன்வைக்கப்பட்ட விடயங்களின் பிரதிபலிப்பாக இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில தமது பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அவர்கள் வழங்கிய தீர்வுகள் ஏற்றுக்கொள்ளும் வகையில் அமையவில்லை.

எனினும் இந்தப் பிரேரணை ஊடாக தமது பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படும் என எதிர்பார்ககின்றோம் எமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படும் வரை, தாம் முன்னெடுத்துளள பணிப்பகிஷ்கரிப்பு தொடரும் என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனதின் தலைவர் கலாநிதி நிரமல ரஞ்ஜித் தேவசறி மேலும் கூறினார்.

# தரம் குறைந்த எரிபொருள் விநியோகம் ஆராய சுதந்திர விசாரணைக் குழு

(கொழும்பு)

தரக்குறைவான எரிபொருள் விநியோகம் தொடர்பாக ஆராயவென அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழு வினைத்திறன் அறறுக் காணப்படுவதால் ஒரு சுதந்திரமான விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென பெற்றோலிய தொழிற் சங்கங்கள் கூறியுள்ளன.

தற்போதைய விசாரணைக் குழு உறுப்பினர்கள் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குள்ளிருந்து நியமிக்கப்பட்டவர்கள் எனவும் இவர்களால் பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்த முடியாது என தொழிற் சங்கங்கள் கூறியுள்ளன.

கலப்பட பெற்றோல் இறக்குமதிக்கு பொறுப்பானவர்கள் முன்னர் தண்டிக்கப்பட்டிருந்தால் இரண்டாம் தடவையும் இவ்வாறான சம்பவம் நடந்திருக்காது என ஜாதிக சேவா சங்கத்தின் தலைவர் ஆனந்த பாலித கூறினார்.

உயர் அதிகாரிகளே குற்றமிழைத்தவர்களாக இருக்கும் போது முதலில் விநியோகித்தவரையும் பின்னர் எண்ணெய் பம்பிகள்மற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள் என மாறி, மாறி குற்றம் சுமத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

புனரமைப்பு வேலைகளுக்காக சுத்திகரிப்பு நிலையங்கள் மூடப்பட்டிருந்தபோது இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள் தரக்குறைவானதாகும். இதற்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்காத அரசாங்கம் பல காரணங்களை மாறிக் மாறி கூறி வருகிறது.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் 2011 இலிருந்து அரசியல் தலையீடு காரணமாக பல ஊழல்கள் இடம்பெறுகின்றன. அரசியல் அடிவருடிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொன்றிலும் தரகு மற்றும் வேறு நன்மைகள் காணப்படுகின்றன என பாலித கூறினார்.

எங்களது கூட்டுத்தாபனம் தரமான பெற்றோலை குறைந்த விலையில் வாங்க விரும்பினால் பெரிய கம்பனிகளுடன் நீண்டகால ஒப்பந்தங்களை செய்வதே ஒரேவழி என அவர் மேலும் தெரிவித்தார்.

# பாதுகாப்பு உறவை கட்டியெழுப்ப அமெரிக்கா, இலங்கை இணக்கம்



(கொழும்பு)

தெற்கு மற்றும் தென்கிழக்காசியாவுக்கான அமெரிக்காவின் பிரதி உதவிப் பாதுகாப்பு அமைச்சராக. புதிதாக நியமிக்கப்பட்டுளள விக்ரம் சிங்கை அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய சந்தித்துப் பேசியுள்ளார்.

வோஷிங்டனில் கடந்த திங்கட்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்புகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுவாக கட்டியெழுப்புவதற்கு உகந்த தருணம் இதுவே என்று இருதரப்பும் ஒப்புக் கொண்டுள்ளதாக வோஷிங்டனில் உள்ள இலங்கைத் தூ்தரகம் கூறியுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, போருக்குப் பிந்திய இலங்கையின் பாதுகாப்பு கவலைகள் குறித்தும், அண்மைய பொருளாதார மற்றும் அரசியல் முன்னேற்றங்கள் குறித்தும் விக்ரம சிங்கிற்கு இலங்கைத் தூதுவர், எடுத்துக் கூறியுள்ளார்.

பொதுவான பாதுகாப்பு இலக்குகளை அடைவதற்கு இருநாடுகளும் பங்காளிகளாக இணைந்து செயற்பட முடியும் என்று அமெரிக்காவின் பிரதி பாதுகாப்பு உதவிச்செயலர் தெரிவித்துள்ளார்.

தீவிரவாத,கடற்கொள்ளை முறியடிப்பு ஒத்துழைப்பு, மனிதாபிமான உதவிகள், உள்ளிட்ட விவகாரங்களில் இரு நாடுகளும் இணைந்து பணியாற்ற முடியும் என்றும் அவர் மேலும் கூறியதாகவும் வோஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

# திலக் கருணாரட்ன பதவி விலக உயர்மட்ட அழுத்தமே காரணம்

## என்கிறார் கருஜயசூரிய

(கொழும்பு)

நாட்டின் அதி உயர் பதவிகளை வகிப்போரின் அழுத்தங்கள் காரணமாகவே கொழும்பு பங்குச் சந்தையின் தலைவர் திலக் கருணாரட்ன பதவி விலக நேரிட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

திலக் கருணாரட்னவின் பதவி விலகலை குறித்த உயர் அதிகாரிகள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். இதற்கு முன்னர் பதவி வகித்த இந்திராணி சுகததாசவிற்கும் இந்த நெருக்கடி நிலைமை ஏற்பட்டது.

அப்பாவி மக்களின் ஊழியர் சேமலாபநிதியை பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும். வரலாற்றில் என்றுமில்லாத அளவிற்கு நாட்டில் ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருகின்றன.

இதனைத் தடுத்து நிறுத்த அனைவரும் இணைந்து செயற்பட வேண்டுமென கரு ஜயசூரிய கோரியுள்ளார்.

# நாட்டை விட்டு வெளியேறும் மருத்துவர் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

தனியார் துறையினரின் ஊதியத்துடன் ஒப்பிடும் போது அரச ஊழியர்கள் சம்பள அளவு குறைந்து காணப்படுவதால், விசேட மருத்துவ நிபுணர்கள் நாட்டைவிட்டு வெளியேறும் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் அநுருத்த பாதெனிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரச ஊழியர்கள் தற்போது பாரிய ஊதிய முரண்பாட்டை எதிர்கொண்டுள்ளதாகவும் மருத்துவர் பாதெனிய மேலும் தெரிவித்தார்.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் மருத்துவர்கள் உளளிட்ட அரச ஊழியர்களுககு ஒன்றரை வீத ஊதிய அதிகரிப்பைப் பெற்றுத்தருமாறு தமது அமைப்பு அரசாங்கத்திடம் கோரியதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

தற்போது ஊதிய முரண்பாட்டைத் தீர்ப்பதற்காக தேசிய ஊதிய கொள்கையொன்றைத் தயாரிப்பது மிக முக்கியமானது என்பது உணரப்பட்டுள்ளதாகவும் மருத்துவர் பாதெனிய மேலும் குறிப்பிட்டார்



நாட்டின் கல்வி முறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்க்கக் கோரி அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று முன்தினம் விகாரமாதேவி திறந்த வெளியரங்கில் பொதுக் கூட்டமொன்றை நடத்தியதனைக் காணலாம்.

# பத்தாயிரம் பசுக்கள் இவ்வருடம் இறக்குமதி

(கொழும்பு)

பால்மாவுக்குப் பதிலா்க புதிய பால் நுகர்வை ஊக்குவிப்பதற்காக இவ்வருடம் பசுக்களின் எண்ணிக்கையை 10,000 இலிருந்து 20,000 ஆக அதிகரிப்பதற்கு தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே அவுஸ்ரேலியாவிலிருந்து 500 பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் 1500 பசுக்கள் இரு மாதங்களுக்குள் இறக்குமதி செய்யப்படும் எனவும் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் தலைவர் லகஷ்மன் "ஹலுகல்ல தெரிவித்தார்.

பால்மா இறக்குமதிக்காக இலங்கை வருடாந்தம் 4,000 மில்லியன் டொலர்களை செலவிடுவதாகவும் பசுக்களை இறக்குமதி செய்வது நீண்டகால அடிப்படையில் செலவு குறைவானது என தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் இவ்வருடம் இறக்குமதி செய்யப்பட்ட பசுக்களின் மொத்தப் பெறுமதி நிர்ணயிக்கப்படவில்லை எனவும் ,அவை பல மில்லியன் பெறுமதியானவையாக இருக்கும் எனவும் அவர் தெரவித்தார். மலையகத்தில் பசுக்களின் பராமரிப்பு, உணவு என்பனவற்றுக்காக மில்லியன் கணக்கான ரூபா செலவிடப்படவுள்ளது.

# மட்பாண்ட பயிற்சி நிலையங்கள்
## சங்கானையில் அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மட்பாண்டத் தொழிற்துறையை மேம்படுத்தும் நோக்கில் சங்கானைப் பகுதியில் பயிற்சி மற்றும் ஆய்வு நிலையங்களை அமைப்பதற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.



சங்கானையில் அமைந்துள்ள அரசாங்க இயந்திர மட்கல நிலையத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் நிலையத்தின் செயற்றிட்டங்களை மேலும் விரிவாக்கம் செய்வது தொடர்பிலும் கலந்துரையாடினார்.

அங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் செயலூக்கம் குறைவான நிலையிலுள்ள இந்நிலையத்தின் செயற்பாடுகளை மீளவும் நவீனமுறையில் நிபுணத்துவம் வாய்ந்த தொழிற்துறை வல்லுனர்களின் வழிகாட்டலுடன் விரைவாக இயக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இங்கு இயங்காத நிலையிலுள்ள இயந்திர சாதனங்களைத் திருத்தம் செய்வது, உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டிய புனரமைப்பு வேலைகள் தொடர்பிலும், ஏனைய அடிப்படைத் தேவைகளான மின்சாரம், மலசலகூடம், சூளை அமைப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படுமென்றும் தெரிவித்தார்.

இதேவேளை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டிய புனரமைப்பு வேலைகளைத் தொடர்ந்து இரண்டு வாரத்திற்குள் நிலையத்தின் பணிகளை தொடங்குமாறும் துறைசார்ந்தோரிடம் பணிப்புரை வழங்கியதுடன், முதற்கட்டமாக ஒருதொகுதி பயிற்சியாளர்களை இணைத்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

தொடங்கப்படவுள்ள இந்நிலையம் பயிற்சி நிலையமாக மட்டுமல்லாமல் ஆய்வு நிலையமாகவும் செயற்படவுள்ளதாகவும், இதன்மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களினது சந்தை வாய்ப்புத் தொடர்பிலும், அதுசார்ந்தவர்களது வாழ்வாதார மேம்பாடு தொடர்பிலும் உரிய கவனம் செலுத்தப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது கைத்தொழில் அபிவிருத்தி சபை பணிப்பாளர் கெங்காதரன், சங்கானை பிரதேச செயலர் சோதிநாதன், மட்பாண்ட தொழிற்துறை நிபுணர் அஜித் பெரேரா, ஈ.பி.டி.பியின் வலிகாமம் இணைப்பாளர் ஜீவன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## விளாத்திக் குளத்தில் பொங்கல் விழா

(வவுனியா)

வவுனியா விளாத்திக்குளம் ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா இன்று இடம்பெறவுள்ளதாக ஆலயத்தின் பரிபாலன சபையினர் தொவித்துள்ளனர்.

நண்பகல் விநாயகர் பூஜையுடன் ஆரம்பமாகும் வழிபாடுகள் அதிகாலையில் அம்மன் பூஜையுடன் நிறைவு பெறவுள்ளதாகவும் கலை நிகழ்வுகளும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுளளதாகவும் பரிபாலனசபையினர் தெரிவித்தனர். (160)

# ஆலயத்தில் தீபங்கள் திருட்டு

(வவுனியா)

கிளிநொச்சி கண்டாவளை பத்தன்மோட்டை முருகன் ஆலயத்தின் கூரைப்பகுதியினால் உள்நுழைந்த திருடர்கள் அவ் ஆலயத்தில் இருந்து சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான பித்தளையிலான தீபங்களை திருடிச்சென்றுள்ளதாக ஆலயத்தின் தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் தெரிவிக்கையில்,

கடந்த சில தினங்களுக்கு முன்னரே இத்திருட்டுச் சம்பவம இடம்பெற்றிருக்க வேண்டும். கடந்த வெள்ளிக்கிழமை பூஜைகாக வாயிற்கதவைத் திறந்தபோது அங்கிருந்த தீபங்கள் அனைத்தும் காணாமற் போயிருந்தது. அதன் பின்னர் தர்மகர்த்தா சபையின் சார்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளோம் எனத் தெரிவித்தனர். (160)


## விதிமுறைகளுக்கு மாறான பஸ்தரிப்பு நிலையம்

(நயினாதீவு)

யாழ்ப்பாணத்திலிருந்து குறிகட்டுவானுக்குச் செல்லும் வீதியில் குறிப்பாக வேலணை வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ள பஸ்தரிப்பு நிலையம் போக்குவரத்து விதிமுறைகளை மீறி அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதியில் பஸ்தரிப்பிடம் அமைந்துள்ளமை பொருத்தமற்றதாக காணப்படுவதாகவும், அதிகாரிகளின் அனுமதியின்றி இப்பஸ்தரிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் போக்குவரத்து நெருக்கடி நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே அப்பகுதியில் போக்குவரத்து விதிமுறைகளுக்கு அமைவாக பஸ்தரிப்பிடம் அமைக்கப்படவேண்டும் எனத் தெரிவிககப்படுகிறது. (175)



நல்லூர் தேர்த்திருவிழாவிற்கு நேற்றுக் காலை மானிப்பாயிலிருந்து பக்தர்களை ஏற்றிவந்த ஆட்டோ கொக்குவில் அம்மன் வீதிப்பகுதியிலுள்ள பாலத்திற்குள் தலைகீழாக புரண்டுகிடப்பதைக் காணலாம். தெய்வாதீனமாக இதில் பயணித்தவர்களுக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை.

# முரசின் இன்றைய பலன்

(17.08.2012 - வெள்ளிக்கிழமை

நந்தன வருஷம் ஆவணி மாதம் 01 ஆம் திகதி. அமாவாசை முன்னிரவு 10.06 வரை. நட்சத்திரம் ஆயிலியம் முன்னிரவு 8.45 வரை. மரணயோகம். இராகுகாலம் 10.35 - 12.05 வரை. சுபநேரம் 06.05 - 7.35 வரை. எமகண்டம் 3.05 - 4.35 வரை. குளிகன் காலம் 7.35 - 9.05 வரை. அமாவாசை விரதம். நல்லூர் முருகன் தீர்த்தம், தொண்டமானாறு செல்வச்சந்நிதி கொடியேற்றம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சுலபநன்மை, ஸ்தலவழிபாடுகள், புதிய ஒப்பந்தங்கள், தடைகள் விலகும். |
| ரிஷபம் | வாகனசுகம், இருப்பிட ஆதரவு, குடும்ப அன்னியோன்யம், ஆலய வழிபாடு. |
| மிதுனம் | மறைமுக எதிர்பபுகள், உடல் நிலை பாதிப்பு, மருததுவச் செலவு, அதிகாரிகளை அனுசரிக்கவும், |
| கடகம் | மனதில் குழப்பம், வாக்குக் கொடுக்கக் கூடாது, உஷ்ண ரோகங்கள், ஆர்வம் குறையும். |
| சிம்மம் | பணவரவு, நோய் நொடிகள் அகலும், அடமானம் வைக்க நேரிடும், வேலைப்பளு குறையும். |
| கன்னி | திடீர் பயணம், கல்வியில்கவனம், நண்பர்கள் உதவி, குடும்ப அன்னியோன்யம். |
| துலாம் | மனதில் விரக்தி, பயண அலைச்சல், கோபம் வேண்டாம், மனைவி வழியில் செலவு. |
| விருச்சிகம் | வீண் செலவுகள், போக்குவரத்தில் கவனம், கவலைகள் மறையும், பதற்றம் கூடாது. |
| தனுசு | சந்திராட்டமம் கவனம் தேவை, எச்சரிக்கை நன்று, மதிப்பு உயரும், உறவில் பாதிப்பு. |
| மகரம் | கூட்டு முயற்சி வெற்றி, அன்னியர் அனுசரணை, சகோதரரால் கஷ்டம், பயணத்தில் கவனம். |
| கும்பம் | இறைபக்தி, காரியானுகூலம், கடன் சுமை , பிரச்சினைகள் நச்சரிக்கும். |
| மீனம் | உறவினர் வருகை, மனத்தெளிவு, நண்பர்கள் உதவுவார், தந்தை வழியிலும் இலாபம். |

# புனர்வாழ்வு பெற்றோருக்கு முச்சக்கர வண்டிகள்
## – விண்ணப்பங்களை சமர்ப்பிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமுகத்துடன் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு முச்சக்கரவண்டிகள் வழங்கப்படவுள்ளன. இதற்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ். கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த புனர்வாழ்வளிக்கப்பட்டோருக்கு முச்சக்கர வண்டிகளை வழங்குவதற்கான நடைமுறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

அதனடிப்படையில் முச்சக்கர வண்டியினைப் பெறுவதில் விருப்பம் உள்ளவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரையான காலப் பகுதிக்குள் எலயன்ஸ் வினாஸ் இல் விண்ணப்பங்களைப் பெற்று பூரணப்படுத்தி அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த சிறைச்சாலைகள் அமைச்சுடன் இணைந்து முதன் முறையாக எலயன்ஸ் ஒப்பந்தம் செய்துள்ளது.

இதன்படி முதற்கட்டமாக 25 முச்சக்கரவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

எனினும் முச்சக்கர வண்டியினைப் பெற விரும்புபவர்கள் சாரதி அனுமதிப் பத்திரம் உடையவர்களாகவும், வேறு வருமானம் இல்லாதவர்களாகவும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள் என்பது தொடர்பில் பரிசீலிக்கப்படும் இடத்து அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் முச்சக்கரவண்டிகள் வழங்கப்படும்.

இவ்வாறு தெரிவு செய்யப்படுபவர்கள் ஆரம்பகட்டமாக எதுவிதமான முற்கொடுப்பனவுகளும் வழங்க வேண்டியதில்லை.

அதன் பின்னர் வழங்கப்பட்டு அடுத்த மாதத்திலிருந்து பணத்தை எலயன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும்.

இதன் கால எல்லை 48 தொடக்கம் 72 மாதங்கள் வரையானது என யாழ். மாவட்ட எலயன்ஸ் முகாமையாளர் எஸ். நிசாந்த் தெரிவித்தார். முச்சக்கர வண்டியினைப் பெறுபவர்களுக்கான காப்புறுதி மற்றும் பதிவு ஆகியன இந்த நிறுவனத்தின் ஊடாக இலவசமாகச் செய்து கொடுக்கப்படும்.

அத்துடன் யுத்தத்தினால் கால்களை இழந்தவர்களுக்கு முச்சக்கர வண்டியினை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி போக்குவரத்து திணைக்களத்துடன் புனர்வாழ்வு அமைச்சினர் கலந்துரையாடல்களை மேற்கொண்டு அவர்களுக்கு வேண்டிய வகையில் தொழில்நுட்ப ரீதியில் மாற்றங்கள் செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் புனர்வாழ்வு நலன்புரி மீளாய்வுக்குழு பொறுப்பதிகாரி மேஜர் ஜகத்குமார் எலயன்ஸின் கொழும்பு உயர்மட்ட முகாமையாளர் செல்வராஜா யாழ் மாவட்ட முகாமையாளர் எஸ்.நிசாந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# எங்களுக்குள் மோதல் இல்லை



போர்த்துக்கல் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவுடன் எனக்கு மோதல்கள், எதிர்ப்புத் தன்மைகள் எவையும் கிடையாது என ஆர்ஜென்டினாவின் நட்சத்திர வீரரான மெஸ்ஸி தெரிவித்துள்ளார்.

ரியல் மட்ரிட் கழகம் சார் பாகப் போட்டிகளில் பங்குபற்றும் கிறிஸ்டியானோ ரொனால்டோவும்,பார்சிலோனா கழகம் சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றும் மெஸ்ஸியும் நவீன கால்பந்தாட்டத்தில் தவிர்க்கப்பட முடியாத நட்சத்திரங்களாகக் கருதப்படுகின்றனர்.

எங்களுக்கிடையில் எப்போதுமே மோதல் இருந்ததில்லை. எங்களுடைய நாட்டிற்காகவும், கழகங்களிற்காகவும் அதிக கோல்களைப் பெற்றுவரும் இருவரும் விளையாட்டின் எதிரிகளாகக் கருதப்படுகின்றனர்.

எனினும் எங்கள் இருவருக்குமிடையில் எந்தவித மோதல்களோடு, எதிரித்தன்மைகளோ காணப்படவில்லை. நான் இதுவரை கிறிஸ்டியானோ ரொனால்டோவுடன்மோதல்களில் ஈடுபட்டதில்லை.

ஊடகங்களே இவ்வாறான கருத்தை எழுப்ப முயற்சிக்கின்றன. ஊடகங்கள் எங்களை எதிரிகளாகக் காணப்பிக்க விரும்புகின்றன. எங்களுக்கிடையில் மோதல்களோ அல்லது வேறு எவையுமோ இருந்திருக்கவில்லை. கிறிஸ்டியானோ ரொனால்டோ ஒரு மிகச்சிறந்த வீரர். அவரின் ஆட்டத்தை நான் இரசிப்பேன் எனவும் தெரிவித்தார்.

# சீன கால்பந்து அணிக்கு மரடோனா பயிற்சியாளர்?



(பீஜிங்)

சீன கால்பந்து அணிக்கு பயிற்சியாளராக மாரடோனா விரும்புவதாக, செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆர்ஜென்ரீனா கால்பந்து அணியின் முன்னாள் கப்டன் மாரடோனா. சமீபத்தில் ஐக்கிய அரபு எமிரேட்சின் அல் வாஸ்ல் கிளப் கால்பந்து அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

தற்போது சீனாவில் எட்டு நாள் பயணம் செய்துள்ளார். இதில் சீன கால்பந்து சங்கத்தின் தலைவர் வெய் டியை சந்திக்கவுள்ளார். இதனிடையே, அங்கிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றில், சீனாவின் கால்பந்து வளர்ச்சிக்கு உதவத் தயார் என, மாரடோனா தெரிவித்ததாக செய்தி வெளியானது. ஏற்கனவே, பல்வேறு போட்டிகளில், உலக அரங்கில் தனது ஆதிக்கத்தை செலுத்தி வருகிறது சீனா. கால்பந்து போட்டியிலும் அசத்த, மாரடோனா பயிற்சியாளர் ஆகலாம் எனத் தெரிகிறது.

# ஈட்டி எறிதலில் தங்கம் வென்ற டிரினிடாட் வீரருக்கு பெருவரவேற்பு



(போர்ட் ஆப் ஸ்பெயின்)

லண்டன் ஒலிம்பிக்கில் ஈட்டி எறிதலில் டிரினிடாட் அண்ட் டொபாக்கோ வீரர் 19 வயதான கேஷோர்ன் வால்காட் 84.58 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கம் வென்றார். இதன் மூலம் ஒலிம்பிக் ஈட்டி எறிதல் வரலாற்றில் சம்பியன் ஆன இளம் வீரர் என்ற சிறப்பையும் அவர் பெற்றார். 13 இலட்சம் மக்கம் தொகையை கொண்ட டிரினிடாட் அண்ட் டொபாக்கோ நாடு கரீபியன் தீவில் அமைந்தும்ளது. டிரினிடாட் சார்பில் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற 2ஆவது வீரர் வால்காட் ஆவர். இதற்கு முன்பு 1976ஆம் ஆண்டு ஹாஸ்லே கிராவ் போர்ட் என்ற டிரினிடாட் வீரர் .00 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் பெற்றிருந்தார். 36 ஆண்டுகளுக்கு பிறகு முதன்முறையாக இந்த ஒலிம்பிக்கில் தங்கம் கிடைத்ததால் அந்த நாடு முழுவதும் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. தாயகம் திரும்பியபோது தேசிய விடுமுறை தினமாக அந்த நாட்டின் பிரதமர் கம்லா பெர்சாத் பிஸ்செஸ்சார் அறிவித்தார். விமான நிலையத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் கூடி நின்று அவருக்கு வரவேற்பளித்தனர்.

ஒலிம்பிக்கில் சாதித்த வால்காட்டுக்கு 51/2கோடி ரூபாய் ஊக்கத் தொகையாக பிரதமர் கம்லா பெர்சாத் வழங்கினார். மேலும் அவருக்கு சுமார் ரூ.14 கோடி மதிப்புள்ள சொகுசு வீடு மற்றும் அவரது ஊர் அருகே 20 ஆயிரம் சதுர அடி நிலமும் வழங்கப்படுகிறது. அத்துடன் அங்குள்ள வரலாற்று சிறப்பு மிக்க கலங்கரை விளக்கம், ஒரு கரீபியன் ஏர்லைன்ஸ் விமானம் ஆகியவற்றுக்கு அவரது பெயர் சூட்டப்படும் என்றும் கம்லா அறிவித்தார்.

# கிரிக்கெட் சபையிடம் மன்னிப்புக் கோரிய கெவின்

(லண்டன்)

சக வீரர்கள் மற்றும் பயிற்சியாளர் குறித்து தரக்குறைவாக விமர்சித்து, சகலதுறை வீரர் கெவின் பீற்றர்சன் தென்னாபிரிக்க வீரர்களுக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பியதால் சர்ச்சை எழுந்தது. இதையடுத்து, தென்னாபிரிக்க அணியுடன் 3ஆவது டெஸ்ட் போட்டியில் மோதவுள்ள இங்கிலாந்து அணியில் இருந்து பீற்றர்சன் அதிரடியாக நீக்கப்பட்டார். உலகக் கிண்ண ருவெண்ரி-20 போட்டித் தொடருக்கான இங்கிலாந்து அணியிலும் அவர் தேர்வு செய்யப்படுவது கேள்விக் குறியானது.

உலக கிண்ணத்தில் விளையாட ஆர்வமாக உள்ள பீற்றர்சன், கிரிக்கெட் சபையுடன் சமரசம் செய்துகொள்ள முயன்று வருகிறார். தனது செயலுக்காக வருந்துவதாகவும், கிரிக்கெட் சபையிடம் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்டுக் கொள்வதாகவும் அவர் கடிதம் அனுப்பியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பரா ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கை வீரர்களும் தகுதி


(கொழும்பு)

லண்டன் 2012 பரா ஒலிம்பிக் விளையாட்டு நிகழ்ச்சிகளில் 07 இலங்கை வீரர்களும், வீராங்கனைகளும் பங்குபற்ற தகுதி பெற்றுள்ளனர்.

எதிர்வரும் 29 முதல் செப்டம்பர் 09 வரை இப்போட்டிகள் நடைபெறுமென இலங்கை பரா ஒலிம்பிக் குழு தெரிவித்துள்ளது.

பிரதீப் சஞ்சய, லால் பட்டிவில, துமீர மதுரங்க, அமர இந்துமதி, லெஸ்லி லியனகே, உபாலி ராஜகருண, டி. எம். காமினி ஆகியோரே இந்த வீரர்களும், வீராங்கனைகளும் ஆவர். உடல் அவயவங் கள் அகற்றப்பட்டவர்கள்இப் போட்டிகளில் பங்கு பற்றுகின்றனர்

# அமெரிக்க ஓப்பன்; நடால் விலகல்




(நியூயோர்க்)

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டி வருகிற 27ஆம் திகதி நியூயோர்க்கில் ஆரம்பமாகவுள்ளது. இந்தப் போட்டியில் இருந்து உலகின் 3ஆம் நிலை வீரரும், 2010ஆம் ஆண்டு சம்பியனுமான ஸ்பெயினின் ரபெல் நடால் காயம் காரணமாக விலகியுள்ளார்.

விம்பிள்டனில் 2ஆவது சுற்றில் அதிர்ச்சி தோல்வி கண்ட பின்னர் நடால் எந்த சர்வதேச போட்டியிலும் கலந்து கொள்ளவில்லை. லண்டன் ஒலிம்பிக்கில் ஸ்பெயின் அணிக்காக தேசிய கொடியை ஏந்தி செல்லும் கௌரவம் கிடைத்த போதிலும் காயத்தால் அதிலும் சோகத்துடன் விலக நேரிட்டது. இந்த நிலையில் கால் முட்டியில் ஏற்பட்டுள்ள காயம் இன்னும் முழுமையாக குணமடையாததால் அமெரிக்க ஓப்பனில் இருந்தும் விலகுவதாக அவர் அறிவித்துள்ளார்.

# லீனா கபூருடன் எவ்வித உறவும் இல்லை என்கிறார் அசாத் ரவுப்



(லாகூர்)

மொடல் அழகி லீனா கபூருடன் (வயது-21) புகைப்படம் எடுத்துக் கொண்டது உண்மை. ஆனால் அவருடன் எனக்கு எந்த உறவும் கிடையாது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் நடுவர் அசாத் ரவுப் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

அசாத், தன்னை திருமணம் செய்துகொள்வதாகக் கூறி ஏமாற்றிவிட்டார் என்று கூறி மும்பையைச் சேர்ந்த மொடல் அழகி லீனா கபூர், மும்பை பாந்த்ராவில் துணை காவல் ஆணையர் பிரதாப்பிடம் முறைப்பாடு கொடுத்துள்ளார். இதற்கு மறுப்புத் தெரிவித்தே ரவுப் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

லீனா கபூர் கொடுத்திருந்த முறைப்பாட்டடில், கடந்த மார்ச் மாதம் இலங்கையில் வைத்து நாங்கள் இருவரும் நண்பர்களானோம். அப்போது இருவரும் தொலைபேசி இலக்கங்களை பரிமாறிக் கொண்டோம். பின்னர் இருவரும் நெருங்கிய நண்பர்கள் ஆனோம்.

நான் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தபோது மும்பையில் வந்து ரவுப் என்னைப் பார்த்தார். டில்லியில் நிறைய பேரிடம் தன்னுடைய மனைவி என்றே என்னை அறிமுகப்படுத்தினார்.

மேலும் தன்னை திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்து விட்டு பலமுறை பாலியல் ரீதியாக தன்னைப் பயன்படுத்தி வந்ததாகவும் ரவுப் என்னுடன் மொத்தம் 15 முறை உறவு வைத்துக்கொண்டார். ஆனால் அவர்என்னை ஏமாற்றி விட்டார்.

இலங்கையில் 3 நாட்கள் நான் ரவுப்புடன் இணைந்து ஒரே விடுதி அறையில், ஒரே பெட்டில் தங்கியிருந்தேன். அப்போது நாங்கள் மிகுந்த உணர்ச்சிகரமான உறவை வைத்துக் கொண்டோம்.

பின்னர் நான் மும்பை திரும்பியதும் உடல் நலம் பாதிக்கப்பட்டதால் என்னைப் பார்க்க வந்திருந்தார் 7 நாட்கள் என்னுடைய லோகந்த்வாலா குடியிருப்பில் என்னுடன் தங்கினார். அப்போது 6 முறை உறவு வைத்துக் கொண்டார் எனத் தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்த முறைப்பாடுகளை அசாத் மறுத்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், லீனா கபூர் யார் என்றே எனக்குத் தெரியாது. எனக்கு நிறைய பெண் இரசிகர்கள் உள்ளனர். அவர்களுடன் நான் பல புகைப்படங்களை எடுத்துள்ளேன். இதைப் பயன்படுத்திக் கொண்டு லீனா என்னை அச்சுறுத்தல் செய்ய முயற்சிக்கிறார். எனக்கு 56 வயது. இந்த வயதில் இதுபோன்ற செயல்களில் என்னால் ஈடுபட முடியாது. எனக்கு திருமணம் முடிந்து இரு பிள்ளைகள் உள்ளனர். இவ்வாறிருக்க நான் எவ்வாறு லீனாவை திருமணம் செய்துகொள்ள உறுதியளித்திருப்பேன் என்றார்.

# நியூசிலாந்து அணியில் மீண்டும் விட்டோரி

(வெலிங்டன்)

உலக கிண்ண ருவெண்ரி - 20 போட்டிக்கான நியூசிலாந்து அணியில், அனுபவ சகலதுறை வீரர் டானியல் விட்டோரி சேர்க்கப்பட்டுள்ளார். காயம் காரணமாக இந்திய அணியுடனான டெஸ்ட் தொடரில் இடம் பெறாத அவர், ருவெண்ரி -20 போட்டியில் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா, நியூசிலாந்து மோதும் ருவெண்ரி -20 போட்டிகள் அடுத்த மாதம் 8, 11 திகதிகளில் நடைபெற உள்ளன. வேகப்பந்து வீச்சாளர் ஆடம் மில்னிக்கிற்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த சிறந்த முறையில் செயற்படும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. உலகக் கிண்ண ருவெண்ரி -20 தொடர் என்பது அதிர்ஷ்டவசமானது. இதில் முழுத் திறமையையும் வெளிப்படுத்தவேண்டும். விட்டோரியின் மீள் வருகை அணிக்குப் பெரும் பலமாக அமையும் என நியூசிலாந்து கிரிக்கெட் சபையின் பிரதம தேர்வாளர் தெரிவித்தார்.

அறிவிக்கப்பட்டுள்ள ருவெண்ரி -20 நியூசிலாந்து விபரம்: மார்டின் கப்தில், ராப் நிகோல், பிரெண்டன் மக்கல்லம், ரோஸ் டெய்லர் (கப்டன்), வில்லியம்சன், வாட்லிங், பிராங்க்ளின், ஜேக்கப் ஓரம், நாதன் மக்கல்லம், விட்டோரி, கைல் மில்ஸ், டக் பிரேஸ்வெல், டிம் சௌத்தி, ரோனி ஹிரா, ஆடம் மில்னி.

# பகலிரவு டெஸ்ட் இந்தியாவில் அறிமுகம்?

(லண்டன்)

பகல்-இரவு டெஸ்ட் போட்டியை இந்தியாவில் முதன் முறையாக நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது மெர்லிபோன் கிரிக்கெட் கிளப் சர்வதேச கிரிக்கெட் சபைக்கு பரிந்துரைத்துள்ளது.

கிரிக்கெட்டில் ருவெண்ரி -20, ஒருநாள் போட்டி மற்றும் டெஸ்ட் ஆகிய 3 நிலைகள் உள்ளன. 3 மணி நேரம் நடைபெறும் ருவெண்ரி -20 போட்டி ரசிகர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளன. ருவெண்ரி -20 போட்டியின் வருகையால் 5 நாள் நடைபெறும் டெஸ்ட் போட்டியை பார்க்க வரும் ரசிகர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து உள்ளன. இதனால் டெஸ்ட் போட்டிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. சில காலங்களில் டெஸ்ட் போட்டி அழிந்துவிடும் என்ற அச்சம் ஏற்பட்டு உள்ளது. டெஸ்ட் போட்டியை பாதுகாக்க சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) பல்வேறு நடவடிக்கைகளில் இறங்கி உள்ளது. ரசிகர்களை கவரும் வகையில் டெஸ்ட் போட்டியை பகல்-இரவாக நடத்தலாம் என்று முடிவு செய்துள்ளது. அதன்படி பகல்-இரவு டெஸ்ட் போட்டியை இந்தியாவில் முதல் முறை யாக நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

கிரிக்கெட்டின் சட்ட மேதை என்று கருதப்படும் எம்.சி.சி (மெர்லிபோன் கிரிக்கெட் கிளப்) பகல்- இரவு டெஸ்டை இந்தியாவில் அறிமுகப்படுத்தலாம் என்று பரிந்துரை செய்துள்ளது. அந்த கிளப்பின் வருடாந்திர கூட்டத்தில் இது குறித்து முடிவு செய்யப்பட்டுள்ளது. கிரிக்கெட்டை அதிகமாக பார்க்கும் இந்தியாவில் டெஸ்டை நேரில் பார்க்கும் ஆர்வம் குறைந்து உள்ளது.

இதனால்தான் இந்தியாவில் பகல்- இரவு டெஸ்டை முதலில் நடத்தலாம் என்று எம்.சி.சி. பரிந்துரை செய்து உள்ளது. மும்பை, சென்னை, கொல்கத்தா, பெங்களூர் ஆகிய நகரங்களில் பகல்- இரவு டெஸ்ட் நடைபெறலாம் என்று கூறப்படுகிறது. டெஸ்ட் போட்டிக்கான வெள்ளை சீருடையில் மாற்றம் இருக்காது என்று தெரிகிறது. இளம் சிவப்பு கலரில் பந்து பயன் படுத்தப்படலாம் என்றும் கூறப்படுகிறது.







யாழ். செயலக நலன்புரிச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் யாழ். அரச அதிபர் வெற்றிக் கிண்ண வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ள சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியையும், யாழ். மாவட்ட செயலக அணியையும் காணலாம். இரு அணிகளுக்குமிடையிலான இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (12)

விளையாட்டுச் செய்திகள்

# சுன்னாகம் ஐயனார் வெற்றி

(சுன்னாகம்)

இணுவில் க லாஜோதி அணிக்கும் சுன்னாகம் ஐயனார் அணிக்குமிடையிலான சிநேகபூர்வமான கால்பந்தாட்டப் போட்டியில் சுன்னாகம் ஐயனார் அணி வெற்றிபெற்றது.

இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில்நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் சிறப்பான முறையில் ஆடியிருந்தனர். இருப்பினும் சுன்னாகம் ஐயனார் அணி வீரர்களின் வேகமான ஆட்டமும், சிறப்பான பந்துப் பரிமாற்றமும் அந்த அணிக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தது. இப்போட்டியின் பிரதம நடுவராக எஸ். பாலசிங்கம் கடமையாற்றினார். (120)

# வெற்றிபெற்ற அணிகள்

(நெல்லியடி)

நெல்லியடி மாலுச்சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடரின் முதல் சுற்று ஆட்டத்தில் ஹென்றீஸ், றோயல் அணிகள் வெற்றிபெற்றன. கடந்த 8ஆம் திகதி நடைபெற்ற முதல் போட்டியில் சென்லூட்ஸ் அணி 6-0 என்ற கோல் கணக்கில் ஹென்றீஸ் அணியும், இரண்டாவது போட்டியில் டைமன் அணியை 2-0 என்ற கோல் கணக்கில் றோயல் அணியும் வெற்றிபெற்றன. (18)

# கால்பந்தாட்ட ஓர்மம் காலாவதியாகிவிட்டதா?

(யாழ்ப்பாணம்)

ஒரு காலத்தில் யாழ்ப்பாணக் கால்பந்து வாழ்வியல் பண்பாட்டுக் கலைகளில் ஒன்றாக விளங்கியது. ஆனால், இன்றைய நிலையில் அது அவ்வாறு இல்லாமல் இருப்பது கவலை அளிப்பதாக கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்கின் ஆ லோசகர் அன்ரன் அன்பழகன் தெரிவித்தார்.

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற ஒரு நாள் கால்பந்து திருவிழா போட்டி குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எழுபதுகளில் யாழ்ப்பாணச் சாதரண மனிதர்களின் ஆகர்சிப்பாக கால்ப்பந்தாட்டம் விளங்கியது. அது அவர்களின் வாழ்வியல் பண்பாட்டுக் கலைகளில் ஒன்றாகவும் விளங்கியது என்று கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அப்போது யாழ்ப்பாணத்திலேயே சிறப்பான அணிகள் இருந்தன. தேசிய மட்டப்போட்டிகளில் கொழும்பைக் கூட அவை தோற்கடித்தன.

1974 இல் அநுராதபுரத்தில் நடைப்பெற்ற விளையாட்டு அமைச்சின் தேசிய விளையாட்டு விழாவின் இறுதிப் போட்டியில் கொழும்பு மாவட்ட அணியை யாழ். மாவட்ட அணி 4.1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து சம்பியனாகியது பழைய கதையாகிவிட்டது.

அந்தக் காலங்களில் யாழ்ப்பாணப் பாடசாலைகளில் விளையாட்டுச்சங்கம் எனும் அமைப்பினால் நடத்தப்படும் போட்டிகள் மிகப்பிரபல்யமானவை. துரையப்பா விளையாட்டரங்கு மனித தலைகளால் நிறைந்திருக்கும். அப்போட்டியில் எப்போதும் முன்னிலை வகிப்பவர்கள் கே.கே.எஸ் வீதியின் பிரபல பாடசாலைகளான மகாஜனாகல்லூரி, யூனியன் கல்லூரி, நடேஸ்வரா கல்லூா,ி ஸ்கந்தவரோதயா கல்லூரி, அருனோதயாக்கல்லூரி,கொக்குவில் இந்துக்கல்லூரி,யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி என்பன காலிறுதிகளை எட்டும் கல்லூரிகளாகத் திகழ்ந்தது. அந்த கால பாடசாலைகளின் வீரர்களே இன்று வரை பேசப்படுபவர்களாக திகழ்கின்றனர்.

அப்பாடசாலைகளுக்காக லொறிகளில் வரும் ஆதரவாளர்களுகிடையேயான மோதல்களும் நினைவு மீளும் பல சுவையான கதைகளையும் கொண்டிருக்கும். எமது துரதிஸ்திட்டம் ஐரோப்பிய நாடுகளைப் போன்று கால்பந்தை மையமாகக் கொண்ட கலைப் படைப்புக்கள் சிறுகதைகள்நாவல்கள் தமிழில் உருவாக வில்லை.



இந்த யாழ்ப்பாணப் பாடசாலைகளில் விளையாட்டுச்சங்கம் உருவாக்கிய கால்பந்து பிரபலங்கள் பலர் இணைந்து ஐக்கிய இராட்சியத்திலும் முதலில் யாழ்ப் பாணப் பாடசாலைகள் விளையாட்டுச்சங்கத்தை உருவாக்கினார்கள்காலத்தின் தேவை கருதி இப்போது அது தமிழா் பாடசாலைகள்விளையாட்டுச் சங்கமாக மாறிவிட்டது. அப்பா அம்மாவின் பாடசாலைகளுக்காக பிள்ளைகள் லண்டன் பாடசாலைகளில் படித்துக்கொண்டே இப்போதும் கால்பந்து மையங்களில் உதைபந்து போட்டிகளில் பங்குபற்றுகின்றார்கள். உறவுப் பாலமாக அவர்களின் செயற்பாடுகள் மிகவும் வரவேற்க வேண்டியது ஆகும்.

அதுமட்டுமல்ல போர் மற்றும் மீள்குடியேற்றத்தின் அவலங்களையும் கடந்து கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்கின் நாச்சிக்குடா சென்மேரிஸ் அணி இந்தக் கால்பந்தாட்ட விழாவின் சம்பியன் ஆனமை பெருமிதம் கொள்ளக் கூடிய விடயமாகும்.

இரண்டாம் உலக யுத்தம் தந்திருந்த போரின் நெருக்கடிகளையும் தோல்வியின் வலிகளையும் கடந்து வர ஜேர்மனியர்களாகிய தாம் கௌரவத்தோடு உலகம் வியந்து பார்க்க உதவியது.

கால்பந்து மட்டுமே அவலங்களினூடான சினேகபூர்வப் போட்டியின் வெற்றியும் 1952 உலகக் கிண்ணப்போட்டியில் ஜேர்மன் சம்பியனாகியதுமே மீளவும் கௌரவத்தை பெற்றுத்தந்தது என முன்பு இங்கு வந்திருந்த ஜேர்மனிய கால்பந்தாட்ட பயிற்றுநர் தருமன் தெரிவித்திருந்தார் எனக் குறிப்பிட்டார்.

# ஆவரங்கால் மத்தி நடத்தும் வடமாகாண மட்ட கரப்பந்தாட்டம்

(ஆவரங்கால்)

ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகத்தினால் வடமாகாண ரீதியிலான கரப்பந்தாட்டத் தொடர் நடத்தப்பட்டு வருகின்றது.

கடந்த 13ஆம் திகதி முதல் இடம் பெற்று வரும் இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போட்டிஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டித் தொடரில் வடமாகாணத்தைச் சேர்ந்த முன்னணி அணிக-ளான ஆவரங்கால் இந்து இளைஞர், புத்தூர் கலைமதி, உடுப்பிட்டிநவஜீவன், மட்டுவில் ஐங்கரன், கைதடி குமரன், புத்தூர் வளர்மதி, காங்கேசன்துறை ஐக்கியம், அச்சுவேலி ஸ்ரார், நாயன்மார்கட்டு பாரதி, நீர்வேலி ஐக்கியம், பன்னாலை கணேசா, ஆவரங்கால் மத்தி, அச்சுவேலி விக்னேஸ்வரா போன்ற அணிகள் பங்குகொள்கின்றன.

இப்போட்டித் தொடரில் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் அணிக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (93)

# விரைவில்

இலங்கைப் பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் விரைவில் இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் நிறைவுற்ற நிலையில் இரண்டாவது சுற்றுப் போட்டிக்கான அணி நிரல் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இப்போட்டிகள் விரைவில் இடம்பெறவுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். இதில் யாழ். மாவட்டத்தில் எட்டு அணிகள் இரண்டாவது சுற்றுத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)






கோண்டாவில் சிறுவர் உலகம் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த 12ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் சிறப்புற இடம்பெற்றது. இதில் சிறார்களின் வண்ணமயமான பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றது. இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக லயன் டாக்டர் வி. தியாகராஜா, முன்பள்ளிப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் உட்பட பெற்றோர், கிராமப் பெரியோர் என பலர் கலந்து கொண்டு சிறார்களை உற்சாகப்படுத்தினர். இப்போட்டி நிகழ்வின்போது சிறார்களின் விளையாட்டு நிகழ்வைக் காணலாம்.

# களநிலையைப் புரிந்துகொள்ளாத கருணாநிதியின் கரிசனைகள்?

**- சாலையூரான் -**




**போ**ரினால் பாதிப்புக்குள்ளான வடக்கு கிழக்கு தமிழர்களின் உரிமைக்காக எனக் கூறி சென்னை ராயப்பேட்டை வை.எம்.சி.ஏ மைதானத்தில் ஏற்பாடு செய்திருந்த மாநாடு வெற்றிகரமாக நிறைவடைந்திருப்பதாக கலைஞர் கருணாநிதி தனது மகிழ்ச்சியை வெளியிட்டு இருக்கின்றார்.

புலிகளின் அழிவுக்குப் பின்னர் பாதிப்புக்குள்ளான வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் உரிமை மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை முன்னிறுத்தி ஒரு புறத்தே தமிழ் தேசியவாதிகளும், புலம்பெயர் தமிழ்த் தலைமைகளும் இலங்கை அரசை சர்வதேசத்தின் முன்னால் நிறுத்தி இருக்கும் நிலையில் கருணாநிதியின் இந்த மாநாடு நடந்து முடிந்திருக்கிறது.

வடக்கு கிழக்கில் அரசுக்கு எதிராக அரசியல் நடத்தும் தமிழ்த் தேசிய தலைமைகள் மட்டுமன்றி புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் தமிழர் அமைப்புக்களும் கூட இந்த மாநாட்டை நிராகரித்திருக்கின்றன என்பது இங்கே கவனத்துக்குரிய ஒரு விடயம்.

இந்திய மத்திய அரசும், அதனைத் தொடர்புபடுத்தி ஐக்கிய நாடுகள் சபையும் இலங்கை தமிழர் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்தி கருணாநிதி ஏற்பாடு செய்திருந்த இந்த மாநாட்டை வடக்கு கிழக்கு தமிழ்த் தேசிய தலைமைகள் ஏன் நிராகரித்து இருக்கின்றன என்பது இவ்விடத்தில் கவனத்துக்குரிய ஒரு பிரச்சினையாகும்.

இந்த மாநாட்டில் தாமும் கலந்துகொள்வோமென கலைஞரிடம் வாக்குறுதியளித்திருந்த - முன்பு தெரிவித்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா பிறகு கலந்துகொள்ளாமல் நிறுத்திக்கொண்டார். ஏற்கனவே இந்தியாவுடன் நெருக்கத்தைக் கொண்டிருந்த கூட்டமைப்பின் எம்பிக்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் கலந்துகொள்வதாக அறிவித்து விட்டு பின்பு அதனைத் தவிர்த்துக் கொண்டார்கள். இவர்களோடு வைகோ, சீமான், நெடுமாறன் ஆகியோரும் இந்த மாநாட்டை தவிர்த்திருக் கிறார்கள்.

தமிழ் நாட்டை பின்புலமாகக் கொண்டு ஈழ விடுதலை இயக்கங்கள் உருவாக்கம் பெற்ற ஒரு சூழலில் தாம் வழங்க முன் வந்த நிதியுதவியை ஏனைய அமைப்புக்கள் பெற்றுக் கொண்ட போதும் புலிகளின் தலைவர் பிரபாகரன் பெற்றுக்கொள்ளாமல் அதனை நிராகரித்தமைக்காக புலிகளுக்கான தனது ஆதரவை கருணாநிதி நீண்ட காலமாகவே நிராகரித்து வந்திருக்கின்றார்.

புலிகளுக்கெதிராக இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட இறுதிப் போரின் போது கூட தமிழ் மக்கள் பெரும் அழிவுகளை எதிர்கொள்ள நேரிட்ட அந்த அவலமான சூழலிலும், அப்போது முதலமைச்சராக இருந்த கருணாநிதி பிரபாகரன் மீது இருந்த அதிருப்தி காரணத்தால் எதுவுமே வாய் திறக்காது இருந்ததன் மூலம் புலிகளினதும் தமிழ்மக்களதும் அழிவுக்கு மறைமுகக் காரணியாக அவர் செயற்பட்டதையும் யாவருமறிவர்.

இப்போது இலங்கைத்தமிழர் விவகாரத்தை அவர் கையில் எடுத்திருக்கும் விதம் எதிர்பார்த்த பலன்களை அவருக்கு வழங்கவில்லை என்பதையே உணரக் கூடியதாக இருக்கின்றது. உண்மையில் ஈழத் தமிழர் விவகாரத்தை கையாள்வதாயின் தற்சமயம் அதனை சர்வதேசம் கையாளும் குறிப்பான நிலைமையிலிருந்து அவர் அணுகியிருக்க வேண்டும். அவ்வாறு இலங்கை அரசுக்கெதிராக இம்மாநாட்டை நகர்த்துவதாயின் வடக்கு கிழக்கில் செயற்படும் தமிழ்த் தலைமைகள் மற்றும் புலம் பெயர் அமைப்புக்களையும் உள்வாங்கி இம்மாநாட்டை நடத்தியிருக்க வேண்டும்.

இதனைவிட இந்த மாநாட்டில் அவர் முன்மொழிந்திருக்கும் தீர்மானங்கள் இலங்கைத் தமிழர் குறித்து பொதுவான அறிவிப்பாக அமைந்திருக்கின்றனவே அன்றி வடக்கு கிழக்கின் சமகால குறிப்பான நிலைமைகளில் இருந்து முன் வைக்கப்படவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும்.

போர்க் குற்றங்களுக்கு பொறுப்புக் கூறவென நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத்த பரிந்துரைகளை செயற்படுத்த குறிப்பான நிலைமைகளுக்குள் சர்வதேசமும், இலங்கை அரசும் முன்வந்திருக்கும் நிலையில் இவை குறித்த பிரச்சினைகளை கருணாநிதி கவனத்திற் கொணடிருப்பதாக உணர முடியவில்லை.

தவிர இலங்கை அரசுக்கெதிரான நடவடிக்கைகள் பற்றிய அவரது முன்மொழிவுகள் தமிழ் மக்களின் தற்போதைய நிலையில் நடைமுறைக்கு சாத்தியமற்றவை என்பதுடன் தமிழ் மக்களை இலங்கை அரசுக்கு எதிராகத் திருப்பி இன முறுகல் நிலையொன்றை ஏற்படுத்த அவர் மேற்கொள்ளும் ஒரு முயற்சியாகவே உணரமுடிகிறது.

அடுத்ததாக இந்த மாநாட்டின் மூலம் இலங்கை தமிழர்களுக்கு ஏதாவது நன்மைகள் கிடைக்க வேண்டுமாயின் இந்திய மற்றும் இலங்கை அரசின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் ஒரு சந்திப்பாக இம்மாநாட்டை கருணாநிதி ஏற்பாடு செய்திருக்க வேண்டும்.

இம்மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்திற்கு இந்தியா கொண்டு செல்ல வேண்டிய விடயங்கள் பற்றி குறிப்பிட்டிருக்கும் கருணாநிதி இதற்கான வலுவான நிர்ப்பந்தம் ஒன்றை இந்திய அரசுக்கு எதனூடாக ஏற்படுத்த முனைகிறார் என்பது தெளிவற்றதாக இருக்கிறது. இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்திய அரசு ஏற்கனவே என்ன நிகழ்ச்சி நிரலை கொண்டிருக்கிறது என்பதை கருணாநிதி சரியாகக் கவனத்தில் கொண்டிருக்கவில்லை என்பதை அவரது மாநாடு குறிப்பிட்டிருக்கும் தீர்மானங்கள் வெளிக்கொணர்கின்றன.

அதைவிட கருணாநிதியின் இந்த மாநாட்டுத் தீர்மானங்களை இந்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்கு என்ன அவசியம் இருக்கின்றது என்பதையும் அவர் தெளிவுபடுத்த வேண்டும்.

தனது சொந்த நலனோக்கிலாயினும் ஒரு அரசியலை முன்நகர்த்த கள நிலவரங்கள் பற்றிய சரியான புரிதல்கள் இன்றியமையாதவை. இலங்கை விடயத்தில் கருணாநிதி இலங்கைத் தமிழர் பிரச்சினையின் சமகால களநிலவரங்களை சரியாக புரிந்து கொள்ளத் தவறியிருக்கிறார் என்பதை மட்டும் இவ்விடத்தில் கூறிக்கொள்ளலாம்.

## செவ்வாயிலிருந்து புகைப்படங்கள்!



**செ**வ்வாய்க் கிரகம் தொடர்பில் ஆராய்ச்சியை மேற்கொள்வதற்காக நாசாவினால் அனுப்பப்பட்ட "கியூரியோசிட்டி" விண்கலமானது அக்கிரகத்தின் தெளிவான புகைப்படங்களை பூமிக்கு அனுப்பி வருகின்றது. சுமார் 8 மாதங்களாக 352 மில்லியன் மைல்களைக் கடந்து இவ்விண்கலமானது கடந்த 5 ஆம் திகதி செவ்வாய்க் கிரகத்தில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது. செவ்வாய்க் கிரகத்தில் மனிதர்கள் வாழக்கூடிய சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆராய்ச்சி மேற்கொள்வதே "கியூரியோசிட்டி"யின் பிரதான இலக்காகும். இந்நிலையில் தற்போது அவ் விண்கலமானது செவ்வாய்க் கிரகத்தின் தெளிவான வண்ணப் புகைப்படங்களை பூமிக்கு அனுப்பி வருகின்றது. "கியூரியோசிட்டியின்" தெளிவான இப்புகைப்படங்கள் செவ்வாய்க் கிரகத்தினை எம் கண்முன்னே நிறுத்துகின்றது. இதனைத் தவிர அவ்விண்கலமானது தனது புகைப்படத்தினையே அதாவது விண்கலத்தின் புகைப்படத்தினையும் அனுப்பியுள்ளது. விஞ்ஞானிகள் விண்கலத்தின் பாகங்களின் நிலைகுறித்துத் தெரிந்துகொள்ளவே இதனை அது அனுப்பியுள்ளது. இதேவேளை கியூரியோசிட்டியின் மென்பொருளை மேம்படுத்தும் நடவடிக்கையிலும் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். குறித்த விண்கலமானது அங்கு தரையிறங்கிய நாள் முதல் அதற்கு வழங்கப்பட்ட கட்டளைகளைச் சரிவர செய்து வருவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

## கூந்தல் கிராமம்!

**பெ**ண்களின் கூந்தல் அழகை வர்ணித்து, கவிதை பாடாத கவிஞர்களே இல்லை. "பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணம் உண்டா?" என்பது பற்றி, சர்ச்சை எழுந்து, அதற்காக, "நெற்றிக் கண்ணை திறப்பினும், குற்றம் குற்றமே" என, சிவபெருமான் மீது, நக்கீரர் குற்றஞ் சாட்டியதை, திருவிளையாடல் கதையில் படித்திருக்கிறோம்.

இப்போது, நீண்ட கூந்தல் என்பது, பழங்கதையாகி விட்டது. மாறி வரும் நவீன உலகத்துக்கு ஏற்ப, கூந்தலை, தங்களுக்கு தேவையான அளவு மட்டும் வளர்த்துக் கொள்கின்றனர் இன்றைய பெண்கள். ஆனாலும், சீனாவில் ஹூயாங்குலோ என்ற கிராமத்தில் வசிக்கும் பெண்கள், இன்றும், தங்களின் கூந்தலுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பராமரித்து, வளர்த்து வருகின்றனர். இந்த கிராமத்தில், 82 வீடுகள் உள்ளன. இங்கு வசிப்பவர்கள், சிவப்பு யவோ இனத்தினர் என அழைக்கப் படுகின்றனர். இங்கு வசிக்கும் பெண்கள் மட்டுமல்லாது, ஆண்களும், சிவப்பு நிறத்தாலான உடைகளைத் தான் அணிகின்றனர்.

இங்கு வசிக்கும் அனைத்துப் பெண்களுமே, மிக நீண்ட கூந்தலை உடையவர்கள். இவர்களின் கூந்தல் அளவு, சராசரியாக, ஐந்தடி முதல், ஏழு அடி வரை உள்ளது. மிக நீண்ட கூந்தலைக் கொண்ட பெண்கள் வசிக்கும் கிராமம் என்ற பெருமையும், இதற்கு உள்ளது. இதற்காக கின்னஸ் சான்றிதழும், இந்த கிராமத்துக்கு கிடைத்துள்ளது.

இங்குள்ள பெண்களின் கூந்தலுக்கு, பாரம்பரியமும், வரலாறும் உள்ளது. கூந்தல் விவகாரத்தில், கடுமையான விதிமுறைகளும் பின்பற்றப்படுகிறது. இங்குள்ள பெண்கள், தங்கள் கூந்தலை எப்போதுமே, அள்ளி முடிந்து, மூன்று அடுக்கு கொண்டை போட்டிருப்பர். பெண்கள், கூந்தலை விரிக்கும்போது, அதன் அழகை, அவர்களின் கணவர்களும், குழந்தைகளும் மட்டுமே பார்க்க வேண்டும். மற்ற வெளி நபர்கள் யாரும் பார்க்கக் கூடாது. மீறி யாராவது பார்த்தால், அவர்கள், அந்த பெண்ணின் வீட்டிலேயே, மூன்று ஆண்டுகள் தங்கியிருந்து வேலை செய்ய வேண்டும்.

கோடை காலங்களில், ஆற்றுக்குச் சென்று, அங்கு ஓடும் தண்ணீரில், கூந்தலை அலசிக் கொள்வர். அப்போது, அங்கு ஆண்களுக்கு அனுமதி இல்லை. கடந்த 1987ம் ஆண்டு வரை, இந்த கடுமையான விதிமுறைகள், பின்பற்றப்பட்டு வந்தன. இப்போது, இந்த விதிமுறைகளுக்கு மதிப்பில்லை. பெண்கள், தாங்கள் விரும்பும்போது, எப்போது வேண்டுமானாலும், கூந்தலை விரித்து, அதன் அழகை ரசிக்கலாம், சீவலாம், சிக்கெடுக்கலாம்.

இங்குள்ள பெண்கள், 16 வயதை எட்டும்போது மட்டும், கூந்தலை வெட்டிக் கொள்கின்றனர். அதற்குப் பின், தங்கள் வாழ்நாளில் எப்போதுமே, கூந்தலை வெட்டிக் கொள்வது இல்லை. இப்படி வெட்டப்பட்ட கூந்தலையும், தூக்கி எறிந்துவிட மாட்டார்கள். அந்தப் பெண்ணின், பாட்டியிடம், துண்டிக்கப்பட்ட கூந்தல் கொடுக்கப்படும். அதை அவர், சவுரியாக மாற்றி, அந்தப் பெண்ணை திருமணம் முடிக்கும் மாப்பிள்ளையிடம், திருமண நாளன்று கொடுப்பார்.

கூந்தலை கொண்டையிட்டுக் கொள்வதிலும், கடுமையான விதிமுறைகள் உண்டு. திருமணமாகி, குழந்தைகள் இல்லாத பெண்கள், வெறும் கொண்டையுடன் காணப்படுவர். முடியை முன் இழுத்து கொண்டையிட்டிருந்தால், அந்த பெண்ணுக்கு, திருமணமாகி, குழந்தைகள் உள்ளன என்று அர்த்தம். கூந்தலை, துணியால் மூடியிருந்தால், அந்த பெண்ணுக்கு திருமணமாகவில்லை என, புரிந்து கொள்ள வேண்டும்.

கூந்தல் வளர்ப்பதில், பின்பற்றப்பட்டு வந்த, கடுமையான விதிகளில் சில, தற்போது காலாவதி ஆகிவிட்டாலும், நீண்ட கூந்தலை வளர்க்கும் பழக்கத்தை, பெண்கள் தொடர்ந்து பின்பற்றுகின்றனர். அதெல்லாம் சரி, எதற்காக, இந்தப் பெண்கள், நீண்ட கூந்தலை வளர்க்கின்றனர் தெரியுமா? நீண்ட கூந்தல் இருந்தால், ஆயுட் காலம் அதிகரிக்கும், வீட்டில் செல்வம் கொழிக்கும் என்ற நம்பிக்கை இம்மக்களிடம் உள்ளது.



# குருத்தோலை ஞாபகங்கள்


**- மணிமேகலா -**

மாங்காய் கடித்துத் தின்ற காலம், விளாங்காய் பங்குக்காய் சண்டை பிடித்த காலம், செம்புளி புளிக்க புளிக்க கண்களைச் சுருக்கிக் கொண்டு சுவைத்த பொழுதுகள்,.....

கம்பீர ராஜாக்களும் அது போலத் தான்.


ஆண் பெண் சமரசம் நிலவிய வயது!

அது ஒரு காலம்! போருக்கு முன்பான குழந்தைகளின் பள்ளிச் சீருடைக் காலம்!





அது போல ஒன்று தான் குருத்தோலைகளில் பாம்பும், பம்பரமும், மணிக்கூடும்,



காப்புகளும், கண்ணாடியும் செய்து ஏதோ ஒரு விதமான பெருமிதத்தோடு கம்பீர ராணிக ளாய் நடை போட்டிருந்தோம்.

பெரு விரல் காட்டி கோபமும் சின்னவிரல் காட்டி நேசமும் போட்டிருந்தோம். நான் உமக்கு.... தாறன். நீர் எனக்கு... தாறீரா என்று அடிக்கடி பண்டமாற்றுகள் செய்து கொண்டோம்.

வீட்டோரப் புழுதிச் சிறுவர்கள் அவிழும் கால்சட்டையை ஒரு கையால் பிடித்துக் கொண்டு மறுகையால் நீண்ட தடியில் ரின் மூடியை இணைத்து வாகன சாரதியாய் ஆகிக் கொள்ள நாம் எல்லாம் பயணிகளாய் பின்னால் ஓடினோம். வர்க்க பேதம் தெரியா மனசுகள். அதில் தான் நமக்கு எத்தனை ஆனந்தம்! பெருமிதம்!!

சரிந்து நிற்கும் முருங்கை மரம் பஸ்ஸாய் ஆக பேப்பர்கள் எல்லாம் காசாய் ஆனது. தந்தைமார் வேலையால் வரும் நேரம் மண்ணிலும் இலைகுழைகளிலும் சமையல் தயாரானது. குரும்பைகளில் தேரும் கோயிலும் சுற்று மதிலும் செலவில்லாமல் தயாரானது.

இயற்கையோடு அதன் போக்கோடு ஒன்றித்து வாழ்ந்த வாழ்க்கை நமது. நம் குழந்தைகளோ தொழில் நுட்ப யுகத்தில் சீமேந்துக் கட்டிடத்தினுள்ளே வளைய வருகிறார்கள்.

உங்கள் குழந்தைக் காலங்களில் என்ன எல்லாம் செய்தீர்கள்?

# புரட்சிவாதி சீமான்!



நாம் தமிழர் கட்சியின் கொள்கை விளக்க ஆவணத்தைப் படிக்கும்போது தலை சுற்றுகிறது. "இது மற்றுமோர் அரசியல் கட்சி அன்று - மாற்று அரசியல் புரட்சி" "நாங்கள் அரசியல்வாதிகள் அல்ல - புரட்சிவாதிகள்" - என்கிற பிரகடனத்தை செய்திருக்கிறார். எம்ஜிஆரின் அண்ணாயிசம். ஜெயலலிதாவின் அம்மாயிசம், தேமுதிகவின் தலைவரும் நடிகருமான விஜயகாந்த் கட்சியின் கொள்கை இவற்றைக்கூட நாம் புரிந்துகொள்ள முடியும். அகில இந்திய நாடாளும் மக்கள் கட்சியின் தலைவரும் நடிகருமான கார்த்திக் பேசுவதைக்கூட நாம் புரிந்துகொள்ள முடியும். ஆனால் "நாம் தமிழர் கட்சி"யின் ஆவணத்தைத்தான் நாம் புரிந்துகொள்ள முடியவில்லை.

முதலில், "இது மற்றுமோர் அரசியல் கட்சி அன்று" என்று சொல்வதுதான் புரியாத புதிராக இருக்கிறது. அதிமுக, திமுக, தேமுதிக போன்ற கட்சிகளைப் போலத்தான் பேனர்கள் வைக்கிறார்கள், சுவரொட்டி ஒட்டுகிறார்கள், மாநாடு போடுகிறார்கள், கொடி பிடிக்கிறார்கள், "வாழ்க சீமான்" முழக்கமிடுகிறார்கள். ஆவணத்தின் நடத்தை விதிகள்கூட புதிதாகவோ அல்லது முற்போக்கானதாகவோ இல்லை. அப்புறம் எங்கிருந்து வந்தது மாற்று அரசியல் புரட்சி?

"நாங்கள் அரசியல்வாதிகள் அல்லர் - புரட்சிவாதிகள்" என்ற சீமானின் அறிவிப்பைப் பார்த்தவுடன் ஏதோ தமிழ்த் தேச அரசை அமைக்கப் படை அமைத்து, ஆட்சியைக் கைப்பற்றப் போகிறார்களோ என்று பார்த்தால்... "கட்சி பதிவு செய்த நாளிலிருந்து 5 ஆண்டுகளுக்குள் தேர்தல் ஆணையம் நடத்தும் தேர்தல்களில் கட்சி போட்டியிடும் என்று கட்சி உறுதி அளிக்கிறது" இதுதான் புரட்சிவாதிகளுக்கான இலக்கணமாம்.

சீமான் அவர்களே, இந்தியாவில் ஏதாவது புரட்சி செய்ய வேண்டுமென்று விரும்பினால் முதலில் சாதிப்பாகுபாட்டுக்கு எதிராகப் போராடுங்கள். தீண்டாமை, காணாமை, அண்டாமை என்கிற தொட்டால் தீட்டு என்கிற சமூகக் கொடுமை எப்படியெல்லாம் வடிவம் மாறி இப்போதும் தொடர்வதை நாம் தமிழர்கள் உணர்வார்களா? எப்போதெல்லாம் தலித்துகள் தலைநிமிர முயல்கிறார்களோ அப்போதெல்லாம் பெரும் வன்முறை தலித்துகள் மீது திணிக்கப்பட்டது.

புரட்சியாளர் அம்பேத்கர் மிக ஆழமாக ஆய்வு செய்து சாதி ஒழிப்புக்கான களத்தைத் தேர்வு செய்து களமாடினார். தந்தை பெரியார் அதற்காகத்தான் கடவுள் மறுப்புக் கொள்கையையும் இந்துத்துவ எதிர்ப்புக் கொள்கைகளையும் முன்வைத்து சாகும் வரை போராடினார். வடக்கே ஜோதிராவ் பூலே முதல் தெற்கே அய்யா வைகுண்டர் வரை வாழ்நாள் முழுக்க சாதி ஒழிப்புப் போராட்டத்தை நடத்தினார்கள்.

சாதிவெறியில் சேரிக் குடிசைகள் தீக்கிரையாயின. பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்க முடியாது. பொதுப் பாதையில் நடக்க முடியாது. கோவிலுக்குள் நுழைய முடியாது. பொது நீரோட்டத்தில் கலக்க முடியாது.

சிவகங்கை மாவட்டத்தில் இன்னமும் சாதியக் கட்டமைப்பு இருப்பதை அம்மாவட்டத்தில் பிறந்த அண்ணன் சீமான் அறிவாரா என்பது தெரியவில்லை. கரியமாணிக்கம் அம்பலமும் அவருக்குப் பின் வந்த அவரது மகன் ராமசாமி அம்பலமும் சிவகங்கை மாவட்டத்தையே தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் கொடுமையை "நாம் தமிழர்"கள் அறிவார்களா? அங்கு தலித்துகளின் நிலை என்ன என்பதற்கு கண்டதேவி கோவிலே சாட்சி. அங்கு இன்னமும் பழைய நூற்றாண்டுக் கொடுமைகளைச் செய்துவருவது தமிழர்கள்தான். சீமான் தனது புரட்சியை இங்கு ஆரம்பிப்பதே நல்லது.

**- பச்சைத்தமிழன் கட்டுரையிலிருந்து.**



## "மெரினா" பெயர் எப்படி வந்தது?

சென்னை கடற்கரையில், அப்போதைய நவாப் முகமது அலி வாலாஜா என்பவர், குளியல் குளம் இணைந்த கட்டடம் ஒன்றைக் கட்டினார். இதற்கு, "மரைன் வில்லா" என்று பெயர். இது, திரிந்து மெரினா ஆயிற்று. பின்னர், மரைன் வில்லாவை இடித்து விட்டு, அங்கே பல்கலைக்கழக நூலகக் கட்டடத்தைக் கட்டினர். மரைன் வில்லா மறைந்தாலும், "மெரினா" என்ற பெயர் மட்டும் நிலைத்து விட்டது!

**சரி, நம் 'கசூரினா' பெயருக்குக் காரணம் தெரிந்தவர்கள் சொல்லுங்களேன்!**

# சினிமா சினிமா

"பொன்னியின் செல்வன்" கதையில் நடிக்க முயற்சி எடுத்த போது, திடீரென்று அரசியலில் பரபரப்பாகி விட்டதால், அந்த முயற்சியை அப்போது கைவிட்டார் எம்.ஜி.ஆர்., அவருக்குப் பின், அந்தக் கதையை படமாக்க கமல் மற்றும் மணிரத்னம் ஆகியோரும் முயற்சி எடுத்து, அதுவும் பலன் அளிக்கவில்லை. இந்நிலையில், விக்ரம், ஆர்யா, ஜீவாவை வைத்து, அந்த கதையை படமாக்கப் போவதாக அறிவித்துள்ளார் செல்வராகவன். பார்க்கலாம்.



படத்தை ஓடவைப்பதற்கான கவர்ச்சிகரமான தலைப்புகளுக்காகவும் தலையைப் பிய்த்து வருகிறார்கள் கோடம்பாக்கத்தினர். விஷால் நடித்துக் கொண்டிருக்கும் படத்திற்குப் பெயர் "எம்.ஜி.ஆர்." இந்தப் படத்தில் விஷாலுடன் ஒரு பாடலுக்கு குத்தாட்டம் போட்டுள்ளார் சதா. அந்நியன் படத்துக்குப் பிறகு குறிப்பிடும்படியான வாய்ப்புகளின்றி இருக்கும் சதா, வில்லி வேடம் கிடைத்தாலும் நடிக்கப் போவதாகக் கூறுகிறார். இதேவேளை, "சந்தோஷ் சுப்ரமணியம் படத்தில் ஜெயம் ரவியின் அண்ணனாக நடித்த முன்னாள் கிரிக்கெட் வீரர் சடகோபன் ரமேஷ், "எம்.ஜி.ஆர்." படத்திலும் அதுபோன்ற ஒரு பாத்திரத்தில் நடிக்கிறார்.

மணிரத்னம் இயக்கத்தில் பிரபு, கார்த்திக் நடித்த "அக்னி நட்சத்திரம்" படத்தை ரீமேக் செய்வதற்காக அதன் உரிமையை பாலாஜி ரியல் மீடியா நிறுவனம் பெரும் தொகைக்கு பெற்றுள்ளது. இதில் பிரபுவின் மகன் விக்ரம் பிரபுவையும் கார்த்திக்கின் மகன் கௌதமையும் நடிக்க வைக்க பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. "தில்", "தூள்", "கில்லி" படங்களை இயக்கிய தரணி, இந்த இரண்டாம் அக்னி நட்சத்திரத்தை இயக்குவார்.



மலையாளப் படமொன்றில் கௌரவ வேடத்தில் நடிக்க உள்ளார் ஏ.ஆர்.ரஹ்மான். சொந்தமாக இசை அல்பம் வெளியிட்டு அதில் பாடல்கள் பாடி நடித்திருந்த போதிலும், சினிமாவில் நடிக்க பல இயக்குனர்கள் கேட்டபோது மறுத்திருக்கிறார். இந்நிலையில் ஏ.ஆர்.ரஹ்மானிடம் பணியாற்றியவர் ஹீரோவாக நடிக்கும் முழுநீள நகைச்சுவைப் படத்தில் கௌரவ வேடத்தில் நடிப்பதற்கு ரஹ்மானிடம் கேட்டுள்ளார்கள். ஒப்பந்தம் இன்னும் கையெழுத்திடவில்லை. ஆனால் சம்மதிப்பார் என்ற நம்பிக்கை இருப்பதாக இயக்குனர் ஷஜுன் கரியால் தெரிவித்திருக்கிறார். ரகுமானிடம் பணியாற்றிய தீபக் தேவ் இசை அமைக்கிறார்.



அஜீத் நடித்து, விஷ்ணுவர்தன் இயக்கும் படத்தில், உதவி இயக்குனராக பணியாற்றுகிறார் நயன்தாரா. தான் சொந்தமாக இயக்குவதற்காக ஆணாதிக்கத்துக்கு எதிரான சில அதிரடிக் கதைகளை கைவசம் வைத்திருக்கிறாராம். இதையறிந்தோ என்னவோ சிம்பு திரும்பவும் தன் படத்தில் நயன்தாராவை நடிக்க வைக்க வலைவீசி வருகிறாராம். ஒரு பெண்ணை எத்தனை முறைதான், எத்தனை பேர்தான் ஏமாற்றுவார்கள்!

# நாடிவரும் அடியவர்க்கு கருணை வழங்கும் கந்தன்

இலங்கை திருநாட்டில் அமைந்த சைவத்திருத் தலங்களில் வரலாற்றுச்சிறப்பினையும் புதுமைத்தன் மையையும் எடுத்தியம்பும் ஆலயமாக ஸ்ரீ செல் வச்சந்நிதி முருகன் ஆலயம் விளங்குகின்றது. இவ்வாலயம் யாழ்ப்பாண மாவட்டத்தின் வட மராட்சி பகுதியில் இந்து சமுத்திரத்துக்கும் சரித்திரத்திற்கும் தொடர்புடைய தொண்டைமா னாறு எனும் வளம் கொழிக்கும் கிராமத்தில் அமைந்துள்ளது. உலகில் எவ்விடத்திலும் காணாத தனித்துவத்தையும் மகத்துவத்தையும் உணர்த்தக் கூடிய திருவருள்மிக்க தமிழ் கடவுள் முருகன் ஆலயமாக அன்று தொட்டு இன்றுவரை பிரகா சித்துக்கொண்டிருக்கின்றது. தினமும் கந்தவேல் பெருமானின் அருளை பெறுவதற்காக ஆங் காங்கே இருந்து அடியவர்கூட்டம் அலை மோதுகின்றதுடன் நாடி வரும் அடியார்களுக்கு கருணை கடலில் மூழ்கி திருவருள் கடாற் சத்தின்பின் பிரசாதங்களும் தினம் உண்டுகளைப்பாறும் கந்தனாக விளங்குவதுடன் அன்னதான கந் தன் என்ற சிறப்புப் பெயரும் உண்டு சந்நிதி முருகளுக்கும் கதிர்காம கந்தனுக்கும் பின்னிப் பிணைந்த தொடர்புடன் கந்தபுரானத் துடன் தொடர்புடைய ஆலயமாக சந்நிதி வேல் முருகள் விளங்கு கின்றது. எனவே இவ் ஆலயத் தில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய ஒருங்கமைந்த ஆலயமாக திகழுவதுடன் பல வரலாற்று தத்துவங்களையும் உணர்த்தி நின்றன்றது. இதனடிப்படையில் திருச்செந்தூர்ப்பதியிலிருந்து கந்தப்பெருமான் வீரவாகுத் தேவரை வடஇலங்கையின்வல்லி நதிக்கரையில் தற்போது ஆலயத்தின் மேற்கு புறத்தே காலடி பதித்துச்சூரனிடம் சென்றார் காலடி பதித்த பாதச் சுவடுகள் இன்றும் ஆலய உரிமையாளர்களினால் பதுகாக் கப்பட்டு ஏராளமான பத்தர்கள் பார்வையிட்டு வணங்கி வருவதாகவும் கூறப்படுகின்றதுடன் ஆலயத்தின் ஸ்தாபகரனான மருதர் கதிர்காமரின் வரலாறும் பக்திபூர்வமான தென்றும் கூறப்படுகின்றது. வீரவாகுத்தேவரும் ஜராவசுகந்தர் இவரும் பூசித்து வழிபாடு செய்த இத்தலத்தில் மூன்றாம் ஆளாக அன்பாக பூசை செய்ய ஆளில்லை என்பதனால் தேவலோகத்தில் பணிவிடை செய்த மருதர்கதிர்மாமரை இப்பகு திக்கு பெருமான் தோற்றிவித்தார் இவ்வாறு தோன்றிய கதிர்மாமர் நாள் தோறும் பூவரசமரத் தடியில் முருகப்பெருமானை வணங்கி தன்கடற் தொழிலை பரம்பரைத்தொழிலாக செய்து வந் தார். நாளடைவில் கதிர்காமரின் பக்குவ நிலையை உணர்ந்த முருகப் பெருமான் அவர்முன் தோன்றி தனக்கு பூசை செய்யுமாறு பணித்தார். கதிர்காம லர் உடனே பதை பதைத்து தனக்கு பூசைமுறை தெரியாது எனக்கதறியழவே கண்ணை மூடுமாறு பணித்து கதிர்மாமரை கதிர்மாமம் அழைத்து கதிர்மாமத்தில் பூசைமுறைகளை காண்பித்து வழியில் அவரது வரலாற்றையும் கூறி ஆலமி லையில் அமுது படைத்து வழிபடும் படி கூறி னார் கதிர்காமரும் தனது பரம்பரைத் தொழிலை நிறத்தி விட்டு பக்தி சிரத்தையுடன் வழிபாடுகளை மேற்கொண்டு வந்தார் பின் நாளடைவில் ஆல யம் அமைத்து வலதுபக்கத்தில் முருகப்பெருமான் வேலுடன் தோன்றி இடது பக்கத்தில் கதிர்காமரை அமர்த்தி நடக்கவிருக்கும் முறைகளை விளக்கிய துடன் பூசைகளில் சிரமங்களை போக்கி குறை யின்றி நடாத்தவும் அருள் பாலித்தார். கதிர்காம ரும் தினமும் பூசை வழிபாடுகளை முடித்து இடப் பக்கத்தில் அமர்ந்து இருந்து தியானிப்பதும் வழங்கமாயிற்று இவ்வாறான ஆலயம் அமைந்த கிராமமான தொண்டைமானாறு புராதன உன்னத சரித்திரத்தை பிண்டையினாகக் கொண்டதுமாகும் இவ்வாலயத்தின் மேற்குப்புறமாக அமைந்த வல்லி நிதியான ஆறு கடலுடன் சங்கமித்த இந்நதியை அண்டிய பகுதி வல்லிப்பெருவெளியாக விளங்கி பின் வல்லைபெருவெளி என்றும் இந்நதியின் மேலே தென்புறத்தே அனமந்த பாலத்தை வல்லைப்பாலம் என்னும் கூறப்படுகின்றது. இந்நதியின் தொடுவா யில் தொண்டைமான் எனும் அரசன் நதியை வெட்டி கடலுடன் சங்கமிக்க விட்டதால் அது ஆறாகியதுடன் இவ் ஆற்றுப்பகுதியை தொண் டைமானாறு என்றும் அழைக்கப்பட்டது. கடல் நீருடன் தொடர்பு கொண்டதால் உப்பு ஆற்றின் பகுதிகளுக்கு சென்று கரணவாய் எனும் கிராம மப்பகுதியில் உப்புவிளையல் ஆயிற்று இவ் உப் புகளை ஆற்றின் முனையில் சேமிக்க நாளடைவில் இக்கரை உப்புமால் எனப்பெயர் பெற்றிட்டுஅக் காலத்தில் போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கி லேயர் வணிகமுறை அப்பகுதிக்காணிக்குள் பதி லேடுகளை உண்டாக்கி தோம்பு எனும் காணி உறுதிகளையும் ஏற்படுத்தி இத்தோம்பு உறுதிகளில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயதோற்றவிபரங்கள் இருப்பதுடன் தொடர்ந்தும் ஆலயப்பதிவுகள் உண்டாக்கியதும் பதிவேடு முறைகளும் உருவாகி யதால் மருதர் கதிர் காமருக்கு செல்வச்சந்நிதி ஆலய தொடர்பு விபரிக்கப்பட்டது. இவ்வாறு பக்திக்கும் பழமையும் வாய்ந்த ஆலயமாக திகழ்ந்துவரும் நிலையில் இவ்வாலயம் மருதர் கதிர்மாமரும் அவர்தம்சந்ததியினரும் பெருமானின் சித்தப்படி பூசை வழிபாடுகளையும் மேற்கொண்டி ருந்தனர். பின் ஆலயக்கட்டடங்கள் மண்டபங்கள் தூபி, விமானம், கலசம் அடங்கிய பரிவார மூர்த் திகள் பிள்ளையார்குளம், 5 மையில்களுக்கு ஒலிக்கும் காண்டா மணி, பின்னர் இலங்கையின் முதன்மையானதும் உலகில் நான்காவதுமான சித்திரத்தேர் போன்றன அமைக்கப்பட்டு 1984ஆம் ஆண்டு வெள்ளோட்டமும் நடைபெற்றுள்ளதுடன் 1985ஆம் ஆண்டு வன்முறை காரணமாகவும், தொண்டைமானாறு இராணுவ முகாம் அமைக்கப் பட்டதன் பின் ஆலயத்துக்கு வரும் பத்தர்கள் வருகை குறைந்து சென்றதும் பூசைகள் ஒழுங்கற்று நடைபெற்றது பின்னர் இந்திய இராணுவத்தினரின் வன்முறை திணிப்பு நடவடிக்கையால் 1986ஆம் ஆண்டு காலப்பகுதியில் கண்டாமணி உடைத்தும் சித்திரத்தேர் அழிக்கப்பட்டும் ஆலய சுற்று பிரகாரத் தில் உள்ள அன்னதான மடங்களும் உடைத்து எறியப்பட்டன.எனினும் பூசைகளும் ஆரம்பிக்க முடியாத நிலையிலும் உடமைகளும் கொள்ளையிடப்பட்டன. அண்டைய கால கட்டத்தில் பலினால் வழங்கப்பட்ட நிதிகளும் பல முடக்கப்பட்டிருந்த தும் தெரிந்த விடயமாக இருந்த போதிலும் கால சுழற்சியில் தொண்டை மானாறு ஸ்ரீ செல்வச்சந் நிதியான் ஆலயம் பல்வேறு தரப்பினரதும் வேண்டு கோளும், ஒத்துழைப்பினாலும் மீண்டெழ ஆரம்பித்துடன் அன்றைய காலம் போன்ற தொரு வளங்கள் போதியளவு இல்லாவிட்டாலும் இன்று புதுப் பொலிவுடன் காணப்படுகின்றது. வன்முறையால் பாதிக்கப்பட்ட இவ் ஆலயம் 07.04.2008ஆம் திகதி மஹோகும்பாபிசேகத்துடன் ஆலயத்துக்கு மீண் டும் வழமை முறை பூசைகளுடன் அடியார்கள் அலைமேதியது எனினும் மகோற்சவம் ஆவணி மாத பூரணையில் தீர்த்த வைபவமும், அதற்கு முன் உண்டான அமாவாசை நீங்கி பிரதமை 4டும் வேளை கொடியேற்ற வைபவமும் ஐந்தாம் நாள் பகல் உற்சவமும் 10 நாள் பூங்காவன உற்சவமும் 11அம் நாள் கைலாய வாகன உற்சவமும் மற்றும் இறுதி மூன்று நாட்களும் சப்பறம், தேர், தீர்த்தம் ஆகியன வும் நடைபெறுகின்றது. இவ் மகோற்சவதினத்தில் ஆலயத்தொண்டு புரிந்த பூக்காரர் களுக்கும் விழா எடுப்பது முக்கியமானதும் ஒன்றாகும். இதன் பிரகாரம் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வசந்நிதி ஆலயம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இரவு 10.15 மணிக்கு கொடி யேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாதகி 5ஆம் திருவிழா ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு சதுர்த்தி காலைத்திருவிழாவும். 10ஆம் திருவிழா பூங்காவனம் காலை 10 மணிக்கும் 11அம் திருவிழா கைலாசவாகனத் தில் மாலை 4 மணிக்கு இந்திர விமானத்திலும் 13ஆம் திருவிழா சம்பறம் மாலை 6மணிக்கும் 14ஆம் திருவிழா தேர்த்திருவிழா காலை8.30 மணிக்கும் 15ஆம் திருவிழா தீர்த்த்திருவிழா காலை 7 மணிக்கும் அன்று மாலை மௌனத்திரு விழாவும் 16ஆம் திருவிழா தொண்டர் பூசையும் கௌரவிப்பும் இடம் பெறவுள்ளது. மேலும் உற்சவகாலத்தில் ஆலய சூழலில் அமைந்துள்ள அண்ணதான சபைகள் வாரி வழங்கவுள்ளதாலேயே இவ் ஆலயத்திற்கு அன்னதான கந்தன் எனப்பெயா பெற்றது. இவ்வாலயத்தில் உற்சவம் தவிர்ந்து ஏனைய ஆனிப்பாங்கல், தைப்பூசம், மகாசிவராத் திரி, கதிர்மாக முருகன் கொடியேற்ற உற்சவம், தீபாவளி, கந்த சஸ்டி போன்ற திருவிழாக்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது அத்துடன் இவ் வாலயத்தில் தொண்டு தொட்டு கதிர்காமக் கொடியேற்றத்தின் போது பொருமானை முத்த மிட்டு நிவேதித்து அனுப்புவதும் பின் தீர்த்தமாடி யபின் பயத்தம் துவயலும், இளநீரும் படைத்து வரவேற்பதும் இன்று பத்தியுடன் கொண்டாடப் படும் வழிபாடாக அமைந்துள்ளது. இவ்வூர் ஆண்டியப்பர் என்பவர் இவ்வாலயத்தில் முதன் முதலாக பூசை நேர்த்திக்கடனுக்காக செய்திருந் தார் நாளடையில் அடிகார்கள் பலரும் நேர்த்தி களை செய்து வருகின்றனர். என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கத. மேலும் இவ்வாலயத்துக்கு வரும் அடியார்கள் நிகழ்தருமரங்களைப் பாறி அமுதுண்டு ஆற்றங்கரை வேலா, அண்ணதானக்கந்தா, என்ற நாம உச்சரிப்புடன் வணங்குவதையும் காண்பார்க்க முடிகின்றத. அத்துடன் 64 நாயன்மார்களுக்கும் 64 அமுதுபடைக்கும் வழமையும் இங்குண்டு.



சந்நிதியானின் வருடாந்த மகோற்சவம்
இன்று ஆரம்பமாவதை ஒட்டு இவ் ஆக்கம் பிரசுரமாகிறது

*கட்டுரை தொகுப்பு:- பொலிகையூர்*
***K.K.விசிந்தன்***

---

# சந்நிதியான் மகோற்சவ உற்சவ கால ஒழுங்கு விதிகள்

வரலாற்றுச் சிறப்புமிக்க சந்நிதியான் ஆலய வருடாந்த மகோற் சவம் இன்றையதினம் ஆரம்பமாவதை ஒட்டி, திருவிழாக் காலங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள உற்சவ ஒழுங் குகள் தொடர்பான தீர்மானங்களை வல்வெட்டித்துறை நகர சபை அறிவித்துள்ளது.

செல்வச் சந்நிதி ஆலயத்திற்கு இம்முறை அதிகளவிலான மக்கள் வருவார்கள் என்று எதிர்பார்ப்பதால் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு,நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வழமைபோன்று இம்முறையும் தற்காலிக பணிமனை திறக் கப்பட்டு அலுவலர்களும் சபை உறுப்பினர்களும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

குடிநீர் விநியோகத்திற்கான நீர்த்தாங்கிகளின் மூலம் 24 மணி நேரமும் வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக் கப்பட்டுள்ளன.அதற்கான மேலதிக உதவிகளை பருத்தித் துறை பிரதேச சபை மற்றும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை களிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு தடங்கலின்றிக் குடிநீர் விநியோகம் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் கிழக்குப் பகுதியில் இருந்து வருகை தரவுள்ள அடியார்களின் வசதி கருதி ஆலயத்தின் மேற்குப் புறமாக ஆற்றங்கரையூடாக தற்காலிக பாலம் ஒன்றை அமைத்தல்.

ஆலய வீதிகளில் உள்ள உணவகங்கள்,ஐஸ் கிறீம் கடைகள் மீது இறுக்கமான கட்டுப்பாடகள் விதிக்கப்படவுள்ளன.சுகாதார விதிமுறைகளைப் பேணாத உணவகங்கள் மற்றும் ஐஸ் கிறிம் கடைகள் மீது பொது சுகாதார பரிசோதகர் மற்றும் காவல்துறையினரூடாக சட்ட நடவடிக் கைகள் எடுக்கப்படுவதுடன் அத்தகைய வர்த்தக நிலையங்கள் மூடப்படும்.

செல்வச் சந்நிதி ஆலயத்தில் நிரந்தரமாகக் கடைகள் வைத்திருப்பவர்கள் தவிர்ந்த ஏனைய தற்காலிக் கடைகளை நடத்த விரும்புபவர்கள் முன் கூட்டியே நகர சபையிடம் இருந்து உரிய கட்டணத்தைச் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நகர சபையின் அனுமதிப் பத்திரமின்றிக் கடை களை அமைப்பதற்கான இடத்தை காணி உரிமையாளர்கள் எவருக்கும் வழங்குவதைத் தவிர்த்தல் வேண்டும்.அவ்வாறு நகர சபையின் அனுமதியின்றி போடப்படும் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்படும்.இந்த விடயத்தில் காவல் துறையினர் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவார் கள் என்றும் தலைவர் குறிப்பிட்டார்.

தற்காலிக கடைகளுக்கான உரிமக் கட்டணம் இவ்வருடம் தொடக்கம் 50 வீதத்தினால் அதிகரிக்கப்படுவதுடன் ஐஸ் கிறீம் கடை நடத்துனர்கள் 10,000 ரூபாவை உரிமக்கட்ட ணமாகச் செலுத்துவதுட் பிளாஸ்ரிக் ஐஸ் கிறீம் கிண்ணங் களை தினமும் அவர்களே அப்புறப்படுத்திச் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளனர்.

வாகனங்கள் மற்றும் உந்துருளிகள்,துவிச்சக்கர வண்டி களுக்கான பாதுகாப்பு நிலையங்கள் முதலாம் திருவிழாவில் இருந்து இயங்கத் தொடங்குவதால் ஆலய வீதிகளுக்குள் எவ்வித வாகனங்களும் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது.

ஆலய வீதிகளிலும் முகப்பு வீதிகளிலும் உள்ள கடைகளி டம் இருந்து உரிமக்கட்டணத்தைச் சேகரிப்பதற்காக தற்காலிக வரியிறுப்பாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதென வும் தீர்மானிககப்பட்டது.

ஆலய உற்சவ தினங்களில் விசேட போக்குவரத்து ஒழுங்கு கள்இலங்கைப் போக்குவரத்துச் சபையினதும் தனியார் சிற்றூர்திச் சேவையினரதும் சேவைகள் ஏற்படுத்தப்படவுள்ள தால், அவற்றுக்கான தரிப்பிட வசதிகளும் ஓழுங்கு செய்யப்பட் டுள்ளன. இந்த இடத்திலேயே பேருந்துகள் நிறுத்தப்படவுள்ள தால்,பொது மக்கள் குறித்த இடத்திற்குச் சென்று பொதுப் போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்துமாறு கேட்கப்பட் டுள்ளனர்.

# சுப்பிரமணியம் பூங்காவில் உடைமாற்ற இடமில்லை




(கிரு)

யாழ்.பொதுநூலகத்திற்கு முன்பாகவுள்ள சுப்பிரமணியம் பூங்காவில் உடைகள் மாற்றுவதற்கான இடம் காணப்படாமையினால், விசேட நிகழ்வுகளுக்காக இந்தப் பூங்காவிற்கு புகைப் படங்கள், காணொளிகள் எடுக்க வருபவர்கள் (மிக்சிங்) பெரும் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

திருமணம், பூப்புனித நீராட்டுவிழா போன்ற விசேட நிகழ்வுகளின்போது பெரும்பாலானவர்கள் இந்தப் பூங்காவிற்கு வருகைதந்து, இங்கு காணப்படும் பூச்செடிகள், நீர்த்தாடாகங்களில் புகைப்படம் மற்றும் காணொளிகளை எடுத்துச் செல்கின்றனர்.

இதன்போது அவர்கள் பல்வேறு விதமான ஆடைகளை மாற்றியே படப்பிடிப்பை மேற்கொள்வது வழக்கம் ஆனால் ஆடைகளை மாற்றுவதற்கான இடவசதி இந்தப் பூங்காவில் காணப்படவில்லையென பூங்காவிற்கு வருகைதந்த ஒருவர் குறிப்பிடார்.

உடை மாற்றுவதற்கான இடமாக பூங்காவின் நுழைவாயிலில் காவலாளிக்கென வழங்கப்பட்டுள்ள சிறிய அறையே இவர்களுக்கு வழங்கப்படுகின்றது. ஆனால், இந்தச் சிறிய அறையும் இரண்டும் பக்கங்களும் ஓட்டைக்கற்கள் பதிக்கப்பட்டுள்ளதால் உடை மாற்றுவதில் சிக்கல்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இப் பூங்காவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித்தனியான மலசலகூடங்கள் காணப்பட்டாலும் மலசலக் கூடக்கதவுகளை மூடுவதற்கான கொழுவிகள் இல்லை இதனால் ஒருவரை வாசலில் காவலுக்கு நிறுத்திவிட்டே மலசலகூடத்திற்கு செல்லவேண்டியுள்ளது

தொடர்ந்தும், இவ்வாறான சூழ்நிலை காணப்பட்டால் வரும் காலங்களில் பூங்காவிற்கு படப்படிப்பினை மேற்கொள்ள வருபவர்களின் எண்ணிக்கை குறைவடையும் என இந்தப் பூங்காவில் படப்படிப்பினை மேற்கொண்டிருந்த ஒருவர் கூறினார்.

# போக்குவரத்துக்கு இடையூறாக வாகனப் பாதுகாப்பு நிலையம்

(கிரு)

யாழ் மின்சார நிலைய வீதியில், வைத்திய சாலை பின்புற நுழைவாயிலுக்கு அருகில் தினமும் ஏராளமான துவிச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் நிறுத்தப்படுகின்றன.


இதனால், இவ்வீதியூடாக கனரக வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் பயணிப்பதாக இவ்வீதியில் உள்ள புடைவைக்கடை உரிமையாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

யாழ் பொதுப் போக்குவரத்து நிலையத்திற்கு அண்மையிலுள்ள வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை நடாத்தி வருபவரது, நண்பரின் கண்காணிப்பின் கீழ் இந்த வீதியோர வாகனப் பாதுகாப்பு நிலையம் இயங்குவதாக இங்கு பணிபுரியும் ஊழியர் ஒருவர் தெரிவித்தார். குற்றம் சாட்டியுள்ளார்.



இதேவேளை, 'துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் உட்செல்ல, நிறுத்த தடை செய்யப்பட்டுள்ளது' என எழுதப்பட்ட பதாகை இவ்விடத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நிரந்தரமாக மூடப்பட்டது வல்வெட்டித்துறை மதுபானசாலை



கடந்த 60 வருடங்களுக்கு மேலாக வல்வெட்டித்துறையில் உள்ள தெணியம்பைத் தெருவில் இயங்கி வந்த மொத்தமாகவும்,சில்லறையாகவும் சாராய விற்பனை செய்து வந்த தவறணை,யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைவாக நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது பல வருடங்களாக பொது மக்களினதும் மாணவர்களினதும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் குடிமனைகள், பாடசாலை, தனியார் கல்வி நிலையம், பால்சாலை, வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்து ஆகியவற்றிற்கு இடையூறுகளையும் சமூகச் சீர்கேடுகளையும் ஏற்படுத்தி வந்த இந்த மதுபான சாலை,கடந்த ஜுலை முதலாம் திகதியுடன் மூடப்பட்டு விட்டதால் சாதாரண பொது மக்களும் மாணவர்களும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இதே போன்று வீடுகளிலும் பொது இடங்களிலும் சட்ட விரோதமாக மது மற்றும் கசிப்பு போன்ற தீங்கு விளைவிக்கும் குடிவகைகளையும்,பொது மக்களின் சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் வகையில் சட்ட விரோதமாக வீடுகளில் இறைச்சி வகைகளை விற்று வருபவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பொலிசாரிடமும் நகர சபை நிர்வாகத்தினரிடமும், சுகாதாரப் பகுதியினரிடமும் மக்கள் கோரிக்கைகளை விடுத்துள்ளனர்.

# விண்ணப்பங்கள் கோரல்

வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்தில் வெற்றிடமாகவுள்ள ஆசிரிய ஆலோசகர் பதவிகளை பூர்த்தி செய்வதற்கான விண்ணப்பங்கள் வவுனியா தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அன்ரன்சோமராஜாவால் கோரப்பட்டுள்ளது.

ஆரம்பக்கல்வி, கணிதம், சித்திரம், கிறிஸ்தவம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகர்களுக்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளமையினால் வவுனியா தெற்கு வலய பாட சாலைகளில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1, தரம் 2-1 ஆகியவற்றைச் சேர்ந்த ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இதற்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் வலயக்கல்வி அலுவலக நிர்வாக கிளையில் விண்ணப்ப படிவங்களைப்பெற்று இம் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பத்தின் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் 'ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம்' எனக்குறிப்பிட்டு வலயக்கல் விப்பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளனர். (160)

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒருசமயம் யானைகளின் பவனியைப் பார்வையிட வந்த மைசூர் மகராஜா, அந்த யானைகளின் அருகிலேயே அவற்றோடு வெகுதூரம் நடந்து வந்தாராம். பார்த்தவர்கள் மன்னரின் துணிவைப் பாராட்டினார்களாம். "இது என்ன பெரிய விஷயம்! நான் மகாராணிக்கு அருகிலேயே பல இடங்களுக்கு நடந்து சென்றிருக்கிறேனே!" என்றாராம் மன்னர்.

*** *** ***

"என் கணவர் எப்ப பார்த்தாலும் ரீ.வி.யையே பார்த்துக் கொண்டிருக்கிறார் டொக்டர்."

"இருக்கட்டுமே அதிலே என்ன தப்பு?"

"கரண்ட் கட் ஆனால்கூட டோர்ச் லைற்றை அடித்தாவது அதைப் பார்த்துக் கொண்டே இருக்கிறாரே... அதுதான் சந்தேகமா இருக்கு..."

*** *** ***

சிந்தி சமூகத்தினர் தங்களைத் தாங்களே கிண்டல் செய்து கொள்வதில் வல்லவர்கள். அவர்களது ஜோக் இது:

இந்திரன் ஒருமுறை எல்லா சமூகத் தலைவர்களையும் சந்திக்க ஏற்பாடு செய்தான்.

ஒருவர் பின் ஒருவராக எல்லா சமூகத்தலைவர்கள் முறை வரும்போதும், இந்திரன் மரியாதையுடன் எழுந்து நின்று வணக்கம் சொன்னான்.

சிந்தி சமூகத்தலைவரின் முறை வரும்போது மட்டும், இந்திரன் எழுந்திருக்காமல், "ம்ம்...சரி சரி... போய் அமருங்கள்" என்று சொன்னான்.

அங்கிருப்பவர்கள் எல்லோருக்கும் ஆச்சரியம். இந்திரன், எல்லா சமூகத்தினரையும் கவுரவப்படுத்தி விட்டு சிந்தியை மட்டும் இப்படி அவமானப்படுத்துகிறானே.. என்று.

கேட்டே விட்டார்கள்.

அதற்கு இந்திரன் சொன்னான் "நான் எழுந்து நின்று அவருக்கு வணக்கம் சொல்லியிருந்தால், அவர் அதற்குள் என்னுடைய இருக்கையில் உட்கார்ந்துவிடுவார்"

*** *** ***

"என்ன தரகரே... பொண்ணைப் பார்க்கலாம்னு சொல்லிட்டு சுடுகாட்டுக்குக் கூட்டிட்டு வந்திருக்கீங்க?"

"நீங்க தானே "அடக்கமான' பொண்ணு வேணும்னு சொனனீங்க?"

*** *** ***

ஆசிரியர்: [மாணவன் ஒருவனிடம்] டே... கோபு... வெளியே கத்துற நாய்களைத் துரத்திட்டு வா... அதுகள் போடுற சத்தத்தில பாடமே நடத்த முடியேல்லை.

கோபு: [சிறிது நேரம் கழித்து] சேர்... நாய்களை துரத்திட்டேன். அதுகள் சத்தம் போடுறது நின்டிட்டுது. நீங்க ஆரம்பியுங்க சேர்!

*** *** ***

ஆங்கிலேயர் ஒருவர் தன் கடிகாரத்தைப் பற்றித் தம்பட்டம் அடித்து வந்தார்.

இதனால் சலிப்புற்ற அவரது அமெரிக்க விருந்தாளி, "என் கடிகாரம் ஒருமுறை ஹட்சன் நதியில் விழுந்துவிட்டது. ஆனால் இன்னமும் அது சீராக, நில்லாமல் ஓடிக் கொண்டிருக்கிறது" என்றார்.

"எது கடிகாரமா?" என்று ஆச்சரியத்துடன் ஆங்கிலேயர் கேட்டார்.

"இல்லை. ஹட்சன் நதி" என்றார் அமெரிக்கர்.

*** *** ***

*[தாத்தாவும் பேத்தியும்]*

"விமானம் எப்படி பறக்குது தாத்தா?"

"தெரியாது... கண்ணு"

"ரேடார் யார் கண்டுபிடித்தது?"

"தெரியலையேம்மா"

"தாத்தா டிவியில் படம் எப்படி தெரியுது?"

"உங்க வாத்தியாரிட்ட கேளுடா"

"சரி கடைசிக் கேள்வி... சரி... சரி... வேண்டாம் விடுங்க"

"கேளுடா கண்ணு... கேட்டாத்தானே பொது அறிவு வளரும்?"

"உனக்கு எது கேட்டாலும் தெரியேல்லை. எனக்கு எப்பிடி தாத்தா பொது அறிவு வளரும்?"

*** *** ***


முட்டாள் தன் மனைவியை "வாயை மூடு' என்று திட்டுவான்!

புத்திசாலியோ, "நீ அமைதியாக இருக்கும்போது எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா?' என்பான்.











நல்லூர் முருகனின் தேர்த்திருவிழாவான நேற்றைய தினம் எம்பெருமான் தேருக்கு எழுந்தருளுவதனையும், அலைகடலெனத் திரண்ட பக்தர்களையும், அடியார்கள் அங்கப்பிரதட்சணை செய்வதனையும், அடியார்கள் நிவர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதனையும் காணலாம். (பா, 116, 137, 148)

## பிரயாணக் கொடுப்பனவுகளை உரியகாலத்தில் வழங்க கோரிக்கை

(வவுனியா)

வட மாகாணத்தில் கடமையாற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் தமக்கான பிரயாணக் கொடுப்பனவுகளை உரிய காலத்தில் வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள கோரிக்கையில்

மிக நெருக்கடியான சூழ்நிலையிலும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் ஆசிரிய ஆலோசகர்களாகிய நாம் மாதாந்தம் பாடசாலைத்தரிசிப்பில் ஈடுபட்டு ஆசிரியர்களுக்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கி வருகின்றோம். கல்வி அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு நாம் மேற்கொண்டு வரும் பாடசாலை தரிசிப்பு தொடர்பான அறிக்கைகளையும் பிரயாணக் கொடுப்பனவு படிவங்களையும் மாதாந்தம் 5 ஆம் .திகதிக்கு முன் சமர்ப்பிக்க ண்டுமென பணிக்கும் அதிகாரிகள் நாம் அவற்றை உரிய காலத்தினுள் சமர்ப்பித்த போதிலும் அதற்கான கொடுப்பனவை மதாந்தம் வழங்காதிருப்பது மிகுந்த வேதனை அளிக்கின்றது. இது தொடர்பாக நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டியும் எமக்கு பல மாதங்களாக இக் கொடுப்பனவு வழங்கப்படாதுள்ளது.

நாளாந்தம் பல கிலோ மீற்றர் பயணித்து பாடசாலை தரிசிப்பில் ஈடுபடும் எமக்கு மாதாந்தம் வழங்க வலயக் கல்விப்பணிமனை அதிகாரிகளும் மாகாண கல்வித் திணைக்கள் அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டு மென வட மாகாண ஆசிரிய ஆலோசகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (160)

## மின்சாரசபையில் இணைய விரும்பும் ஓய்வூதியர்கள் விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையில் தற்போது இடம்பெறும் பணிப்பகிஷ்கரிப்பு ஓகஸ்ட் 24 ஆம் திகதிக்குமுன் கைவிடப்படாவிட்டால், இலங்கை மின்சார சபையுடன் இணைந்துகொள்ளுமாறு பல்கலைக்கழக பொறியியல் பீடங்களின் இறுதியாண்டு மாணவர்களுக்கும் மின்சார சபையின் ஓய்வூதியம் பெற்ற ஊழியர்களுக்கும் மின்சார சபையின் தலைவர் கலாநிதி விமலதர்ம அபேவிக்கிரம அழைப்பு விடுத்துள்ளார்.

பொறியியலாளர்கள் உட்பட 200 பேர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியுடன் நிரந்தரமாக இணைத்துக்கொள்ளப்படுவர் எனவும் ஏனையோர் தற்காலிக அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்படுவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையுடன் இணைந்துகொள்ள விரும்பும் ஓய்வூதியர்கள் தமது விண்ணப்பங்களை அருகிலுள்ள இலங்கை மின்சாரசபை உப நிலையங்களில் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

## களங்கத்தை ஏற்படுத்தும் ஹக்கீமை எதிர்க்கிறோம்

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்றில் நோன்பு திறப்பதற்கு எவருக்கும் தடைகள் விதிக்கவில்லை. இனவாதத்தை பேசி நாட்டிற்கும், சமூகத்திற்கும், களங்கத்தை ஏற்படுத்துக்கின்ற ஹக்கீமையே நாம் எதிர்த்தோம் என தேசிய காங்கிரஸின் தலைவரும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்றில் கடந்த திங்கட்கிழமை நடந்த எதிர்ப்பு பேரணி தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் மாநாடு நேற்று முன்தினம் அக்கரைப்பற்று அதாவுல்லா அரங்கில் நடைபெற்றது.


இதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அம்பாறை சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் மூன்று சமூகங்களையும் அரவணைத்துச் செல்லக்கூடிய ஒரு நேர்மையான பொலிஸ் அதிகாரியும் யாருக்கும் பக்கச் சார்பாகவோ, அநீதியாகவோ செயற்படாத ஒருவர். இவரை குறைகூறித் திரிவது தனது அரசியலுக்கு வங்குரோத்து நிலைமை ஏற்பட்டுள்ளதையே காண முடிகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் புலிகள், தமிழர் விடுதலைக் கூட்டணி, நோர்வே மற்றும் ஐக்கிய தேசிய கட்சி ஆகியவற்றுடன் சேர்ந்து கிழக்கு மாகாணத்தை மீண்டும் வடக்குடன் இணைத்து மீண்டுமொரு யுத்தத்தை உருவாக்குவதற்கு முயற்சிக்கின்றார்.

இதற்கு எதிர் வருகின்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இம்மாகாணத்தில் வாழ்கின்ற மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என நினைக்கின்றேன். தேசிய காங்கிரஸ் இந்நாட்டில் வாழ்கின்ற மூவின சமூகங்களையும் அனுசரித்து செல்கின்ற ஒரு தேசிய கட்சியாகும். அதன் பக்கம் மக்கள் சாரை சாரையாக வந்து கொணடிருக்கின்றார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்டத்தில் தனது வாக்கு வங்கி குறைந்து காணப்படுவதால் அம்பாறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்



சகரை குறை கூறுகின்ற அளவிற்கு அவருடைய தலைமைத்துவம் மாறியிருக்கின்றது என்றார்.

## புகைப்பிடிப்பதால் பாதிப்பு சிகரட் பைகளில் பட எச்சரிக்கை

(கொழும்பு)

புகைப்பிடிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த படங்கள் மூலமான எச்சரிக்கைகளை சிகரெட் பைகளில் பொறிக்கும் திட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் அல்லது ஒக்டோபர் மாதத்தில் அறிமுகமாகும் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

உலக சுகாதார அமைப்புகளின் புகையிலை கட்டுப்பாடு தொடர்பான கட்டமைப்பு மாநாட்டு ஆவணத்தில் முதலில் கையெழுத்திட்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இதில் கையெழுத்திட்ட நாடுகள் மேற்படி பட எச்சரிக்கைகளை சிகரெட் பைகளில் பொறிக்கும் திட்டத்தை மூன்று வருடங்களுக்குள் அறிமுகப்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது. இலங்கை 2003 ஆம் ஆண்டில் கையெழுத்திட்டது.

எனினும், புகைப்பட எச்சரிக்கைகள் குறித்த கலந்துரையாடல்கள், எச்சரிக்கைகளை மூன்று மொழிகளிலும் மொழி பெயர்த்தல் மற்றும் தொழில்நுட்ப காரணங்களால் இத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இத்திட்டத்தின்படி சிகரெட் பக்கெற்றின் பெரிய பக்கத்தில் சுமார் 50 சதவீதமான பகுதியில் வர்ணத்தில் பட எச்சரிக்கைகள் பொறிக்கப்பட வேண்டும்.

இதுவரை அவுஸ்ரேலியா, பிரேஸில், கனடா, ஹொங் கொங், இந்தியா, மலேஷியா, தாய்லாந்து, தாய்வான், சிங்கப்பூர் ஆகியன உட்பட 15 இற்கும் மேற்பட்ட நாடுகள் இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளன

### சரியான விடையின் கீழ் கீறிடுக



51. விளையாட்டுப் போட்டியில் வழங்கப்படாத ஒரு பதக்கம்.
( செப்புப்பதக்கம், தங்கப்பதக்கம், வெண்கலப்பதக்கம், வெள்ளிப்பதக்கம்)

52. அணிக்கு இருவர் பங்கு கொள்ளும் விளையாட்டு அல்லாதது.
( கரம், வலைப்பந்து, டென்னிஸ், பூப்பந்து)


53. துணியை மடித்து தற்காலிகமாகத் தைக்கும் ஒரு தையல் எது?
( சிறியநூலோடி, பெருநூலோடி, விஸ்வம் தையல், சோம் தையல்)

54. விண்வெளிக்கு முதன் முதலில் ஒரு செய்மதியை அனுப்பிய நாடு
(ஜப்பான், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா)

### கீழே தரப்பட்ட படங்களின் பெயரை எழுதுக

55. 
56. 
57. 
58. 

### கீழே தரப்பட்ட உரையாடலின் தமிழ்க்கருத்தை எழுதுக

59.



60. மூன்று செப்பக் கம்பித் துண்டுகளைக் கொண்டு இரண்டு மின்கலங்களையும் பாவித்து மின்குமிழை ஒளிரச் செய்ய கம்பிகளைத் தொடுக்கும் முறையை வரைந்து காட்டுக.

61. பின்வரும் உருவில் 0.4 ஐ நிழற்றுக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

62. குமாரிடம் 48 தோடம்பழங்கள் உள்ளன. அவற்றில் 3/4 ஐ தம்பியிடம் கொடுத்தான் ஆயின் தம்பியிடம் கொடுத்த பழங்கள் எத்தனை?
..............................................................................

63. கடைக்குச் சென்ற மோகன் ரூபா 72 இற்கு பொருட்களை வாங்கி ரூபா 100 தாள் காசும், ரூபா 2 நாணயக் குற்றியும் கொடுத்தான் ஆயின் அவன் மிகுதியாகப் பெறும் பணம் எவ்வளவு?
..............................................................................

64. $1/6 + 1/4 =$ ..............................................................................

65. சிறிய தாங்கி ஒன்றில் 19 l 200ml நீர் இருந்தது. இந்த நீரில் 3 l 850 ml வீண் விரயமாகிவிட்டது எனின் எஞ்சிய நீரின் அளவு யாது?
..............................................................................



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - I
நேரம் 1.15 நிமிடம்

# கல்வி முரசு



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**பின்வரும் விபரணத்தை வாசித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

மரக்கிளைகளினூடாக வந்த இளஞ் சூரியனின் கதிர்கள் எனது மேனியை இதமாக வருடிச் சென்றன. பறவைகளின் இனிய கானத்தினால் அப்பகுதி முழுவதும் இசையில் மூழ்கியிருந்தது. மெல்லென வீசிய இளந்தென்றல் என்னை அன்புடன் தழுவிச் சென்றது. காட்டு மலர்கள் ஆற்றின் இரு பக்கங்களையும் எழில் செய்தன. மலரிதழ்களினாலும் மகரந்தங்களினாலும் மூடப்பட்டிருந்த தரையின்மீது எனது பாதங்கள் பதியும்போது மென்மையான பட்டுக் கம்பள விரிப்பில் நடப்பது போன்ற உணர்வு பெற்றேன். மலரிதழ்களால் அழக பெற்ற நீரின் மீது அலைகள் அங்குமிங்கும் எழுந்தபோது அவை அலங்காரம் செய்யப்பட்ட நீல வண்ண ஆடையைப் போலக் காட்சியளித்தன. இயற்கை அன்னையின் சீதனமான இக்கண்கவர் காட்சியைக் கண்டு ஒரு நாளினை ஆரம்பிப்பதற்கு நான் எவ்வளவு பாக்கியசாலியாக இருக்க வேண்டுமென எண்ணினேன்.

1. இங்கு நாள் ஒன்றின் எவ்வேளை பற்றிக் கூறப்படுகிறது? ..............................
2. இங்கு "கானம்" என்ற சொல்லின் கருத்தினை எழுதுக? ..............................
3. "மென்மை" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக? ..............................
4. "சென்ற" என்ற சொல் எக்காலத்துக்குரியது ? ..............................
5. இங்கு தாயாகக் குறிப்பிடப்படுவது எது? ..............................
6. இங்கு காணப்படும் இணைமொழி ஒன்றினைக் கூறுக? ..............................
7. இங்கு காணப்படும் உவமை ஒன்றினை எழுதுக ? ..............................
8. மலர்களால் அழகு பெற்றது எது ? ..............................
9. இங்கு சீதனம் எனக் குறிப்பிடப்படுவன யாவை ? ..............................
10. "இளந்தென்றல் தழுவிச் சென்றது" என்பதில் தழுவிச் சென்றது என்பதன் கருத்து யாது? ..............................

**பின்வரும் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.**

11. 1) இயற்கை : .............................. 2) கிளை : ..............................

**பின்வரும் சொற்களின் சிங்களச் சொல்லை எழுதுக**

12. 1) இயற்கை : .............................. 2) கிளை : ..............................

**சொற்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக**

13. உறுதி ∴ டெங்கு ∴ நாங்கள் ∴ நோயை ∴ பூணுவோம் ∴ ஒழிப்பதற்கு
..............................................................................

14. ஆற்றோரைச் ∴ வாசித்த ∴ பெருங்குளங்களைக் ∴ சமவெளிகளில் ∴ மறித்துப் ∴ கட்டினார்கள் ∴ மக்கள் ∴ ஆற்றை ..............................

**பின்வரும் தொடர்மொழியின் கருத்தை வெளிப்படுத்தும் தனிச்சொல்லை எழுதுக**

15. அறிஞர் பலர் கூடி வாதிடும் களம் ..............................
16. இரு தரப்பினரிடையே ஒரு விடயம் பற்றிய இணக்கம் ..............................

**கீழேயுள்ள பழமொழிகளின் கருத்துக்களைப் புள்ளிக்கோட்டில் எழுதுக**

17. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வற்றாது ..............................
18. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? ..............................

**பின்வரும் கருத்துக்களை விளக்கும் உவமைத் தொடர்களை எழுதுக**

19. துன்பத்தில் மேல் துன்பம் - ..............................
20. பாசாங்கு செய்தல் - ..............................

**பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக**

21. Please try be clean : ............................................................
22. Come Forward : ............................................................

**23 தொடக்கம் 27 வரையிலான வினாக்களுக்குரிய சரியான விடையினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக**

23. பேரீச்சம்பழம் அதிகமாகப் பயிரிடப்படும் நாடு
 1) ஐக்கிய அமெரிக்கா 2) இலங்கை 3) ஆபிரிக்கா 4) மத்திய கிழக்கு நாடுகள்
24. சாதாரண மின்சூள் (Toach) ஒன்றுக்குப் பயன்படுத்தப்படும் மின்கலம் ஒன்றின் வோல்ட் அளவு?
 1) 1 2) 1.5 3) 5.5 4) 40
25. காலநிலை அறிகுறிகளை வெளிக்காட்டும் பிராணிகளில் ஒன்று
 1) தவளை 2) நாய் 3) கழுகு 4) ஓணான்
26. மருத்துவரினால் நோயாளிக்கு விதிக்கப்படும் மருந்தைக் குடிக்கும் முன்பாகக் கருத்திற்கொள்ள வேண்டிய முக்கிய விடயம்
 1) மருந்தில் அடங்குபவை 2) மருந்தின் விலை
 3) ஒரு வேளைக்கு எடுக்கவேண்டிய அளவு 4) மருந்தின் பெயர்
27. உலக புத்தக தினமாக அறிவிக்கப்பட்டுள்ள தினம்
 1) மே - 1 2) ஏப்ரல் - 23 3) ஒக்ரோபர் - 6 4) செப்ரெம்பர் -16
28. பேனை ஒன்றினதும் பென்சில் ஒன்றினதும் விலை ரூபா 27 ஆகும். பேனை ஒன்றின் விலை பென்சில் ஒன்றின் விலையின் இரு மடங்காகும் எனின் பேனையின் விலை யாது?

............................................................


29. காவியாவை விட கமலா உயரமானவள். மாலதி மாலாவிலும் உயரமானவள். ஆயினும் காவியாவிலும் உயரம் குறைந்தவள். இவர்களில் உயரத்தில் கூடியவர் யார்?

............................................................

30. நிஷா நிஷார் இவர்களின் வயதுகளின் கூட்டுத்தொகை 32 வருடங்களாகும். நிஷாவினது வயது நிஷாரினது வயதின் நான்கு மடங்காகும் எனில் நிஷாரினது வயது யாது?

............................................................

31. ஐந்து பிள்ளைகள் ஒருவர் பின் ஒருவராக வரிசையில் நின்றனர். இவர்களில் சீலா மூன்று பேருக்குப் பின்னால் நின்றாள். சுகந்திக்குப் பின்னால் இருவர் நின்றனர். சாரதா வரிசையின் முதலில் நின்றாள். எனின் இந்த வரிசையில் மூன்றாவதாக நிற்பவர் யார்?




32. உருவில் காட்டியுள்ளபடி பஸ் ஒன்றும் கார் ஒன்றும் ஒரே நேரத்தில் யு என்ற இடத்திலிருந்து ஒன்றுக்கொன்று எதிரான திசையில் செல்கின்றன. கார் மணிக்கு 40 Km மாறாவேகத்தில் செல்கின்றது பஸ் வண்டி மணிக்கு 30 Km மாறாவேகத்தில் செல்கின்றது. அரை மணித்தியாலயத்தின் பின் இரண்டு வாகனங்களுக்கும் இடையே உள்ள தூரம் யாது?

**கீழே தரப்பட்டுள்ள கூட்டுக்குள் பண்டைய இலங்கையை ஆண்ட சில அரசர்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. 33 தொடக்கம் 36 வரையிலான வினாக்களுக்கு மன்னர்கள் செய்த சேவைகளுள் ஒன்று தரப்பட்டுள்ளது. அச்சேவைக்குப் பொருத்தமான மன்னர்களின் பெயரை இடைவெளியில் எழுதுக.**

| |
|---|
| பண்டுகாபயன் / தேவநம்பியதீசன் / மகாசேனன் / தாதுசேனன் |
| பராக்கிரமபாகு / துட்டகைமுனு |


33. அனுராதபுரத்தில் பாரிய குளங்கள் பதினாறு அமைத்து விவசாய அபிவிருத்திக்கு அளப்பரிய சேவை செய்த மன்னன். ............................................................
34. கலா வாவியிலிருந்து திசா வாவிக்கு 87 Km நீளமுடைய இராட்சதக் கால்வாயை அமைத்த மன்னன் ............................................................
35. கிழக்காசிய நாடுகளில் இலங்கையைத் தானியக் களஞ்சியமாக உயர்வடையச் செய்த மன்னன் ............................................................
36. முதன் முதலில் திட்டமிட்ட நகரத்தை அமைத்த மன்னன். ............................................................



ஒரு பூரணமற்ற சிட்டை கீழே தரப்பட்டுள்ளது. அதில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக:


| | பொருள் | அளவு | விலை | வாங்கிய அளவு | தொகை |
|---|---|---|---|---|---|
| 37. | குளிர்பானம் | 1 போத்தல் | ரூபா 98.00 | .................... | ரூபா 294.00 |
| 38. | ரிபன் | 1 | ரூபா 15.00 | 4 m | .................... |
| 39. | பிஸ்கட் | 100 g | ரூபா 40.00 | .................... | ரூபா 120.00 |
| 40. | பேனை | 1 | .................... | 3 | ரூபா 45.00 |
| 41. | வெள்ளைத்தாள் | 1 | ரூபா 2.00 | 10 | .................... |

**விளையாட்டுக்கார் ஒன்றில் பலூன் ஒன்று ஊதிக்கட்டப்பட்டு பானக்குழாய் வழியாக காற்று வெளியேறச் செய்யப்பட்டது**



42. இப் பரிசோதனை மூலம் எதனை அறிய முடியும்?
............................................................
43. இதன்போது கார் எத்திசையில் பயணம் செய்யும்?
............................................................


44.




படத்தில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொன்றும் 5 cm ஆரையுள்ள வட்டங்களாகும். செவ்வகம் ABCD யின் சுற்றளவு யாது?


............................................................

45. A பெட்டியினுள் B பெட்டிகள் எத்தனையை அடுக்கலாம்?








**கீழே காணப்படுவது ஒரு கணிதப் பொறியாகும். இதில் போடப்படும் இலக்கங்களை 5 ஆல் பெருக்கி 1 ஐக் கூட்டி 2 ஐக் கழிக்குக.**

46. இதில் இலக்கம் 9 போடப்பட்டால் கிடைக்கும் விடை என்ன?
............................................................




**கீழே தரப்பட்ட தாவரங்களின் பெயரை எழுதுக**

| |
|---|
| நன்னாரி / நாயுருவி / சிறுபுல்லடி / வில்வம் / |
| கார்த்திகை கிழங்கு / குப்பைமேனி |

47.

48.

49.

50.


.................... .................... .................... ....................

# ஈழத்தமிழர்களின் கண்ணீரில் அரசியல் நடத்தக்கூடாது

## தமிழருவி மணியம் தெரிவிப்பு



ஈழத் தமிழரின் கண்ணீரில் அரசியல் நடத்தக் கூடாது என, காந்திய மக்கள் இயக்கத் தலைவர் தமிழருவி மணியன் தெரிவித்தார்.

சேலத்தில் நடைபெற்ற இலக்கிய நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழகத்தில் மது விலக்கை அமுல்படுத்த வலியுறுத்தி ஒரு கோடி மக்களிடம் கையெழுத்து பெறத் தீர்மானித்து செயற்பட்டு வருகிறோம்.

அந்தக் கையெழுத்துகளை காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2 ஆம் திகதி, தமிழக முதல்வரிடம் வழங்க உள்ளோம். முதல்வர் மதுக் கடைகளை மூடுவார் என நம்புகிறோம்.

மதுக் கடைகளை மூடினால் அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை சீர் செய்ய கிரானைட், மணல் குவாரிகளை அரசே ஏற்று நடத்தலாம் என மாற்றுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளோம்.

கருணாநிதி அண்மையில் நடத்திய டெசோ மாநாட்டால் ஈழத் தமிழர்களுக்கு எள்ளளவும் பயன் இல்லை.

மாநில அரசின் தடுப்பு நடவடிக்கை இல்லாமல் இருந்திருந்தால், எந்தத் தடயமும் இல்லாமல் அந்த மாநாடு முடிந்திருக்கும்.

கூட்டம் கூடும் உரிமையையும், கருத்துகளை வெளிப்படுத்தும் உரிமையையும் தடுப்பது ஜனநாயக அரசின் நேர்மையான செயற்பாடாக இருக்க முடியாது.

மாநாடு நடத்துவதைத் தடுக்க முயன்ற மாநில அரசின் செயல் கண்டிக்கத்தக்கது.

டெசோ மாநாட்டில் இயற்றப்பட்ட தீர்மானத்தில் மத்திய அரசு ஈழத் தமிழர்களுக்கு அரசியல் வாழ்வாதார உரிமையைப் பெற்றுத் தர வேண்டும் எனத் தீர்மானம் போடப்பட்டுள்ளது.

மத்திய அரசில் தி.மு.க தற்போது இடம் பெற்றுள்ளது. செய்ய வேண்டிய இடத்தில் இருந்து கொண்டுச் செய்ய முடியாத மக்களைத் திரட்டி தீர்மானத்தை மட்டும் போடுவது கருணாநிதியின் கபட நாடகத்தைக் காட்டுகிறது.

ஈழத் தமிழர்களின் கண்ணீரில் அரசியல் நடத்துவதை அவர் கைவிட வேண்டும் எனத் தெரிவித்தார்.

# குடிநீருக்கான தட்டுப்பாடு அதிகரித்துவரும் கவலை



குடிநீருக்கான நெருக்கடி குறித்த கவலைகள் அதிகரித்துள்ளதாக மஹாராஷ்ர மாநில முதலமைச்சர் ப்ரிவிதிராஜ் ஷவான் குறிப்பிட்டுள்ளார்.

கிராமங்களில் மாத்திரமன்றி நகரங்களிலும் இந்த நிலைமை எதிர்வரும் நாட்களில் ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுதந்திர தின கொண்டாட்டங்களை அடுத்து மக்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்த நிலைமையை எதிர்கொள்வதற்காக தற்காலிக மற்றும் நிரந்தர திட்டங்களை அரசாங்கம் வகுத்துள்ளதாகவும் ப்ரிதிவிராஜ் ஷவான் தெரிவித்தார்.

நீரை பாதுகாப்பதற்கு அனைவரும் உறுதியளிக்க வேண்டுமெனவும், அதனை கவனமாகப் பயன்படுத்த வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியச் செய்திகள்

# அரச மருத்துவமனை அலட்சியம் 11 குழந்தைகள் திடீரென மரணம்

(ஆந்திரா)

ஆந்திரா மாநிலம், திருப்பதி அரசு குழந்தைகள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 11 குழந்தைகள் திடீரென மரணமடைந்ததால் பெற்றோர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த சில தினங்களாக திருப்பதி ருயோ அரசு குழந்தைகள் மருத்துவமனையில் 11 குழந்தைகள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தனர்.


இக்குழந்தைகள் திடீரென அடுத்தடுத்து உயிரை விட்டதால் அம்மாநிலம் முழுவதும் மிகுந்த பதற்றம் நிலவியுள்ளது.

குழந்தைகளின் பெற்றோர்கள் இறந்த குழந்தைகளின் சடலத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் வை.எஸ்.ஆர். காங்கிரஸ், தெலுங்குதேசம் ஆகிய ஆந்திராவின் பிரதான அரசியல் கட்சியினரும் ஈடுபட்டனர்.

குழந்தைகளின் மரணத்திற்கு மருத்துவமனையின் அலட்சியமே காரணம் என்று அக்குழந்தைகளின் பெற்றோர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஆனால் ஆபத்தான நிலையில சிகிச்சைக்கு வந்ததாலேயே குழந்தைகள் உயிரிழந்ததாக அரசு மருத்துவமனை வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும் இது தொடர்பாக விசாரணை நடத்த அம்மாநில முதல்வர் கிரண்குமார் ரெட்டி உத்தரவிட்டுள்ளார்



66ஆவது சுதந்திர தினத்தையொட்டி புதுடில்லி இந்தியா கேட்டில், முப்படைகளின் அணிவகுப்புடன் அமர்ஜவான் எனப்படும் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தும் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி.

# செவ்வாய்க் கிரகத்தை ஆராய்வதற்கு விண்கலம்

(புதுடில்லி)

செவ்வாய்க் கிரகத்தை ஆராய்ச்சி செய்ய விரைவில் விண்கலம் அனுப்பப்பட உள்ளதாக பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

டில்லி செங்கோட்டையில் சுதந்திர தினக் கொடியேற்றி வைத்து நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது.

சிவப்புக் கோள் எனப்படும் செவ்வாய்க் கிரகத்தை ஆராய்ச்சி செய்ய இந்தியா விரைவில் விண்கலத்தை அனுப்ப உள்ளது. இதற்கான அனுமதியை மத்திய அமைச்சகம் வழங்கியுள்ளது.

இந்த விண்கலம் செவ்வாய்க் கிரகத்துக்கு அருகில் சென்று முக்கியமான அறிவியல் செய்திகளை திரட்டி வழங்கும். செவ்வாய்க்கு விண்கலம் அனுப்புவது என்பது விண்வெளி ஆராய்ச்சித் துறைக்கு ஒரு மைல் கல்லாகக் கருதப்படுகிறது.

இந்த விண்கலம் வெற்றிகரமாக அனுப்பப்பட்டால் செவ்வாய்க்கு விண்கலம் அனுப்பிய நாடுகளின் வரிசையில் இந்தியா 6ஆவது இடத்தைப் பிடிக்கும்.

மேலும் ஆசியா கண்டத்தில் செவ்வாய்க்கு முதன் முதலாக விண்கலத்தை அனுப்பிய நாடு என்ற பெருமையை இந்தியா பெறும். சீனா மற்றும் ஜப்பான் அனுப்பிய விண்கலங்கள் வழியிலே கைவிடப்பட்டன.

இந்த விண்கலத்தை உருவாக்க ரூபா450 கோடி தேவை என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (இஸ்ரோ) தெரிவித்துள்ளது. இந்த விண்கலம் அடுத்த ஆண்டு நவம்பர் மாதத்தில் செலுத்தப் படும் என்றும் 300 நாள்களில் செவ்வாய்க் கிரகத்தின் சுற்றுப் பாதையை அடைந்து விடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது

# ராகுலின் கறுப்புப் பணம் வெளிநாடுகளில் பதுக்கல்

## பாரதிய ஜனதா குற்றச்சாட்டு

வெளிநாடுகளில் கறுப்புப் பணத்தைப் பதுக்கியுள்ள இந்தியர்கள் பட்டியலில் ராகுல் காந்தியும் இடம்பெற்றுள்ளார் என முன்னாள் மத்திய சட்ட அமைச்சரும் பாரதிய ஜனதா கட்சியின் மாநிலங்களவை உறுப்பினருமான ராம் ஜேட்மலானி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் தடையை மீறி பேரணி சென்றதால் அம்பேத்கர் விளையாட்டு அரங்கில் பொலிஸாரால் கடந்த திங்கட்கிழமை மாலையில் தடுத்து வைக்கப் பட்டிருந்த ராம்தேவை கடந்த செவ்வாய்க்கிழமை காலையில் ராம் ஜேட்மலானி சந்தித்தார்.

கறுப்புப் பண விவ்காரத்தில் ராம்தேவ் மேற்கொண்டுள்ள போராட்டத்தின் உறுதிக்காக அவருக்கு ஜேட்மலானி பாராட்டுத் தெரிவித்தார். பின்னர் அங்கு கூடியிருந்த ராம்தேவ் ஆதரவாளர்களிடையே ராம் ஜேட்மலானி பேசியதாவது

வெளிநாடுகளில் கறுப்புப் பணம் வைத்துள்ள தங்கள் கட்சித் தலைவர்களின் பெயர்களை வெளிவராமல் மறைக்கும் நடவடிக்கையில் காங்கிரஸ் கட்சி இறங்கியுள்ளது. அதனால்தான் கறுப்புப் பணம் வைத்துள்ள இந்தியர்களின் பெயரை வெளியிட மத்திய அரசு தயக்கம் காட்டி வருகிறது.

மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி 2013ஆம ஆண்டிலேயே ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டு விடும். 2014ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருக்காது. கறுப்புப் பணத்தை இந்தியாவுக்குக் கொண்டு வரும் முயற்சியில் இறங்கியுள்ள ராம்தேவ் எனது கூட்டாளி. அந்தப் பணம் எமது நாட்டுக்கு வந்து விட்டால் இந்தியர்கள் வரி செலுத்தும் வாய்ப்பே இருக்காது. மத்திய அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள சரி பாதிபேர் ஊழல் கறை படிந்தவர்கள் எனத் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் - சீன எல்லையில் சுரங்கப் பாதைகள் அமைப்பு

(புதுடில்லி)

பாகிஸ்தான் - சீனா அருகே உள்ள இந்திய எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பை அதிகரிக்க மத்திய அரசு அதிரடித் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. இதன் படி பாகிஸ்தான் - சீனா அருகே உள்ள ஜம்மு - காஷ்மீர், சிக்கிம், அருணாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட பகுதிகளில் 18 சுரங்கப் பாதைகள் அமைக்கப்படுகிறது.

முதல் கட்டமாக 7 சுரங்கப் பாதைகள் அமைக்கும் பணி தொடங்கப்பட்டது. மேலும் 11 சுரங்கப்பாதைகள் அமைக்கும் பணி ஓரிரு மாதங்களில் தொடங்கும். இந்த சுரங்கங்களில் இந்திய இராணுவத்தின் முக்கிய ஆயுதங்களை பதுக்கிக் கொள்ளவும், போரின் போது இராணுவ வீரர்கள் பதுங்கிக் கொள்ளவும் வசதிகள் ஏற்படுத்தப்படுகிறது. இது தொடர்பாக இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் கூறும்போது, போரின் போது எதிரிகள் எமது நாட்டு இராணுவ வீரர்களின் நடமாட்டத்தை செயற்கைகோள் மூலம் கண்காணித்து எளிதில் தாக்குதல் நடத்தி விடலாம்.

செயற்கைக் கோளின் பார்வையில் படாமல் தப்புவதற்காகவே தற்போது பாகிஸ்தான் - சீனாவையொட்டி உள்ள எல்லைப் பகுதிகளில் சுரங்கப்பாதைகள் அமைக்கப்படுகிறது. இப்பாதைகளின் அருகே ஏராளமான ஆயுதங்களை பதுக்கிக் கொள்ளும் வகையில் பெரிய அளவில் சுரங்கங்களும் தோண்டப்படும். சுரங்கப் பாதைகளில் இரயில்களும் விடப்படுகிறது.

சுரங்கப்பாதைகள் அமைக்க ரூபா 26 ஆயிரத்து 155 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் 2020-21ஆம் ஆண்டுக்குள் நிறைவு பெறும் எனத் தெரிவித்தார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# பாகிஸ்தான் விமானத்தளம் மீது தீவிரவாதிகள் அதிரடித்தாக்குதல்

## – 19பேர் பலி: பலவிமானங்கள் சேதம்



பாகிஸ்தானில் விமானப்படை தளத்தில் தீவிரவாதிகள் நேற்று அதிகாலை திடீரென தாக்குதல் நடத்தியுள்ளனர் இதில் பல போர் விமானங்கள் சேதமடைந்துள்ளன 18 தீவிரவாதிகள் பலியாகியுள்ளனர்.

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகர் அருகே பஞ்சாபிலிருந்து 80 கி.மீ.தொலைவில் உள்ள 'கம்ரா' பாகிஸ்தான் விமானப்படைத்தளத்தில் 30க்கும் மேற்பட்ட போர்விமானங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அதிகாலை 2 மணியளவில் இராணுவ சீருடையில் துப்பாக்கியுடன் ஊடுருவிய 15க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். கைக்குண்டுகளும் வீசப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதைத் தொடர்ந்து பாதுகாப்புப்படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் சீன நாட்டின் உதவியுடன் உருவாக்கப்பட்டு வரும் எப்-17 உள்ளிட்ட ஜெட் விமானம் எனப்படும் போர் விமானங்கள் பல சேதமடைந்தன. வீரர்களுக்கும் பயங்கரவாதிகளுக்கும் நடந்த தாக்குதலில் 18 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.மேலும் ஒரு பாதுகாப்பு வீரரும் உயிரிழந்தார்.

இது குறித்து பாகிஸ்தானின் ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியில், தீவிரவாதிகள் பஞ்சாப் மாகாணத்தின் பின்ட்-சுலைமான்- மக்கான் கிராமம் வழியாக , கம்ரா விமானபடை தளத்திற்குள் புகுந்துள்ளதாகவும் கிராமவாசிகளின் உதவியுடன் தான் இவர்கள் விமானபடைதளத்திற்குள் புகுந்துள்ளதாகத் தெரிவிக்கின்றது.

தாக்குதல் சம்பவம் நடந்து வருவதை அறிந்ததும்,பாக். இராணுவம உஷார்படுத்தப்பட்டுள்ளது. தற்போது ராவல்பிண்டி நகரில் உள்ள இராணுவ வீரர்கள், கம்ராவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

# ஒபாமாவுக்கு சீக்கியர்கள் நன்றி



அமெரிக்காவின் விஸ்கோசின் குருத்வாராவில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக, நாடு முழுவதும் தேசிய கொடிகள் அரை கம்பத்தில் பறக்க விடப்பட்டன.

அமெரிக்காவின் விஸ்கோஸ் நகரில் உள்ள சீக்கிய வழிபாட்டு தலமான, குருத்வாராவில் இனவெறியோடு நிகழ்த்தப்பட்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களிலும் தேசிய கொடியை அரைகம்பத்தில் பறக்க விட மாநில கவர்னர்களுக்கும் ஜனாதிபதி பராக் ஒபாமா உத்தரவிட்டார்.

இதற்கு தாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்வதாக சீக்கியர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் இது தொடர்பாக வாஷிங்டன் குருத்வாரா அமைப்புக்கள் சார்பில் ஒபாமாவிற்கு நினைவுப் பரிசு ஒன்றும் வெள்ளை மாளிகைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# விக்கீலீக்ஸ் நிறுவுனருக்கு ஈக்குவடார் தஞ்சம்

(லண்டன்)

விக்கி லீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சுக்கு தஞ்சம் அளிக்க, ஈக்வடார் நாடு ஒப்புதல் அளித்துள்ளது.

அமெரிக்காவின் இராணுவ இரகசியங்கள் உட்பட பல்வேறு இரகசியங்களை, விக்கி லீக்ஸ் இணைய தளத்தில் வெளியிட்டு, பரபரப்பை ஏற்படுத்தியவர், ஜூலியன் அசாஞ். இரண்டு பெணகளை கற்பழித்தது தொடர்பாக, சுவீடன் அரசு, இவர் மீது வழக்கு தொடர்ந்தது. இதையடுத்து, அசாஞ்ச், பிரிட்டனில் தஞ்சம் புகுந்தார். சுவீடன் கோரிக்கைப்படி, இவர் கைது செய்யப்பட்டார். ல்ண்டன் கோர்ட் இவருக்கு, ஜாமின் வழங்கியது. இதறகிடையே, தங்கள் நாட்டிடம் ஒப்படைக்கும்படி, சுவீடன் கோரியது.

இதை எதிர்த்து, அசாஞ்ச் மனு செய்திருந்தார். இந்த மனுவை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டின் ஏழு நீதிபதிகளில், ஐந்து நீதிபதிகள், அசாஞ்சை சுவீடனிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டுள்ளனர். இந்த உத்தரவை எதிர்த்து, அசாஞ்ச், மேல் முறையீடு செய்தார். ஆனால், இவரது மனுவை கோர்ட் தள்ளுபடி செய்து விட்டது. இதையடுத்து, அசாஞ்சை கைது செய்து, சுவீடனிடம் ஒப்படைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதை தவிர்ப்பதற்காக, அசாஞ்ச், லண்டனில் உள்ள ஈக்வடார் நாட்டுத் தூதரகத்தில், கடந்த, ஜூன் 19ஆம் திகதி தஞ்சம் புகுந்தார். தூதரகத்தை விட்டு வெளியேறும்பட்சத்தில், அவர் கைது செய்யப்படுவார்.

இதுகுறித்து, அசாஞ்ச், முன்பு குறிப்பிடுகையில், சுவீடனுக்கு என்னை நாடு கடத்தினால், அமெரிக்காவிடம் நான் ஒப்படைக்கப்படுவேன். அமெரிக்காவின் ராணுவ இரகசியங்களை வெளியிட்டதற்காக, எனக்கு அமெரிக்காவில் மரண தண்டனை அளிக்கப்படும் அபாயம் உள்ளது என்றார்.

# 148 மில்லியன் யூரோ பரிசை தட்டிய தம்பதிகள்



இங்கிலாந்தைச் சேர்ந்த தம்பதி ஏட்ரியன் பேபோர்டு மற்றும் கில்லியன் ஆகியோருக்கு 148 மில்லியன் யூரோ பரிசுத் தொகை கிடைத்துள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டு முதல் 'யூரோ மில்லியன் லாட்டரி குலுக்கல்' ஐரோப்பா கண்டத்தில் நடந்து வருகிறது.

இங்கிலாந்தின் நேஷனல் லாட்டரி நிறுவனம் நடத்தும் இந்த குலுக்கலுக்கான டிக்கெட்டுகள் மேற்கு ஐரோப்பிய நாடுகளான ஆஸ்திரியா, பெல்ஜியம், இங்கிலாந்து, பிரான்ஸ், அயர்லாந்து, லக்சம்பர்க், போர்த்துக்கல், ஸ்பெயின், சுவிட்சர்லாந்து உள்ளிட்ட 9 நாடுகளில் விற்கப்படுகிறது.


இந்த ஆண்டுக்கான லாட்டரி குலுக்கல் கடந்த 10ஆம் திகதி நடைபெற்றது. இதில் இங்கிலாந்தில் உள்ள ச..ப்போக்கைச் சேர்ந்த தம்பதி ஏட்ரியன் பேபோர்டு(41) மற்றும் கில்லியன்(40) ஆகியோருக்கு 148 மில்லியன் யூரோ பரிசு விழுந்துள்ளது.

கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பு திருமணமான அவர்களுக்கு 6 வயதில் ஒரு மகளும், 4 வயதில் ஒரு மகனும் உள்ளனர். ஹெர்ட்போர்ட்ஷயரில் உள்ள டவுன் ஹால் கன்ட்ரி ஹவுஸ் ஹோட்டலில் நடந்த விழாவில் அவர்கள் தான் லாட்டரி குலுக்கலில் வெற்றி பெற்றவர்கள் என்று அறிவிக்கப்பட்டது. ஹேவர்ஹில்லில் பார்ட்னர்ஷிப் முறையில் மியூசிக் கடை வைத்துள்ளார் ஏட்ரியன். கில்லியன் கேம்ப்ரிட்ஜில் உள்ள ஆட்டன்ப்ரூக்ஸ் மருத்துவமனையில் குழந்தைகள் வார்டில் சுகாதார உதவியாளராக உள்ளார்.

தற்போது லாட்டரி பணத்தை வைத்து என்ன செய்வது என்று அவர்கள் திட்டமிட்டு வருகின்றனர். சகல வசதிகளுடன் கூடிய வீட்டை வாங்க முடிவு செய்துள்ளனர். மேலும் கில்லியன் தனது கனவுக் காரான ஆடி க்யூ7 ஒன்றை வாங்கவிருக்கிறார்.

# பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் பயங்கரவாதிகளிடம் செல்லும் அபாயம்

## – அமெரிக்கா எச்சரிக்கை



பாகிஸ்தானில், பயங்கரவாதத்தை கட்டுப்படுத்தாவிட்டால் அந்நாட்டின் அணு ஆயுதங்கள் பயங்கரவாதிகளின் கைகளுக்குச் செல்லும் அபாயம் உள்ளது என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லியோன் பனெட்டா அச்சம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் அரசு கொள்கைகளை ஆய்வு செய்யும் பார்லிமெண்ட் ஆய்வுக் குழு, சமீபத்தில் ஆய்வறிக்கை ஒன்றை அளித்தது.

இது தொடர்பாக, பென்டகனில் நேற்று முன்தினம் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லியோன் பனெட்டா, நிருபர்களிடம் கூறுகையில், பாகிஸ்தானில் பயங்கரவாதத்தை கட்டுப்படுத்தாவிட்டால், அந்நாட்டின் அணு ஆயுதங்கள், பயங்கரவாதிகளின் கைகளுக்குச் சென்று விடும் அபாயம் உள்ளது.

பயங்கரவாதத்தை எதிர்கொள்ள பொதுவான நோக்கம் வேண்டும் என, பாகிஸ்தான் அதிகாரிகளிடம் நான் வலியுறுத்தியுள்ளேன். பயங்கரவாதிகள், அமெரிக்காவுக்கு மட்டுமல்ல, பாகிஸ்தானுக்கும் அச்சுறுத்தலாக தான் உள்ளனர்.

பயங்கரவாதத்துக்கு பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் பலர் உயிரிழந்துள்ளனர். அந்நாட்டு இராணுவத்தினரும் பலியாகியுள்ளனர். இதை பாகிஸ்தான் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என பனெட்டா கூறினார்.

# அமெரிக்க உதவியை ஏற்க மறுத்த ஈரான்



ஈரான் பூகம்பத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமெரிக்க அளிக்க முன்வந்த உதவியை ஏற்க ஈரான் மறுத்து விட்டது.

இது பற்றி ஈரான் உள்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் கூறுகையில், பூகம்பத்தில் பாதிகக்கப்பட்டவர்களுக்கு அமெரிக்க அளிக்க முன்வந்த உதவியை ஈரான் ஏற்றுக்கொள்ளாது.

அமெரிக்கா நல்லெண்ணத்துடன் உதவி செய்யும் என நாங்கள் எண்ணவில்லை. தடை காரணமாக இங்கு மருந்து பொருட்கள் கிடைப்பதில் சிக்கல் உள்ளது.


# கொங்கோவில் சுரங்க விபத்து 60 தொழிலாளர்கள் பலி



கொங்கோ நாட்டில் ஓரியண்டல் மாகாணம், மம்பஸா பிராந்தியத்தில் உள்ள சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் 60 தொழிலாளர்கள் பலியாகியுள்ளனர். தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர். 100 மீற்றர் ஆழப்பகுதியில் அவர்கள் வேலை செய்து கொண்டிருந்தபோது, சுரங்கம் இடிந்து விபத்து ஏற்பட்டது.

உள்ளே சிக்கிக் கொண்ட 60 தொழிலாளர்களும் பலியாகினர். இந்த விபத்து நேற்று முன்தினம் நடந்ததாக கொங்கோ வானொலி அறிவித்துள்ளது. கொங்கோ நாட்டில் ஏராளமான சுரங்கங்கள் உள்ளன. ஆனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படாததால், அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு தொழிலாளர்கள் பலியாவது குறிப்பிடத்தக்கது.

# பொதுநல சேவையாளன் இழப்பு அந்த சமூகத்திற்கு பேரிழப்பாகும்



(கிளிநொச்சி)

எப்பொழுதும் மக்களின் பிரச்சினைகளுடனும் தேவைகளுடனும் அதனை தீர்த்து வைக்க வேண்டும் என்ற சிந்தனையுடனும வாழ்ந்தவர் அமரர் மாணிக்கம் சபாநாதன் அவர்கள் என நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்

நேற்று அவரது இல்லத்தில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் அவா மேலும் தெரிவிக்கையில் எப்படியும் வாழலாம் என்றில்லாது இப்படிதான் வாழவேண்டும் என்று வாழந்தவர்களுல் அமரர் சபாநாதன் அவர்களும் ஒருவர் ஒரு கூட்டுறவாளனாக சமூக சேவையாளனாக என பலதரப்பட்ட மக்கள் பணிகளில் ஈடுபட்ட ஒருவர்.

அவர் என்னை சந்திக்கும் போதெல்லாம் மக்களின் பிரச்சினைகளுடன்தான் சந்திப்பார் அந்த பிரச்சினைகளை தீர்த்து வைக்க வேண்டும் என்பதில் அதிக அக்கறை செலுத்துவார் அவரது செயற்பாடுகளுக்கு நிறைய உதாரணங்களை கூறலாம் இருப்பினும் ஒரு சிறிய உதாரணத்தை மட்டும் கூற விரும்புகின்றேன் அதாவது மீள்குடியேற்றத்தின் பின்னர் திருநகர் பகுதிக்கு மின்சாரம் கிடைப்பதற்கு அமரர் சபாநாதன் அவர்களின் தொடர்ச்சியான அழுத்தமும் காரணம் ஆனால் திருநகர் கிராமத்தில் எல்லா பகுதிகளுக்கும் மின்சாரம் கிடைத்த நிலையில் அவரது வீட்டுக்கு அவர் இறந்த பின்னரே மின்சாரம் கிடைத்துள்ளது இது அவரது சமூக சேவைக்கு ஒரு உதாரணம் எனத்தெரிவித்த அவர் இவரை போன்ற பொதுநல சேவையாளன் ஒருவரின் இறப்பு அந்த சமூகத்தினது பேரிழப்பாகும் எனவும் குறிப்பிட்டார்.

# முல்லைத்தீவில் காசநோய் கட்டுப்படுத்த நடவடிக்கை

காசநோய் தொற்றைக் கட்டுப்படுத்தும் முகமாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் காசநோய் தொடர்பான புத்தக வெளியீடும் காசநோய் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கு முல்லைத்தீவு வைத்தியசாலையின் வைத்தியர்களுக்கு நடத்தப்பட்டதாகவும் இதன் மூலம் வைத்தியர்கள் காசநோய் தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்றவகையில் வழங்கமுடியும் என தான் நம்புவதாகவும் காசநோய் வைத்திய நிபுணர் எஸ்.யமுனானந்தா தெரிவித்துள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் 25 பேர் காசநோய் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்தகால யுத்தத்தின் பின்னர் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் சுமார் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பேர் வசிக்கின்றனர். இந்த நிலையில், கடந்த 7 மாத காலப்பகுதியில் 25 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட காசநோய் பரிசோதனையின்போது காசநோய் தொற்றுக்கு உள்ளானமை கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும், 2012ஆம் ஆண்டின் இறுதியில் 35 பேர் காசநோய் தொற்றுக்கு உள்ளாவதற்கான சாத்தியக்கூறு காணப்படுகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஐ.நா. முயற்சியை அரசு வரவேற்கிறது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை மீளாய்வுக் குழுவினரின் முயற்சியை அரசு மனப்பூர்வமாக வரவேற்கிறது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். தகவல் ஊடக அமைச்சில் நேற்றுக்காலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 12 ஆம் திகதி சென்னையில் நடைபெற்ற டெசோ மாநாட்டுத் தீர்மானங்கள் தொடர்பில் அரசு ஆராய்ந்துவருவதாக அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் தனி நாட்டுக் கோரிக்கையை மையப்படுதியுள்ள டெசோ மாநாட்டுத் தீர்மனங்கள் தொடர்பில் அரசின் கவனம் தற்போது திரும்பியுள்ளது. இது தொடர்பில் ஆராயந்து வருகிறோம். சில நாடுகள் குற்றம் சுமத்துவதுபோல் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் ஒரு போதும் நடைபெறவில்லை என்பதை நாம் உலக நாடுகளுக்குத் தெளிவுபடுத்திவருகிறோம். ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகளின் மூன்று பிரதிநிதிகள் நவநீதம் பிள்ளையின் ஏற்பாட்டில் மனித உரிமைகள் தொடர்பான மீளாய்வுக்காக இலங்கை வரவுள்ளதாக அறிகிறோம். அவர்களை நாம் மனப்பூர்மாக வரவேற்கிறோம்.

ஏனெனில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கைமீது குற்றம் சுமத்தும் நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை வந்து உண்மை நிலையை நேரில் கண்டறிய வேண்டும் என்பதே எமது அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். இந்த வரிசையிலேயே இந்திய நாடாளுமன்றக் குழுவொன்று அண்மையில் இலங்கை வந்து உண்மை நிலை அறிந்து சென்றுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

# மும்மொழிப் பெயர்ப்பலகை நாளை முதல் முல்லைத்தீவில்

(நெடுங்கேணி)

அரசாங்கத்தின் மும்மொழிக் கொள்கைத் திட்டத்தின் கீழ் ஒரு நடவடிக்கையாக மக்களுக்காகப் பேருந்து சேவைகளை நடத்துகின்ற அரச மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் நாளை முதல் இதற்கான சட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் என முல்லை மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பயணிக்கின்ற ஊரினைக் குறிக்கும் விளம்பரப் பலகை மும்மொழிகளிலும் காட்சிப்படுத்தல் வேண்டும் இதன்படி தமிழ்ப் பிரதேசங்களில் கடமைபுரிபவர்கள் முதலில் தமிழ், அடுத்து சிங்களம் அடுத்து ஆங்கிலம் என விளம்பரப் பலகை காட்சிப்படுத்த வேண்டும் எனவும் இதனை நாளைமுதல் வீதிப் பொலிஸார் காண்காணிப்பர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (12)

# துணுக்காய் கல்வி வலயத்தில் ஆசிரியர் ஆலோசகருக்கு வெற்றிடம்

துணுக்காய் கல்வி வலயத்தில் 12 பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகர்களுக்கான வெற்றிடங்களுக்குத் தகைமையுடைய ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாகத் துணுககாய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

தமிழ், கணிதம், ஆங்கிலம், சமூகக்கல்வி, வரலாறு, விவசாயம், வர்த்தகம், ஆரம்பக்கல்வி, சித்திரம், நடனம், கிறிஸ்தவம், மனையியல் ஆகிய பாடங்களுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை ஆசிரிய சேவைத் தரம் I, தரம் 2-I ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் இப்பதவிக்கு விணணப்பிக்க முடியும் எனவும் தகுதியுடையவர்களிடமிருந்து போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்காவிடின் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 2-II ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களைத் துணுக்காய் கல்வி வலயத்தில் கடமை நாட்களில் கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலவிடம் பெற்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதிக்கு முன் வலயக் கல்விப் பணிபபாளர் துணுக்காய் கல்வி அலுவலகம் துணுக்காய் என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ கையளிக்கவும் என குறிப்பிட்டுள்ளார். (12,116)

## பணிப்புறக்கணிப்புக்கு நேற்றுடன் முற்றுப்புள்ளி

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை ஊழியர்கள் மேற்கொண்டிருந்த பணிப் பகிஷ்கரிப்பு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதற்கமைய அனைத்து ஊழியர்களும் இன்று காலை முதல் கடமைக்கு சமூகமளிக்குமாறு இலங்கை மின்சாரசபை ஊழியர் தொழிற்சங்க ஒன்றியத்தின் நடவடிக்கை குழு உறுப்பினர் ரஞ்ஜன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

# மீண்டும் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் மருத்துவர்கள்

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இன்று நாடு தழுவிய ரீதியில் பணிப்பகிஷ்கரிப்பை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது. மேலும் நேற்று நண்பகல் 12 மணி தொடக்கம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிகளில் இருந்து தமது சங்க வைத்தியர்கள் விலகியுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்க மத்திய குழு உறுப்பினர் நவீன் டி சொய்சா தெரிவித்திருந்தார். தெஹிவளைப் பகுதியில் உள்ள கொழும்பு தேசிய வைத்தியசாலை விசேட சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் லலந்த ரணசிங்க வீட்டின் மீது நடத்தப்பட்டுள்ள கைக்குண்டுத் தாக்குதலை கண்டித்து இப்பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணிபுரியும் அனைத்து அரச வைத்தியர்களும் இன்று நண்பகல் 12 மணிவரை பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவர் எனவும் அவசர சிகிச்சைப் பிரிவு மாத்திரம் இயங்கும் என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நேற்றுக் கூடிய அரச வைத்திய அதிகாரிகள் சங்க மத்திய செயற குழு நாடு தழுவிய பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்வதென்ற முடிவை எடுத்துள்ளது.

## இலங்கயின்...

கட்டியெழுப்பும் செயற்பாட்டின் முன்னோக்கிய பாதையில் மிகப் பெரிய படிக்கல்லாக அமையும். இனப்பிரச்சினைக்குக் காலதாமதமின்றி அரசியல் தீர்வொன்று காணப்படும் முயற்சியில் இந்தியா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்றும் சமத்துவமான வாழ்வியல், நீதி, சுயகெளரவம் மற்றும் சகல பிரஜைகளுக்குமான மதிப்பு ஆகியவற்றைப் பாதுகாக்கும் ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் முன் முயற்சிகளுக்கும் இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும், ஆயுத மோதலுக்கு முடிவு கட்டப்பட்டதானது இலங்கையர்கள் அனைவருக்குமான சிறந்ததொரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தும் விடயத்தில் குறிப்பிட்டளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளமை நின்மதியளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## கிழக்கில்...

ஆசனங்களும் கிடைக்கும். அதன் மூலம் எமக்கு 13 ஆசனங்கள் கிடைக்கும். ஐ.தே.க. 7 ஆசனங்களில் வெற்றிபெறுமேயானால், நாம் 20 ஆசனங்களைப் பெறமுடியும். இதன்மூலம் கிழக்கு மாகாண சபையில் பெரும்பான்மை பலம் கொண்ட ஐ.தே.க. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்த ஆட்சியை நிறுவலாம்.

ஏனைய கட்சிகளின் ஆதரவைப் பெறமுடியும் என்று நாம் நம்பவில்லை. அவை சிறிலங்கா அரசுக்கு விசுவாசமாக இருப்பதாக வாக்குறுதி அளித்துள்ளன. எனவே, நாம் 20 ஆசனங்களைக் கைப்பற்றினால், இலகுவாக முதல்வர் பதவியைப் பெறமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

## யாழ்.நகரில்...

தீயணைப்புப் படையினர் தீ மேற்கொண்டு பரவாது தீயினைக் கட்டுப்படுத்தி அணைத்தனர். இந்த விபத்தினால் குறித்த கடைக்குள் இருந்த பல மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து நஸ்டம் ஏற்பட்டிருப்பதாக அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளனர். (பா,137)

## யாழில் இந்திய...

கட்டுப்பாட்டாளர் நாயகம் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார். கைதுசெய்யப்பட்டுள்ள 53 இந்தியர்களும் முதற்கட்ட சட்ட நடவடிக்கைகளை அடுத்து நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படுவார்கள் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பொதுநலவாய நாடுகளின் மாநாடு கொழும்பில்

பொது நலவாய நாடுகளின் 58 ஆவது நாடாளுமன்ற மாநாடு எதிர்வரும் செப்டம்பர் 07 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார். நேற்று முற்பகல் தகவல் ஊடகத்துறை அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இத்தகவலை வெளியிட்டார். இந்த மாநாடு பற்றி சபாநாயகர் மேலும் தெரிவிக்கையில்: மாற்றத்துக்கான கொள்கைகளைப் பல்ப்படுத்தல் என்ற தொனிப்பொருளில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து வைப்பார். 54 நாடுகளைச் சேர்ந்த 179 பிராந்தியங்களின் 800 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொள்கின்றனர். இது வரையில் சபாநாயகர் களும் அமைச்சர்களுமாக 600 பேர் தமது வருகையை உறுதிப்படுத்தியுள்ளனர். பொதுநலவாய நாடுகளின் பொதுப் பிரச்சனைகள் இந்த மாநாட்டில் ஆராயப்படும். முக்கியமாக கல்வி- சுகாதாரம் மற்றும் வறுமை போன்ற விடயங்களும் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் கலந்தாலோசிக்கப்படும் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி மற்றும் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல ஆகியோரும் இம்மாநாடு தொடர்பில் கருத்துத் தெரிவித்தனர். இம்மாடு தொடர்பான தகவல் வழங்கு தவற்கா புதிய இணையத்தளம் ஒன்றையும் சபாநாயகர் ஆரம்பித்து வைத்தார்.

# வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு பலம் சேர்க்கும் நடவடிக்கை தொடர்கிறது



(கொழும்பு)

பயங்கரவாதம் நிறுத்தப்பட்ட போதும் நமது செயற்பாடுகள் நிறுத்தப்பட முடியாதது. வட்டுக்கோட்டைத் தனிநாடு கோரிக்கைக்குப் பலம் சேர்க்கும் நடவடிக்கைகள் இப்போதும் நடந்து கொண்டிருக்கின்றன என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

'கெமுனு சேவா' படையணிக்கு வர்ணம் கையளிக்கும் வைபவம் நேற்றுமுன்தினம் இரத்தினபுரி குருவிட்ட படை முகாமில் நடைபெற்றது. அமைச்சர்கள், ராஜதந்திரிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, முப்படைத் தலைவர்கள் மற்றும் மதத் தலைவர்கள் கலந்து கொண்ட இந் நிகழ்வில் ஜனாதிபதி தொடர்ந்தும் உரையாற்றுகையில், நாட்டின் பாதுகாப்புக்கும் செயற்பாட்டுக்கும் நாம் செய்ய வேண்டியது பெருமளவு உள்ளது. தனி இராச்சியத்துக்குப் பலம் சேர்க்க முயல்வோர் விடயத்தில் படையினர் மட்டுமன்றி முழு நாட்டு மக்களும் தெளிவுடன் செயற்பட வேண்டும்.

அண்மையில் நடந்த ஈழக் கோரிக்கைக்கு பலம் சேர்க்கும் மாநாட்டின் பின்னணி தனியான ஈழ இராச்சியக் கொள்கையே. இது விடயத்தில் சகலரும் தெளிவுபெற்றிருக்க வேண்டும். எம்மத்தியில் உள்ள ஒற்றுமையையும் நம்பிக்கையையும் சீர்குலைக்கின்ற செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. ஈழம் கோருபவர்களின் தந்திரமான செயல்களே அவை. நாட்டின் மீதான எமது உணர்வை அவர்கள் இல்லாதொழிக்க முயற்சிக்கின்றனர். அதனால் பிறந்த தாய்நாட்டை விமர்சிக்க பலர் தம்மைப் பழக்கிக் கொண்டுள்ளனர்.

கடந்த காலங்களில் ஈழத்தை ஆதரிக்கும் இத்தகைய மாநாடுகளுக்குப் போன ஒரு கட்சித் தலைவரும் கூட இந்தியாவை விமர்சித்தார். இலங்கையில் ஈழம் அமைக்க நினைத்த அவர்கள் அத்தோடு அந்தப் பேச்சை நிறுத்திக் கொண்டனர். இது தான் உலகின் இன்றைய நிலை என்பதை நாம் உணர வேண்டும்.

வேறு நாடுகளில் ஈழம் உருவாக்கப் பட்டால் பரவாயில்லை. தமது நாட்டில் ஈழம் உருவாவதை எவரும் விரும்ப வில்லை என்பதே இதன் மூலம் தெரிய வருகிறது. எனத்தெரிவித்தார்.

# பிரித்தானியப் பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு பயணம் செய்யும் தமது நாட்டுக் குடிமக்களுக்கு பிரித்தானியா, மிகவும் அவதானமாக இருக்கும்படி புதிய பயண எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இந்தப் பயண எச்சரிக்கைக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் 2009 மே மாதம் முடிவுற்றாலும், இலங்கையில் தேசியவாதம் எழுச்சி கண்டுள்ளது. இதன் விளைவாக, மேற்குலக எதிர்ப்பு - குறிப்பாக பிரித்தானிய எதிர்ப்பு வாதம் வலுவடைந்துள்ளது.

இது பிரித்தானியத் தூதரகம் மற்றும் ஏனைய இராஜதந்திர சுற்றுப்புறங்களில் எதிர்ப்பு வன்முறை போராட்டங்களுக்கு இட்டுச் சென்றுள்ளது. இந்தப் போராட்டங்கள் பொதுவான பிரித்தானிய சமூகத்தை நோக்கியதாக இருந்தாலும், நீங்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

போராட்டங்கள் நடைபெறும் பகுதிகளைத் தவிர்க்க வேண்டும். விடுதலைப் புலிகள் 2009 மே மாதம் தோற்கடிக்கப்பட்டு விட்ட போதும், இலங்கை அரசாங்கம் பரந்தளவிலான தீவிரவாத எதிர்ப்பு அதிகாரங்களைப் பயன்படுத்துவதுடன், சோதனைச் சாவடிகள் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளையும் அதிகரித் துள்ளது. அதிகளவிலான இராணுவத்தினர் நாடு முழுவதிலும் நிலை கொண்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரச தொழில் ஆசை காட்டி பணமோசடி செய்தவர் கைது

அரச தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவரை கல்கமுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் அநுராதபுரம், அம்பாறை, மொனராகலை, வவுனியா மற்றும் கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்தவர்களிடம் அரச தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி, நிதி மோசடி செய்துள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்டவரிடமிருந்து வெளிநாடு செல்வதற்கான விண்ணப்ப பத்திரம் மற்றும் அரச பணிக்கான விண்ணப்பப் பத்திரம் என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரை நேற்றுக் கல்கமுவ நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்கமுவ பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# தமிழக அகதி முகாமில் இலங்கையர்கள் உண்ணாவிரதம்

தமிழகத்தின் பூந்தமல்லி விசேட அகதிகள் முகாமிலுள்ள இலங்கையர்கள் 8 பேர் நேற்று முன்தினம் முதல் காலவரையற்ற உண்ணா விரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

செந்தூரன் என்பவர், விசேட முகாம்கள் மூடப்பட வேண்டுமென கோரி உண்ணாவிரதம் மேற்கொள்ளப்போவதாக அறிவித்ததையடுத்து கடந்த 4 ஆம் திகதி செங்கல்பட்டு முகாமிலிருந்து பூந்தமல்லி முகாமுக்கு மாற்றப்பட்டார். அகதிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் இவர் இருந்தாக சந்தேகிக்கப்படுகிறது.

எவ்வித குற்றச்சாட்டுகளுமின்றி அகதிகள் இம்முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என அகதியொருவர் தெரிவித்துள்ளார். கடந்த 6 ஆம் திகதி செந்தூரன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். அவருடன் மேலும் 7 பேர் உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்துள்ளார். எனினும் மாவட்ட நிர்வாக அல்லது பொலிஸ் திணைக்கள அதிகாரிகள் எவரும் ஆர்ப்பாட்டக்காரர்களை சந்திக்காத நிலையில், இந்த அடையாள உண்ணாவிரதம் கால வரையறையற்ற உண்ணாவிரதமாக மாறியுள்ளது.

அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டால் அதிகாரிகள் வருவார்கள் என நாம் எண்ணினோம். ஆனால் அது பலனளிக்கவில்லை. எனவே அதிகாரிகள் எம்மை சந்திக்கும் வரை காலவரையறையற்ற உண்ணாவிரதம் மேற்கொள்ள நாம் தீர்மானித்துள்ளோம் என அவர் தெரிவித்தார்.

# மின்சார உற்பத்தியில் சரிவு திட்டமிட்ட சதி முயற்சியா?

நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தில் திட்டமிட்ட சதி முயற்சிகள் ஏதும் நடைபெறுகிறதா என்பது பற்றி அரசாங்கம் ஆராய்ந்துவருவதாக அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத் துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் இயந்திரக் கோளாறுகள் தொடர்ச்சியாக ஏற்பட்டுவருவதன் காரணமாக மின் உற்பத்தி தடைப்பட்டுள்ளது. இதன் காரணமாக நாட்டில் மின்வெட்டு அமுலாகின்றது.

மின் உற்பத்தி தடைப்படுவதைப் பாரிய பிரச்சினையாகக் கருத முடியாது. எனினும் எதிர்பார்த்த உற்பத்தி கிடைக்காவிட்டால் நாட்டுக்கு நஷ்டமே. மின்சார உற்பத்தித் திட்டங்கள் மிகவும் சிக்கலான செயற்பாடுகளாகும். நுரைச்சோலையில் மின் உற்பத்தி தடைப்படக் காரணம் திட்டமிட்ட சதி முயற்சிகளா அல்லது தொழில்நுட்பக் குறைபாடுகளா என்பது பற்றி உறுதியாகக் கூற முடியாவிட்டாலும் இது தொடர்பில் அரசாங்கத்தின் கவனம் திரும்பியுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் 18 ஆயிரம் பேர் தமிழ் மொழியில்

(கொழும்பு)

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையை இந்த மாதம் 26 ஆம் திகதி நடாத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிடுகின்றது. இம்முறை பரீட்சையில் 3 இலட்சத்து 18 ஆயிரம் 416 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டப்ளியூ. எம்.என்.ஜே.புஸ்பகுமார கூறினார்.

தமிழ்மொழி மூலம் 77 ஆயிரத்து 926 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளதுடன், சிங்கள மொழி மூலம் 2 இலட்சத்து 40 ஆயிரத்து 490 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். 2 ஆயிரத்து 83 பரீட்சை நிலையங்களில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேருந்தில் கைகலப்பு பெண் பயணிக்கு காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சாவகச்சேரி பயணிகள் போக்குவரத்து பஸ் வண்டியினுள் இனம்தெரியாத சிலர் பஸ் வண்டியின் நடத்துநர் மீது நடாத்திய வெற்றுப்போத்தல் தாக்குதல் குறிதவறி பெண் பயணி ஒருவரின் கையைப் பதம் பார்த்தது.

நேற்று நண்பகல் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் நல்லூர்த் தேர்த்திருவிழாவை முடித்து விட்டு சாவகச்சேரி திரும் பிக்கொண்டிருந்த என்.பாமினி (வயது-25) என்ற இளம் பெண்ணின் ஒரு கையே பாதிக்கப்பட்டுள்ளது.

இவர் உடனடியாக நேற்றுப் பிற்பகல் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பயணிகள் பஸ் வண்டி நடத்துநருக்கும் அதில் பயணம் செய்த சிலருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்தே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளதாகத் தெரிய வருகின்றது.

மேலும் யாழ்.நகரப் பகுதியில் நடைபெற்ற மற்றுமொரு சம்பவத்தில் காயமடைந்த வங்கி ஊழியரான பெண் ஒருவரும் நேற்றுப் பிற்பகல் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## இன்னும் திருத்தப்படாத அம்மன் வீதி

பருத்தித்துறை அம்மன் பாடசாலைக்கும் வைத்தியசாலைக்கும் இடைப்பட்ட சுமார் 2 கிலோ மீற்றர் தூரமான வீதி இன்னும் திருத்தப்படாது உள்ளதாக அவ் வீதியில் பயணிப்பவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குண்டும் குழியுமாகவுள்ள வீதியில் பயணம் செய்யும் வாகனங்கள் சேதமடைவதாகவும், இதனால் பாரிய நட்டம் ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டுவதுடன், இவ்வீதியினைத் துரித கதியில் திருத்தியமைக்குமாறு பொது மக்கள் கோருகின்றனர்.

# போலி நாணயத்தாளுடன் மட்டக்களப்பில் ஒருவர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வெல்லாவெளி பிரதேசத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் போலி நாணயத்தாள்களை வைப்பிலிடச் சென்ற ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை வெல்லா வெளி மக்கள் வங்கிக் கிளைக்கு சென்ற குறித்த நபரிடம் போலி நாணயத் தாள்கள் இருப்பதை கண்டுபிடித்த வங்கி முகாமையாளர், பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து, அவ்விடத்திற்கு விரைந்த வெல்லாவெளி பொலிஸார், சந்தேகநபரை கைது செய்ததோடு அவரிடம் இருந்து 2 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் இரண்டையும், ஆறு ஆயிரம் ரூபா தாள்களையும் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்ட திகாரியைச் சேர்ந்த 35 வயதான சந்தேகநபர் நேற்றுக் களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டார்.


## பணிநிலை வெற்றிடங்கள்

**பின்வரும் பணிகளுக்கு தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

- **பக்க வடிவமைப்பாளர்**
  (வேகமாக வடிவமைக்கத் தெரிந்தவரும், முன்னனுபவம் உடையவரும் விரும்பத்தக்கது)
- **ஒப்புநோக்குநர்**
  (முன்னனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுயவிபரத்தினை இல.373, பிரதான வீதி, தினமுரசு என்னும் முகவரிக்கு எதிர்வரும் 24.08.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்கவும்.

**ஆளணி முகாமையாளர்,**
**தினமுரசு,**
**இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஆகஸ்ட் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.